கல்கி



ALKI பிப்ரவரி 10, 1952

4 அணா



அதிக
மலர்ச்சியைத்தருவது . . .
ஹிமாலயா
புக்கே
டாய்லட், டால்கம் பௌடர்களின்
இனிமையான பரிமளம்
Himalaya Bouquet
Himalaya Bouquet
உங்கள் அழகு பராமரிப்புக்கு வாசனை யுடைய ஹிமாலயா புக்கே பௌடர் கள் மிகவும் சிறந்தவை. அவை பட்டு போல் மிருதுவாக இருக்கின்றன. உங்கள் சருமத்திற்கு சாந்தியை அளிக்கின்றன. அவைகளின் நீடித்திருக்கும் வெகு நேர்த்தி யான பரிமளம் உங்களை மலர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது.
நேர்த்தியான
இரண்டு இராஸ்மிக் தயாரிப்புகள்
HBP. 4-X30 TM
இராஸ்மிக் கம். லிட்., லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தவை

கல்கி பொருளடக்கம்

மலர் 11 | 1952 பிப்ரவரி 10 | கர ஆ
இதழ் 28 | | தை 28

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


பிப்ரவரி

9உ முதல்

காஸினோ—பிரபாத்

ஸரஸ்வதி

மற்றும் எல்லா முக்கிய இடங்களிலும்



தாய் உள்ளம்



டைரக்ஷன்
ராம்நாத்

நாராயணன் கம்பெனி தயாரிப்பு

ஸ்டுடியோ.. வாஹினி...

கல்கி

மலர் 11 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 28

நெல்களஞ்சியத்தில் தீ!

தஞ்சாவூர் ஜில்லா தமிழ் நாட்டின் நெல் களஞ்சியம். அந்த ஜில்லாவில் விளையும் உபரி நெல்லைக் கொண்டுதான் தமிழ் நாட்டில் மற்ற ஜில்லாக்களின் பற்றாக் குறை ஓரளவு நிவர்த்தி செய்யப்படுகிறது. அத்தகைய நெல் களஞ்சியத்தில் தீப் பிடித்துக் கொண்டிருக்கிறது. தீ பரவாமல் தடுக்க வேண்டும். பரவிய தீயை அணைக்க வேண்டும். தீயை அணைத்து நெல் களஞ்சியத்தைக் காப்பாற்ற வேண்டும். இது தமிழ் மக்கள் அனைவரும், — ஏன் இந்திய தேசமே, உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டிய காரியம்.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இரண்டு பிரமுகர்கள் சென்ற வாரத்தில் ஏறக் குறைய ஒரே சமயத்தில் ஒரு முக்கியமான கருத்தை வெளியிட்டார்கள். ஆந்திர தேசத்தில் ஸ்ரீ சஞ்சீவி ரெட்டியைத் தோற்கடித்த ஸ்ரீ நாகி ரெட்டியார்: "எங்களுக்கு வோட்டு அளித்தவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் பேரில் உள்ள அபிமானத்தினால் வோட்டுக் கொடுக்கவில்லை; காங்கிரஸ் பேரில் உள்ள வெறுப்பினால் கொடுத்தார்கள்!" என்று சொன்னார்.

திருச்சி கம்யூனிஸ்ட் தலைவர் ஸ்ரீ கலியாணசுந்தரம் தஞ்சாவூரில் வெற்றி விழா நடத்திய சமயத்தில் அதே விதமாகப் பேசினார். "கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டங்களைச் சரியாகத் தெரிந்து கொண்டு எங்களுக்கு மக்கள் வோட்டு அளித்ததாக நான் கருதவில்லை; காங்கிரஸ் பேரில் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் வெறுப்பினாலேயே எங்கள் கட்சிக்கு இவ்வளவு வோட்டுகள் கிடைத்தன!" என்று கூறினார்.

சென்னை மாகாணத்தில் காங்கிரசுக்கு ஏற்பட்ட தோல்வி காங்கிரஸ் வாதிகளுக்குப் பெரும் வியப்பை அளித்திருக்கிறது. அதைக் காட்டிலும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஏற்பட்ட வெற்றி கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கு அதிக வியப்பை அளித்திருக்கிறது.

"ஆச்சரியத்திலும் ஆச்சரியம்!" "வியப்புக்கு மேல் வியப்பு!" என்னும் சொற்றொடர்களை உபயோகிப்பதற்கு இதைக் காட்டிலும் வாய்ப்பான சந்தர்ப்பம் வேறு எங்கே கிடைக்கப் போகிறது?

மேற்கூறிய ஆச்சரிய கோபுரத்தின் உச்சி சிகரத்தை இந்தப் பொதுத் தேர்தலில் தஞ்சாவூர் ஜில்லாவிலே கண்டோம்.

தஞ்சை ஜில்லா தமிழ் நாட்டின் நெற் களஞ்சியமா யிருந்தது போல் தேசிய உணர்ச்சிக் களஞ்சியமாகவும் இருந்து வந்தது. வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரஹப் போராட்டம் நடந்தபோது தஞ்சை ஜில்லாவில் பொங்கிப் பெருகிய தேச பக்திப் பிரவாகத்தை இப்போது நினைத்தாலும் உடல் சிலிர்க்கும். சென்ற முப்பது ஆண்டுகளில் அந்த ஜில்லாவில் நடந்த முக்கியமான தேர்தல்களில் தேசிய வாதிகளும் காங்கிரஸ் வாதிகளும் 100க்கு 100 பங்கு வெற்றியடைந்து வந்தார்கள்.


அத்தகைய ஜில்லாவில் இம்முறை நடந்த தேர்தலில் சென்னைச் சட்டசபைக் குரிய 19 ஸ்தானங்களில் 8 ஸ்தானங்கள் தான் காங்கிரசுக்குக் கிடைத்தன. பதினொரு காங்கிரஸ் அபேட்சகர்கள் தோல்வியடைந்தார்கள்.

ரயில்வே உதவி மந்திரியும் தியாக சீலரும் அறிவாற்றலில் சிறந்தவருமான ஸ்ரீ கே. சந்தானம் பார்லிமெண்ட் தேர்தலில் தோற்றுப் போனார்!

அந்த ஜில்லாவுடன் எத்தகைய சம்பந்தமும் இல்லாத கம்யூனிஸ்ட் அபேட்சகர் ஸ்ரீ அனந்த நம்பியார் வெற்றி பெற்றார்.

தஞ்சை ஜில்லாவில் இத்தகைய அதிசயமான மாறுதலை உண்டு பண்ணிய புண்ணியவான்கள் யார் என்பதை நாம் கண்டு பிடிக்க வேண்டாமா? கண்டு பிடித்து அவர்கள் இகத்திலும் பரத்திலும் நன்றாயிருக்க வேண்டும் என்று வாழ்த்த வேண்டாமா?

நடக்கப்போவது என்ன ?



மேற்படி புண்ணிய கைங்கரியத்தில் மாகாண காங்கிரஸ் மந்திரிகள், மாகாண காங்கிரஸ் தலைவர்கள், ஜில்லா காங்கிரஸ் பிரமுகர்கள், ஜில்லா சர்க்கார் அதிகாரிகள்—எல்லாருக்கும் பங்கு உண்டு. கடைசியாக, சட்டசபைக்கு அபேட்சகர்களைப் பொறுக்கி எடுத்த தேர்தல் கமிட்டி மகானுபாவர்களுக்கும் அதில் கணிசமான பங்கு உண்டு.

மாகாண ரீதியான காரணங்கள் எல்லா ஜில்லாக்களுக்கும் பொதுவானபடியால் அவற்றை இங்கு விட்டு விடுவோம். ஜில்லாவின் விசேஷ காரணங்களை மட்டும் பார்க்கலாம்.

* * *

கட்டாயக் கொள் முதல் :— சென்ற சில ஆண்டுகளாகத் தஞ்சை ஜில்லாவில் கட்டாயக் கொள்முதல் முறை கையாளப்பட்டு வந்திருக்கிறது. அதாவது விவசாயிகளுக்கு அவசியமானது என்று அதிகாரிகள் நிர்ணயித்ததற்கு உபரியாக உள்ள நெல் குறிப்பிட்ட விலைக்கு அதிகாரிகளால் எடுத்துக்கொள்ளப்பட்டு வந்தது. இது மிகவும் அவசியமான காரியம் என்பதைப்பற்றிச் சந்தேகம் இல்லை. ஏனெனில், தஞ்சை ஜில்லாவில் விளையும் நெல்லில் அந்த ஜில்லாவின் தேவைக்கதிகமான உபரி நெல்லைக் கொண்டுதான் தமிழ் நாட்டின் மற்றப் பற்றாக்குறை ஜில்லாக்களுக்கு ஆறு அவுன்ஸ் விதமாவது கொடுக்க முடிந்தது. ஆதலின், உபரி நெல் கொள்முதல் அவசியமான காரியந் தான். ஆனால் அதற்கு ஜில்லா அதிகாரிகள் கையாண்ட முறைகள் மிகக் கொடுமையானவை. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் கிராம வாசிகள் என்றும் அநுபவியாத கொடுமைகளைக் காங்கிரஸ் ஆட்சியின் கீழ் அநுபவித்தார்கள். இதனால் ஜனங்களிடையே ஏற்பட்டு வந்த ஆத்திரத்தைக் குறித்து "நாதிர் ஷா பேசுகிறார்!" "நீலன் சிலை சிரிக்கிறது!" என்ற தலைப்புகளின் கீழ் இந்தப் பத்திரிகையில் எழுதியிருந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். ஒரு தடவை இரண்டு தடவை அல்ல, — பல தடவை பலரும் எடுத்துக் காட்டினார்கள். எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காக முடிந்தது.

இது சம்பந்தமாகப் பழைய உதாரணம் ஒன்றை நேயர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

ராஜாஜி சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரி பதவி வகித்த காலத்தில் முதன் முதலாக விற்பனை வரியைக் கொண்டு வந்தார். மதுவிலக்கினால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை ஈடு செய்வதற்காக அவர் விற்பனை வரி போடத் தீர்மானித்தார். இதைக் குறித்து வியாபாரிகள் கோபமடைந்தார்கள். கொத்தவால்சாவடி வர்த்தகர்கள் தங்கள் கண்டனத்தைத் தெரிவிப்பதற்காக ஒரு நாள் கடை யடைப்புச் செய்ய முடிவு செய்தார்கள். ராஜாஜி கொத்தவால் சாவடியிலேயே சென்னைக் காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவில் பொதுக் கூட்டம் கூட்டச் செய்தார். அக் கூட்டத்துக்குச் சென்று விற்பனை வரி போட நேர்ந்ததின் அவசியத்தை விளக்கிக் கூறினார். "ஏழை மக்களை மது அரக்கனிடமிருந்து காப்பாற்றுவதற்காக நீங்கள் மனமுவந்து இந்த வரியைக் கொடுக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். கூட்டத்தின் முடிவில் "விற்பனை வரி போடச் சாதகமானவர்கள் கையைத் தூக்குங்கள்!" என்று கேட்டார். அங்கே கூடியிருந்த கொத்தவால் சாவடி வியாபாரிகள் அத்தனை பேரும் ஏகமனதாகக் கையைத் தூக்கினார்கள். "மகாத்மா காந்திக்கு ஜே!" என்ற கோஷத்துடன் வியாபாரிகள் விற்பனை வரியை ஆமோதித்தார்கள்.

இதே முறையை நெல் கொள்முதல் விஷயத்தில் இன்னும் அதிக வெற்றிகரமாக உபயோகித்திருக்கலாம். தஞ்சை ஜில்லா விவசாயிகளிடம் "உங்கள் ஜில்லாவில் காவேரி பாய்கிறது. மேட்டூர் அணை உங்களுக்கு உதவுகிறது. மற்ற ஜில்லாக்களில் மக்கள் பஞ்சத்தினால் தவிக்கிறார்கள். உங்களுடைய தேவையைக் குறைத்துக் கொண்டு மற்ற ஜில்லாக்காரர்களைக் காப்பாற்றுங்கள்" என்ற முறையில் வேண்டிக் கொண்டிருந்தால், கொள் முதல் எவ்வளவோ வெற்றிகரமாக நடந்திருக்கும்.

இந்த வேண்டுகோள் முறையைக் கையாளுவதற்குப் பதிலாக ஜில்லா அதிகாரிகள் யதேச்சாதிகார முறையையே முழுதும் நம்பியிருந்தார்கள்.

ஜில்லாவின் காங்கிரஸ் ஸ்தாபனம் இந்தத் தொண்டில் பரிபூரணமாக ஈடுபட்டிருக்க வேண்டும். ஆயிரக்கணக்கான காங்கிரஸ் தொண்டர்கள் உபரி நெல் கொள்முதல் திருப்பணியை மேற்கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் ஜில்லா காங்கிரஸ் ஸ்தாபனம் ஸ்தம்பித்துப் போயிருந்தது. காங்கிரஸ் தொண்டர்களை இந்தத் திருப்பணியில் ஏவுவோரும் இல்லை; அவர்களுக்கு உற்சாகம் அளிப்போருமில்லை.

தஞ்சை ஜில்லா நடுத்தர விவசாயிகளின் காங்கிரஸ் அபிமானத்தைக் கட்டாயக் கொள் முதல் முறை அடியோடு மாற்றிக் காங்கிரஸ் துவேஷமாகவே செய்து விட்டது.

* * *

கட்டுத் தண்டனை :—தஞ்சை ஜில்லாவிலுள்ள பண்ணை ஆள்முறை காலங்கடந்த முறையாகும். பண்ணையாட்கள் மிகப் பெரும்பாலும் ஹரிஜனங்கள். தஞ்சை ஜில்லா ஜனத்தொகையில் 100 க்கு 20 பேர் ஹரிஜனங்கள். நாடு சுதந்திரம் அடைந்தபோது இவர்களிடையிலும் விழிப்பு ஏற்பட்டது. அதைக் காங்கிரஸ் தலைவர்கள் நல்ல வழியில் திருப்பத் தவறி விட்டனர். குழப்பக்காரர்கள் ஹரிஜனங்களிடையே செல்வாக்குப் பெற்றார்கள். அவர்களைப் பலாத்காரத்துக்குத் தூண்டினார்கள். பலாத்காரத்தை நிறுத்துவதற்கு மலபார் ஸ்பெஷல் போலீஸார் வந்தனர். பழைய பிரிட்டிஷ் ஆட்சியில் கையாண்ட ஆயுதங்களையே கையாண்டனர். கலகத் தலைவர்கள் ஒரு சிலரைப் போலீஸார் பிடிக்க முடியவில்லை. அதற்குப் பதிலாகச் சேரிகளில் வாழ்ந்த ஹரிஜனங்களுக்குக் கூட்டுத் தண்டனை விதித்தார்கள். குற்றம் செய்தவர் சிலர்; தண்டனைக்கு ஆளானவர்கள் அநேகர். அடக்கு முறையின் இயற்கை விளைவு தோன்றியது. "சுயராஜ்யம் என்பது பெரிய மனிதர்களுக்கும் மிராசுதார்களுக்கும்தான்; நமக்கு இல்லை" என்று ஹரிஜனங்கள் எண்ணத் தொடங்கினார்கள். கம்யூனிஸ்ட் பிரசாரத்துக்குச் சரியான சூழ்நிலை ஏற்பட்டது.

இங்கேயும் காங்கிரஸ் ஸ்தாபனம் உதவி செய்திருக்கலாம். காங்கிரஸினால் ஹரிஜனங்கள் அடைந்த நன்மைகளை எடுத்துச் சொல்லிக் குழப்பக்காரர்களுக்கு இடந் தராமல் செய்திருக்கலாம். மலபார் போலீஸ் அட்டூழியங்களைத் தடுத்திருக்கலாம்; அல்லது பரிகாரமாவது தேடியிருக்கலாம்.

ஜில்லா காங்கிரஸ் ஸ்தாபனம் ஸ்தம்பித்துப் போயிருந்தபடியால் இப்படியெல்லாம் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஜனத்தொகையில் 100-க்கு 20 சத விகிதமான ஹரிஜனங்களைக் கம்யூனிஸ்டு பிரசாரத்துக்கே ஒப்படைத்து விட்டார்கள்.

தேர்தல் பிரசாரத்துக்குப் போனபோது காங்கிரஸ் வாதிகள் யாரும் ஹரிஜனங்கள் வசிக்கும் பகுதிகளுக்குள் நுழையவே முடியவில்லை!

பெரிய மனிதர்கள் பூசல்:—தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள பெரிய மனிதர்களும் பெரிய மிராசுதார்களும் காங்கிரஸ் வாதிகள். இது நல்லதுதான். ஆனால் இவர்கள் தங்களுடைய பரம்பரைப் பூசல்களையும் புதிய பதவிப் போட்டிச் சண்டைகளையும் காங்கிரஸ் ஸ்தாபனத்துக்குள் கொண்டு வந்து விட்டார்கள். ஜில்லா காங்கிரஸ் கமிட்டியைக் கைப்பற்றுவதற்கு இவர்கள் நடத்திய போட்டி முயற்சியில் ஜில்லா கமிட்டியே ஏற்படாமல் போய் விட்டது. ஜில்லா கமிட்டி ஏற்படாத காரணத்தினால் ஜில்லா முழுவதிலுமே காங்கிரஸ் ஸ்தாபனங்கள் இயங்காமற் போயின.

மேற்படி பரிதாப நிலைமையைக் குறித்தும் இந்தப் பத்திரிகையில் எழுதி யிருந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். ஆனால் ஜில்லாத் தலைவர்களும் கவனிக்கவில்லை; மாகாண காங்கிரஸ் நிர்வாகிகளும் கவனிக்கவில்லை. "நீங்கள் ஒற்றுமைப் பட்டு வேலை செய்தால் செய்யுங்கள்; இல்லா விட்டால் விலகிக் கொண்டு மற்றவர்களுக்கு இடம் கொடுங்கள்!" என்று மாகாண நிர்வாகிகள் கண்டிப்பாய்ச் சொல்லி யிருக்கவேண்டும். அதற்கு மாறாக, "இரண்டு கோஷ்டிகள் இருந்தால்தான் நம்முடைய ஆக்ஞா சக்கரம் ஓடும்!" என்ற நம்பிக்கையில் மாகாண நிர்வாகிகள் இருந்து விட்டார்கள். ஆகவே, ஜில்லா காங்கிரஸ் ஸ்தாபனமே ஸ்தம்பித்துப் போய்விட்டது.

தேர்தல் கமிட்டியின் தோல்வி:—கடைசியாக, அபேட்சகர்களைப் பொறுக்கி எடுத்த தேர்தல் கமிட்டியார் தங்கள் தொண்டையும் செய்தார்கள். தாங்கள் பொறுக்கி எடுத்துச் சிபார்சு செய்யும் அபேட்சகர்கள் பொது ஜனங்களுடன் தொடர்பு கொண்டவர்களா, பொதுஜன அபிமானத்தைப் பெறக் கூடியவர்களா, காங்கிரஸுக்கு வெற்றியும் நல்ல பெயரும் அளிக்கக் கூடியவர்களா என்றெல்லாம் அவர்கள் பார்க்கவில்லை. "ஸ்ரீ நாடிமுத்துப் பிள்ளைக்காக இவரைப் போடலாம்; ஸ்ரீ வாண்டையாருக்காக அவரைப் போடலாம்; இரண்டு பேருக்கும் பொதுவாக இன்னொருவரைப் போடலாம்" என்று கணக்குப் பார்த்து அபேட்சகர்களைப் பொறுக்கினார்கள்.

சில அபேட்சகர்களைப் பற்றிக் குறிப்பாக எச்சரிக்கை செய்யப்பட்டதையும் தேர்தல் கமிட்டியார் பொருட்படுத்தவில்லை.

உதாரணமாக, "மாயவரம் தொகுதிக்கு ஸ்ரீ ரெங்கசாமி ரெட்டியாரைத் தவிர வேறு யாரையாவது போடுங்கள்" என்று, அந்தத் தொகுதியைப்பற்றி அறிந்தவர்கள் எவ்வளவோ சொன்னார்கள். ஸ்ரீ ரெங்கசாமி ரெட்டியார் மீது குற்றம் எதுவும் இல்லை. ஆனால் அவர் சென்ற ஐந்து வருஷத்தில் சட்ட சபையிலோ தொகுதியிலோ எத்தகைய தொண்டும் செய்யவில்லையென்ற குறை மாயவரம் தொகுதி ஜனங்களிடையே இருந்தது. இதைச் சொல்லியும் கேளாமல் ஸ்ரீ ரெட்டியாரையே போட்டார்கள். அதனால் காங்கிரஸுக்கும் நன்மை செய்யவில்லை; தஞ்சை ஜில்லாவுக்கும் நன்மை செய்யவில்லை; ஸ்ரீ ரெங்கசாமி ரெட்டியாருக்குமே நன்மை செய்யவில்லை. எதிரி அபேட்சகர் இரண்டு மடங்குக்கு மேல் அதிக வோட்டுக்களைப் பெற்று ஜெயித்தார்!

* * *

இவ்வாறு பலரும் செய்த கைங்கரியத்தினால் அடியோடு கெட்டுப் போயிருந்த சூழ்நிலையில் பாவம், ஸ்ரீ சந்தானம் வந்து சேர்ந்தார். அவர் நின்ற பார்லிமெண்டு தொகுதியிலேதான் மேற்கூறிய காரணங்களினால் மக்களின் நிலை அடியோடு மாறி யிருந்தது. அதை மீண்டும் மாற்றுவதற்கு ஸ்ரீ சந்தானம் அரும்பாடு பட்டார். பூசலிட்டுக் கொண்டிருந்த பெரிய மனிதர்களிடையே ஒற்றுமை ஏற்படுத்த முயன்றார். பழைய காங்கிரஸ் தொண்டர்களைத் தேடிப் பிடித்து அவர்களுக்கு ஊக்கம் அளிக்க முயன்றார். ஊர் ஊராகச் சென்று பொதுக் கூட்டங்கள் கூட்டிப் பேசினார்; தனித் தனியாகவும் பேசினார்; துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டார். பொது மக்களின் மனதில் படிந்து வேரூன்றி யிருந்த கோபத்தைப் போக்கப் பாடுபட்டார்.

அவருடைய பிரயத்தனங்கள் அவருக்குத் தேர்தலில் வெற்றி அளிக்கவில்லை; ஆனால் மகத்தான பலனை அளித்தது என்பதில் ஐயமில்லை.

அந்தத் தொகுதியில் ஸ்ரீ க. சந்தானத்துக்கு மொத்தம் ஒரு லட்சத்து எண்பத்தொன்பதினாயிரத்து அறநூற்று மூன்று வோட்டுக்கள் கிடைத்தன. இவ்வளவு பேர் காங்கிரஸின் பேரில் தங்களுக்கிருந்த கோபத்தை யெல்லாம் மறந்து, ஸ்ரீ க. சந்தானத்துக்கு வோட்டு அளித்தது குறித்து நாம் மகிழ்ச்சி யடைகிறோம். அந்தப் பிரதேசத்தில் குடிகொண்டிருந்த சூழ்நிலையில் அவ்வளவு பேர் முன்வந்து காங்கிரஸுக்கு வோட்டுச் செய்ததைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

எவ்வளவு தவறுகள் நேர்ந்திருந்த போதிலும் அவற்றை யெல்லாம் மறந்து தமிழ் மக்கள் கடமையை ஆற்றக் கூடியவர்கள் என்பதை மேற்படி ஒரு லட்சத்து எண்பத்தொன்பதினாயிரத்து அறநூற்று மூன்று பேர் நிரூபித்தவர்களாகிறார்கள்.

காங்கிரஸ் வாதிகள் ஊக்கமும் ஒற்றுமையும் கொண்டு காங்கிரஸ் ஸ்தாபனங்களை மறுபடியும் உயிர்ப்பித்து நல்ல முறையில் வேலை செய்தால் தஞ்சாவூரை மீண்டும் காங்கிரஸ் ஜில்லாவாக்குதல் சாத்தியமே என்பதை ஸ்ரீ க. சந்தானத்துக்கு வோட்டுக் கொடுத்தவர்கள் நிரூபித்திருக்கிறார்கள்.

* * *

"நெல் களஞ்சியத்தில் தீ" என்று நாம் சொல்லும்போது காங்கிரஸின் தோல்வியையோ கம்யூனிஸ்ட் வெற்றியையோ நாம் குறிப்பிடவில்லை. அவற்றினால் விளையக்கூடிய பலாபலன்களைத்தான் குறிப்பிடுகிறோம்.

தஞ்சாவூர்க் கூட்டத்தில் பேசிய கம்யூனிஸ்டு பிரமுகர்களும் இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "தேர்தல் முடிவுகளினால் அறுவடை பாதிக்கப் படலாம் என்று தோன்றுகிறது. அதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல" என்று கையைக் கழுவி யிருக்கிறார்கள்.

இந்த வருஷம் அறுவடை பாதிக்கப்பட்டால் கொள்முதலும் பாதிக்கப்படும்; அடுத்த வருஷம் சாகுபடியும் பாதிக்கப்படும். அதனால் தமிழ் நாட்டில் ஏற்படக்கூடிய விபரீதங்கள் அளவற்றவை யாகும்.

தஞ்சை ஜில்லாவிலுள்ள நன்செய் நிலங்கள் அந்த ஜில்லாக்காரர்களுக்கு மட்டும் சொந்தமானவை யல்ல. காவேரி ஆறு தஞ்சை ஜில்லாக்காரர்களின் உடைமையல்ல. மேட்டூர் அணைக்கட்டும் அவர்களுடைய தனி உடைமை யல்ல.

தஞ்சை ஜில்லா நன்செய் நிலங்களும் நீர்ப்பாசன சாதனங்களும் நெல் சாகுபடியும் தமிழ் நாட்டின் பொது உடைமைகள். அவற்றைப் பாதுகாப்பதில் தமிழ் மக்கள் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும். இந்திய அரசாங்கமும் காங்கிரஸ் மேலிடமும் கவனம் செலுத்த வேண்டும்.

நல்ல அறிகுறிகள்

தமிழ் நாட்டில் நடந்த பொதுத் தேர்தலில் பல முடிவுகள் தேச பக்தர்களைத் திகைக்கச் செய்து விட்டன. ஆயினும் அம்முடிவுகளை நன்கு ஆராய்ந்து பார்த்தால் சில நல்ல அறிகுறிகளும் இருக்கத்தான் செய்கின்றன.

சைதாப்பேட்டை தொகுதியில் ஸ்ரீ என். ராமகிருஷ்ண ஐயர், ஆடுதுறையில் ஸ்ரீ ஜி. நாராயணசாமி நாயுடு, திண்டுக்கல்லில் எம். எஸ். முனுசாமி, திருநெல்வேலியில் ஸ்ரீ எஸ். என். சோமயாஜுலு,- ஆகியவர்கள் காங்கிரஸ் அபேட்சகர்களாக நின்று அடைந்த வெற்றிகளையே 'நல்ல அறிகுறிகள்' என்று குறிப்பிடுகிறோம்.

ஆதம்பாக்கம் ஸ்ரீ என். ராமகிருஷ்ண ஐயர் காந்தி மகாத்மாவின் நிர்மாணத் திட்டங்களில் பூரணமாக ஈடுபட்டு நெடுங் காலமாகத் தொண்டு செய்து வந்தவர். தற்சமயம் வேறு பல தொண்டுகளோடு செங்கற்பட்டு குஷ்டரோக வைத்தியசாலையின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று அருமையான தொண்டு செய்து வருகிறார். மகாத்மாவின் மனதுக்குகந்த தொண்டுகளில் குஷ்டரோகிகளுக்குச் செய்யும் தொண்டு தலை சிறந்தது. அத்தகைய திருத் தொண்டில் ஈடுபடுவதற்கு யாருமே சிறிது தயங்குவார்கள். அப்படிப்பட்ட தொண்டில் ஈடுபட்டவர் ஆதம்பாக்கம் ஸ்ரீ ராமகிருஷ்ண ஐயர்.

செங்கற்பட்டு ஜில்லாவில் இந்தத் தேர்தலில் சாதி மனப்பான்மை தலைதூக்கி நின்றது. இதனால் பல காங்கிரஸ் அபேட்சகர்கள் தோல்வியுற்றனர். ஆயினும் ஸ்ரீ என். ராமகிருஷ்ண ஐயர் வெற்றியடைந்தார். இதிலிருந்து, உண்மையான தொண்டை மதித்துப் பாராட்டும் பண்பு தமிழ் மக்களிடையே அடியோடு அற்றுப் போகவில்லை என்பது வெளியாயிற்று.

ஆடுதுறைத் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராக நின்ற ஸ்ரீ ஜி. நாராயணசாமி நாயுடு எத்தனையோ ஏற்றத் தாழ்வுகளுக் கிடையில் காங்கிரஸை விடாமல் பிடித்துக் கொண்டு வந்திருப்பவர். பணவசதி இல்லாதவர். தஞ்சாவூர்ப் பெரிய மிராசுதார்களில் ஒருவரான ஸ்ரீ சாமியப்ப முதலியாரை எதிர்த்து அவர் எப்படி வெற்றியடையப் போகிறார் என்று பலரும் சந்தேகித்தார்கள். பணவசதி இல்லாதவர் என்ற காரணத்தினால் அவரைக் காங்கிரஸ் அபேட்சகராகப் பொறுக்குவதில் தடைகள் ஏற்பட்டன. ஆயினும் அவர் எவ்வித வசதியும் இல்லாமல் நின்று தம்முடைய சொந்த உழைப்பினால் மகத்தான வெற்றியடைந்தார். பலவித வசதிகள் உள்ளவர்கள் தோல்வியடைந்திருக்கும்போது ஸ்ரீ ஜி. நாராயணசாமி நாயுடு அடைந்த பெருமித வெற்றி, முதலில் ஆட்சேபித்தவர்களைத் திகைக்கச் செய்திருக்கும். உண்மை உழைப்புக்கு மக்களிடையே ஆதரவு உண்டு என்பது இங்கும் நிரூபிக்கப்பட்டது.

திண்டுக்கல் ஸ்ரீ எம். எஸ். முனிசாமியின் வெற்றி மிகவும் பாராட்டுதற்குரியது. அவருடைய தொகுதியைச் சுற்றிலும் பழனி, வேடசந்தூர், ஒட்டன் சத்திரம் ஆகிய மூன்று தொகுதிகளில் காங்கிரஸ் அபேட்சகர்கள் தோற்றுப் போனார்கள். ஸ்ரீ முனுசாமி வெற்றி பெற்றார். அவர் எளியவர்; எளிய வாழ்க்கை நடத்துகிறவர். அவருடைய சுயநல மற்ற தொண்டை மதித்துத் திண்டுக்கல் வாசிகள் அவருக்கு ஒரு பணமுடிப்பை அளித்தார்கள். அதை அவர் இரண்டு நல்ல கைங்கரியங்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விட்டார். ஸ்ரீ முனுசாமியை அபேட்சகராய்ப் போடுவது பற்றியும் தடைகள் எழுந்தன. மாகாண தேர்தல் கமிட்டியின் வேறொரு சிபார்சை ரத்து செய்து விட்டு மத்திய தேர்தல் கமிட்டியார் அவருடைய அபேட்சையை உறுதிப்படுத்தினார்கள். அவரும் பெரிய கைகளை எதிர்த்து நின்று வெற்றியடைந்து, சுயநலமற்ற சேவைக்கு நாட்டில் மதிப்பு உண்டு என்பதை நிலைநாட்டி யிருக்கிறார்.

திருநெல்வேலி தொகுதிக்கு யார் யாரையோ அபேட்சகர்களாகத் தேடினார்கள். கடைசி நிமிஷத்திலேதான் ஸ்ரீ எஸ். என். சோமயாஜுலு அபேட்சகராக அங்கீகரிக்கப்பட்டார். வேலை செய்வதற்கு அவருக்கு அவகாசம்கூட இருக்கவில்லை. திருநெல்வேலியில் சாதி மனப்பான்மை அதிகம் என்ற பேச்சு வேறு இருந்தது. அவரிடமும் பண வசதி கிடையாது. இத்தகைய தடைகளையெல்லாம் ஸ்ரீ எஸ். என். சோமயாஜுலு வென்றார். சென்ற இருபது வருஷங்களுக்கு மேலாகத் திருநெல்வேலி ஜில்லாவில் அவர் செய்து வந்திருக்கும் ஒப்பற்ற தேசத் தொண்டுதான் அவருக்குக் கைகொடுத்து உதவி செய்தது.

மேற்கூறிய நான்கு வெற்றிகளும் மிக்க நல்ல அறிகுறிகள் என்பதில் ஐயமில்லை. தமிழ் நாட்டின் நன்மையிலும் முன்னேற்றத்திலும் கவலை கொண்டவர்களுக்கெல்லாம் அவை ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் அறிகுறிகள்.

* * *

"ஷபாஷ்! சென்னை!" என்ற தலைப்புடன் நாம் எழுதியபோது ஸ்ரீ கே. வெங்கடசாமி நாயுடுவின் வெற்றிச் செய்தி கிட்டியிருக்கவில்லை. சென்னை நகருக்குப் பெருமை தந்த வெற்றிகளுடன் அதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

வெளி ஜில்லாக்களில் கோயமுத்தூர் ஜில்லாவும் திருநெல்வேலி ஜில்லாவும் காங்கிரஸைப் பெரும்பான்மையாக ஆதரித்திருக்கின்றன. காங்கிரஸ் ஸ்தாபனத்தில் உள் சச்சரவுகள் இல்லாத ஜில்லாவுக்கு உதாரணம் வேண்டுமானால் கோயமுத்தூர் ஜில்லாவைத்தான் சொல்ல வேண்டும்.

கோயமுத்தூர் நகரத்துக்குச் சென்ற முறை பிரதிநிதியாக இருந்த ஸ்ரீ கே. சுப்பிரமணியம் ('சுப்ரி') அவர்களை இம்முறை எவ்வித நியாயமான காரணமும் இன்றி அங்கிருந்து எடுத்துச் சேலம் ஜில்லா தர்மபுரியில் கொண்டு போய்த் தள்ளினார்கள். ஆயினும் அவர் அதைக் குறித்துக் கலகம் கிளப்பவும் இல்லை; முணு முணுக்கக்கூட இல்லை. கோயமுத்தூர் காங்கிரஸ் வாதிகளின் உயர்வுக்கு இது அறிகுறியாகும். ஆகையால் அங்கே காங்கிரஸ் பெரும்பான்மை ஸ்தானங்களைக் கைப்பற்றியது.

ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையும், ஸ்ரீ பாரதியாரும் பிறந்த திருநெல்வேலி ஜில்லாவும் இம்முறை காங்கிரஸுக்குக் கைகொடுத்திருக்கிறது. சென்ற வருஷத்தில் இந்த ஜில்லாவிலும் காங்கிரஸ் ஸ்தாபனப் போட்டியும் பூசலும் உண்டாயின. இவை ஏற்படாமலிருந்தால், திருநெல்வேலி நூற்றுக்கு நூறு காங்கிரஸ் மயமாக இருந்திருக்கும். சென்ற வருஷத்து ஸ்தாபனத் தகராறுகளினால் சில ஸ்தானங்கள் பறி போயின.

மொத்தத்தில், கோயமுத்தூரும் திருநெல்வேலியும் நல்ல அறிகுறிகளாகும். காங்கிரஸ் ஸ்தாபனங்கள் ஒழுங்காக வேலை செய்து வந்தால் எல்லா இடைஞ்சல்களையும் எதிரிகளின் பிரசாரங்களையும் எதிர்த்து நின்று வெற்றி பெறலாம் என்பதை நிரூபிக்கும் அறிகுறிகளாகும்.



பொன்னியின் செல்வன்

கல்கி

ஐந்தாம் அத்தியாயம்

ராக்கம்மாள்

பழுவேட்டரையரும் பார்த்திபேந்திரனும் சேர்ந்து கடற்கரை யோரமாக உலாவச் சென்ற பிறகு நந்தினி சிறிது நேரம் தனியாக இருந்தாள். கடல் அலைகளைப் பார்த்த வண்ணம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

"ராணி அம்மா!" என்ற குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

கலங்கரை விளக்கின் காவலர் தியாக விடங்கரின் மருமகள் அங்கே நின்றாள்.

"நீ யார்?" என்று நந்தினி கேட்டாள்.

"என் பெயர் ராக்கம்மாள்!"

"எங்கே வந்தாய்?"

இதற்கு மறுமொழி சொல்லாமல் ராக்கம்மாள் நந்தினியின் முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

"என்னடி பார்க்கிறாய்? என் முகத்தில் அப்படி என்ன இருக்கிறது?"

ராக்கம்மாள் திடுக்கிட்டு "மன்னிக்க வேண்டும், அம்மா! தங்களைப் பார்த்ததும் இன்னொரு முகம் எனக்கு ஞாபகம் வந்தது. ஆனால் அப்படி ஒரு நாளும் இருக்க முடியாது" என்றாள்.

"என்னடி உளறுகிறாய்! எது எப்படியிருக்க முடியாது?"

"அந்த ஊமை வெறியனுக்கும் தங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இருக்க முடியாது."

"அவள் யார் ஊமை?"

"ஈழத்தில் ஒருத்தி இருக்கிறாள்; என் மாமனுக்குப் பெரியப்பன் மகள். சில சமயம் இங்கேயும் வருவாள்."

"அவளுக்கும் எனக்கும் என்ன?"

"அதுதான் சொன்னேனே? உறவு ஒன்றும் இருக்க முடியாது என்று."

"பின் ஏன் என்னைப் பார்த்ததும் அவளுடைய ஞாபகம் வந்தது?"

"என் கண்களின் கோளாறுதான். தங்கள் முகம்......"

"அவள் முகம் மாதிரி இருந்ததா?"

''முதலில் அப்படித் தோன்றியது.''

''ராக்கம்மா! இப்போது அந்த ஊமை இங்கே இருக்கிறாளா?''

''இல்லை, அம்மா! அபூர்வமாக எப்போதாவது வருவாள்.''

''மறுபடியும் வரும்போது என்னிடம் அழைத்து வருகிறாயா?''

''எதற்காக, ராணி அம்மா!''

''என் முகம் மாதிரி முகமுடையவளைப் பார்க்க விரும்புகிறேன்.''

''அதுதான் என் கண்களின் பிரமை என்று சொன்னேனே?''

''எதனால் அப்படி நிச்சயமாய்ச் சொல்கிறாய்?''

''ராணி! தாங்கள் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர்தானே?''

''ஆமாம்; நீ?''

''நானும் பாண்டிய நாட்டாள். சற்று முன் நான் சொன்ன ஊமை சோழ நாட்டவள். ஆகையால்......''

''இருந்தாலும் பாதகமில்லை, உன்னைப் போல் இன்னும் சிலரும் அவளைப் பற்றி எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். அவளை என்னிடம் அழைத்து வருகிறாயா? அழைத்து வந்தால் உனக்கு வேண்டிய பொருள் தருவேன்.''

''ராணி! அவளை அழைத்து வருவது சுழற் காற்றை அழைத்து வருவது போலத்தான். இருந்த இடத்தில் அவள் இருக்க மாட்டாள். பிறர் சொல்லுவதையும் கேட்க மாட்டாள். வெறி பிடித்தவள் என்று சொன்னேனே?''

''சரி! நீ எதற்காக இப்போது வந்தாய்? அதையாவது சொல்!''

''ராணி! சில நாளைக்கு முன்பு இரண்டு பேர் இங்கே வந்தார்கள். தங்கள் பெயரைச் சொன்னார்கள்.''

''என் பெயரை ஏன் சொன்னார்கள்?''

''தங்கள் காரியத்துக்காக அவசரமாக இலங்கைக்குப் போக வேண்டும் என்றார்கள். என் புருஷனை அவர்களுக்குப் படகோட்ட அனுப்பி வைத்தேன்.''

''திரும்பி வந்து விட்டானா?''

''வரவில்லை; அதுதான் கவலையாயிருக்கிறது. அவருக்கு ஏதாவது நேர்ந்திருந்தால்......''

''ஒன்றும் நேராது. கவலைப்படாதே! அப்படி ஏதாவது நேரிட்டிருந்தால் உன்னை நான் பார்த்துக் கொள்கிறேன். படகிலே போன மனிதர்களைப் பற்றி ஏதாவது தெரியுமா?''

''அவர்கள் திரும்பி வந்து விட்டார்கள். சற்று முன் ஆந்தையின் குரல் கேட்டதே? அதைக் கவனிக்கவில்லையா?''

''கவனித்தேன். அதனால் என்ன?''

''அது மந்திரவாதியின் குரல் என்று தெரிந்து கொள்ள வில்லையா?''

''உனக்கு எப்படி அது தெரியும்? நீ மந்திரவாதியைச் சேர்ந்தவளா?''

''ஆமாம், ராணி!'' என்று சொல்லி விட்டு, ராக்கம்மாள் கையினால் கோலம் போட்டுக் காட்டினாள்.

நந்தினி அவளை வியப்புடன் உற்றுப் பார்த்து விட்டு, ''இப்போது அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''மந்திரவாதி தங்களைப் பார்ப்பதற்காகக் காத்திருக்கிறார்.''

''என்னை வந்து பார்ப்பதுதானே? எதற்காகக் காத்திருக்க வேண்டும்?''

''இப்போது இங்கு வந்த பல்லவனை மந்திரவாதி சந்திக்க விரும்பவில்லை. ஈழத்தில் அவனைப் பார்த்தாராம். தங்கள் கணவரைப் பார்க்கவும் விரும்பவில்லை.''

''மந்திரவாதியை நீ பார்த்தாயா?''

''சற்று முன் ஆந்தைக் குரல் கேட்டுப் போயிருந்தேன். தங்களை அழைத்து வரும்படி சொன்னார். குழகர் கோயிலுக் கருகில் ஓடைக் கரையில் ஒளிந்திருப்பதாகச் சொன்னார். வருகிறீர்களா, ராணி?''

''அது எப்படி நான் போக முடியும்?''

''குழகர் கோயிலுக்குப் போவதாகச் சொல்லி விட்டுப் போகலாம்.''

''நல்ல யோசனைதான்; வேறு துணை வேண்டாமா?''

''அவசியமில்லை; வேண்டுமானால் சேந்தன் அமுதனைத் துணைக்கு அழைத்துப் போகலாம்.''

''அவன் யார்?''

''தஞ்சாவூர் ஊமையின் மகன்!''

''சிவ சிவா! எத்தனை ஊமைகள்?''

''இந்தக் குடும்பம் சாபக்கேடு அடைந்த குடும்பம். சிலர் பிறவி ஊமைகள். சிலர் வாயிருந்தும் ஊமைகள். என் புருஷன் அப்படி. அருமையாகத்தான் பேசுவார். நானும் பேச வேண்டாம் என்று திட்டம்செய்திருக்கிறேன்.''

''இலங்கை ஊமைக்கு மக்கள் உண்டா? உனக்குத் தெரியுமா?''

''ஒருதடவை இரட்டைக் குழந்தைகள் பெற்றாளாம். குழந்தைகள் என்ன ஆயின என்று ஒருவருக்கும் தெரியவில்லை. நானும் அந்த இரகசியத்தைத் தெரிந்துகொள்ள எத்தனையோ நாளாக முயன்று வருகிறேன். இதுவரை பலிக்கவில்லை.''

''தஞ்சாவூர்க்காரன் இங்கே எதற்காக வந்திருக்கிறான்?''

"அவனுடைய மாமன் மகளை பூங்குழலியைத் தேடிக் கொண்டு வந்தான். அவள் இல்லை. அதனால் காத்திருக்கிறான்."

"அவள் எங்கே போய் விட்டாள்?"

"நானே சொல்ல வேண்டும் என்றிருந்தேன். மந்திரவாதியை என் புருஷன் படகில் ஏற்றிக் கொண்டு போனதற்கு மறுநாள் இன்னும் இரண்டு பேர் வந்தார்கள். அவர்களைப் பிடிப்பதற்காகப் பழுவூர் ஆட்களும் தொடர்ந்து வந்தார்கள். அவர்களில் ஒருவனை என் நாத்தி படகில் ஏற்றிக்கொண்டு இரவுக்கிரவே இலங்கைக்குப் போனாள்."

"அவளுக்குப் படகு விடத்தெரியுமா?"

"படகு விடுவதே அவளுக்கு வேலை. படகு விடாத நேரங்களில் கோடிக்கரைக் காடுகளில் சுற்றி அலைவாள். இந்தக் காட்டில் அவளுக்குத் தெரியாத மூலை முடுக்கு ஒன்றுமே கிடையாது."

"அவள் இன்னும் திரும்பி வரவில்லையென்றால், அதைக் கொண்டு நீ என்ன ஊகிக்கிறாய்?"

"யாரோ கடலில் முழுகிப் போய் விட்டதாக இவர்கள் அலறி அடித்துக் கொள்கிறார்களே, அது நிச்சயமல்லவென்று சொல்கிறேன். பூங்குழலி வந்த பிறகு தான் அது நிச்சயமாகும்."

"அந்தப் பெண்ணும் முழுகியிருக்கலாம் அல்லவா?"

"அவள் முழுக மாட்டாள். கடல் அவளுக்குத் தொட்டில். மேலும்..."

"மேலும், என்ன?"

"சற்று முன்னால் கலங்கரை விளக்கின் உச்சியில் ஏறிப் பார்த்துக் கொண்டிருந்தேன். வெகு தூரத்தில் ஒரு படகு வருவது போல் தோன்றியது..."

"அப்புறம்?"

"அப்புறம் அது கரைக்கு வரவில்லை."

"என்ன ஆகியிருக்கும்?"

"இங்கே கடற்கரை ஓரத்தில் கூட்டமாயிருப்பதைப் பார்த்து விட்டு வேறு சதுப்பு நிலக் கால்வாயில் படகை விட்டுக்கொண்டு போயிருக்கக் கூடும்."

"அது கூடச் சாத்தியமா?"

"பூங்குழலிக்குச் சாத்தியமில்லாதது ஒன்றுமில்லை. தஞ்சாவூர்க்காரனும் என்னுடன் உச்சிக்கு வந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கும் அப்படியே தோன்றியதாம்."

"சரி; எப்படியாவது இருக்கட்டும்; நாம் இப்பொழுது குழகர் கோவிலுக்குப் போகலாம், வா!"

"துணைக்குச் சேந்தன் அமுதனைக் கூப்பிடட்டுமா!"

"வேண்டாம்! அவன் அவனுடைய மாமன் மகளைத் தேடட்டும். நாம் அதற்குக் குறுக்கே நிற்க வேண்டாம்."

இருவரும் குழகர் கோவிலை நோக்கிப் புறப்பட்டார்கள். பூங்குழலியைப் போலவே ராக்கம்மாளுக்கும் கோடிக் கரையின் புதை சேற்றுக் குழிகளைப் பற்றி நன்கு தெரிந்திருந்தது. நந்தினிக்கு ஜாக்கிரதையாக வழிகாட்டி அழைத்துக் கொண்டு போனாள்.

இருவரும் குழகர் ஆலயத்தை அடைந்தார்கள். கோவில் பட்டர் அவர்களைக் கண்டு வியப்படைந்தார்.

"ராணி! இது என்ன இந்த நேரத்தில் தனியாக வந்தீர்கள்? பரிவாரங்கள் இல்லாமல்? முன்னாலேயே எனக்குச் சொல்லியனுப்பியிருக்கக் கூடாதா? தங்களை வரவேற்க ஆயத்தமாக இருந்திருப்பேனே?" என்றார்.

"அதற்கெல்லாம் இதுதானா சமயம், பட்டரே! சோழ நாட்டுக்குப் பெரும் விபத்து நேர்ந்திருக்கிறதே! சோழ நாட்டு மக்களின் கண்ணின் மணியான இளவரசரைக் கடல் கொண்டு விட்டதாகச் சொல்கிறார்களே? இளவரசரைக் காப்பாற்றி அருளும்படி குழகரிடம் முறையிட்டுக் கொள்வதற்காக வந்தேன்" என்றாள் நந்தினி.

"அப்படியெல்லாம் ஒன்றும் நேராது, தாயே! தாங்கள் கவலைப்பட வேண்டாம். நம் பொன்னியின் செல்வருக்குச் சமுத்திர ராஜனால் ஆபத்து ஒன்றும் நேராது!" என்றார் குருக்கள்.

"எதனால் அவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறீர்கள், பட்டரே?"

"இளவரசர் பிறந்த நட்சத்திரமும் லக்கினமும் அப்படி, அம்மா! உலகமாளப் பிறந்தவரைக் கடல் கொண்டு விடுமா? தாங்கள் வருத்தப்படாதீர்கள்! குழகரைப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள். அவசியம் இளவரசரைக் காப்பாற்றுவார்!" என்றார் பட்டர்.

இவ்வாறு கூறிவிட்டு சுவாமிக்குத் தீபாராதனை செய்து திருநீறும் கொடுத்தார். "அம்மணி! தாங்கள் இவ்வளவு மேலான நிலைமையில் இருப்பது குறித்து மிக்க சந்தோஷம்!" என்றார்.

"என்னை உங்களுக்கு முன்னமே தெரியுமா, பட்டரே?"

"தெரியும், ராணி! பழையாறையில் பார்த்திருக்கிறேன். வைகைக் கரைக் கோயிலிலும் பார்த்திருக்கிறேன். தங்கள் தமையன், திருமலை.—இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறான்?"

"ஆழ்வார்களின் பிரபந்தங்களைப் பாடிக்கொண்டு ஊர் ஊராய்த் திரிந்து கொண்டிருக்கிறான். அவனை நான் பார்த்து வெகு காலமாயிற்று."

"அவனுக்குக்கூட அதைப் பற்றிக் குறைதான், அம்மா! தாங்கள் பழுவூர் ராணியான பிறகு அவனைப் பார்க்கவேயில்லையென்று வருத்தப்பட்டான்."

"அதற்கென்ன செய்யலாம், ஐயா! நான் புகுந்த இடத்தில் எல்லாரும் பரம சைவர்கள். அவனோ வீர வைஷ்ணவன். 'ஆழ்வார்க்கடியான்' என்று பட்டப் பெயர் வைத்துக் கொண்டு சைவர்களோடு சண்டை போட்டுக் கொண்டு திரிகிறான். அவனை எப்படி நான் சேர்ப்பது? புகுந்த வீட்டாரின் மனம் கோணாமல் நான் நடந்துகொள்ள வேண்டாமா?"

"உண்மை, தாயே! உண்மை! தங்கள் பதியின் மனம் கோணாமல் நடப்பதுதான் முக்கியமானது. ஆழ்வார்க்கடியான் எப்படியாவது போகட்டும்!"

பட்டரிடம் விடைபெற்றுக் கொண்டு இருவரும் கிளம்பினார்கள்.

"தனியாகப் போகிறீர்களே? சற்றுப் பொறுத்தால் நானும் வந்து விடுவேன்."

"வேண்டாம், ஐயா! எங்களுக்காக அவசரப்பட வேண்டாம். இந்தப் பெண்ணுக்கு இந்தப் பக்கமெல்லாம் நன்றாய்த் தெரிகிறது. அதோடு இன்றைக்குத் தான் கோடிக்கரை முழுதும் அமளி துமளிப்படுகிறதே! பயம் ஒன்றுமில்லை. நாங்கள் போகிறோம்" என்றாள் நந்தினி.

இரு பெண்களும் ஆலயத்துக்கு வெளியில் வந்தார்கள். பட்டர் கண் பார்வையிலிருந்து மறைந்ததும் ராக்கம்மாள் நந்தினியின் கையைப் பிடித்து ஆலயத்துக்குப் பின்புறமாக அழைத்துச் சென்றாள். சிறிது நேரத்துக்கெல்லாம் தாழைப் புதர்கள் செறிந்த ஓடைக் கரையை அடைந்தார்கள். நட்சத்திர ஒளியின் உதவியைக் கொண்டு ஓடைக்கரையோடு நடந்தார்கள்.

ஆறாம் அத்தியாயம்

பூங்குழலியின் திகில்

தாழைப் புதரின் மறைவில் பூங்குழலி மூச்சைப் பிடித்துக் கொண்டு நின்றாள். மந்திரவாதியும் நந்தினியும் மெல்லிய குரலில் பேசிய போதிலும் அவர்களுடைய பேச்சு பெரும்பாலும் அவள் காதில் விழுந்தது.

இளவரசரைக் கடல் கொண்டது என்பதில் தனக்கு நம்பிக்கையில்லை என்று நந்தினி கூறியதற்கு, மந்திரவாதி "ராணி! என் பேச்சில் உங்களுக்கு எப்போதுமே நம்பிக்கை யிருப்பதில்லை. எதனால் இப்போது அவநம்பிக்கைப் படுகிறீர்கள்?" என்று கேட்டான்.

"இளவரசரின் ஜாதக பலத்தைப் பற்றி நீ கேட்டதில்லையா? சற்று முன்னால்கூட குழகர் கோயில் பட்டர் அதைப் பற்றிச் சொன்னார்."

"பைத்தியக்காரத்தனம். கிரஹங்கள், நட்சத்திரங்களின் சக்தியைக் காட்டிலும் என்னுடைய மந்திர சக்தி வலியது. அமைதி குடிகொண்டிருந்த கடலில் நான் மந்திரம் ஜபித்துச் சுழற்காற்றை வருவித்தேன் என்பது தங்களுக்குத் தெரியுமா? முதலில் அந்தக் காஞ்சி நகர் ஒற்றனும் அதை நம்பவில்லை. பிற்பாடு, கடலில் முழுகி உயிரை விடும்போது, கட்டாயம் நம்பியிருப்பான்!"

"அவன் கடலில் முழுகி இறந்ததை நீ பார்த்தாயா?"

"நான் பார்க்காவிட்டால் என்ன? அவன் இருந்த கப்பல் தீப்பிடித்து எரிந்ததைப் பார்த்தேன்."

"தீப்பிடித்த கப்பலிலிருந்து அவனைத் தப்புவிக்க இளவரசர் கடலில் குதித்துப் போனாராமே?"

"போனவர் திரும்பி வந்தாரா?"

"திரும்பிப் பல்லவனுடைய கப்பலுக்கு வரவில்லை......"

"பின்னே என்ன? இரண்டு பகைவர்களும் ஒரே நாளில் பலியாவதற்காகவே வந்தியத்தேவனை உயிரோடு விட்டுவிட்டு வந்தேன்."

"நீ என்னதான் சொன்னாலும் என் மனம் நம்பவில்லை. அவர்கள் இருவரும் இன்னும் உயிரோடிருப்பதாக என் மனதிற்குள் ஏதோ சொல்லுகிறது. பூங்குழலியை உனக்குத் தெரியுமா?"

"நன்றாய்த் தெரியும். இலங்கையில் அவள் எங்களுக்குத் தொல்லையாயிருந்தாள். அவளும் சுழற்காற்றில் போயிருக்கலாம்."

"அதுதான் இல்லை. சிறிது நேரத்துக்கு முன்பு ஒரு படகு ஆரத்தில் வந்தது. கலங்கரை விளக்கின் உச்சியிலிருந்து



ராக்கம்மாள் பார்த்தாளாம். திடீரென்று அது மறைந்து விட்டதாம். படகில் இரண்டு மூன்று பேர் இருந்ததாகத் தோன்றியதாம்."

"அப்படியானால் தாங்கள் கிழவரை அழைத்துக் கொண்டு உடனே நடையைக் கட்டுங்கள். நான் இருந்து பார்த்துக் கொண்டு வருகிறேன்."

"நாங்கள் இருந்தால் என்ன?"

"கிழவர் இருந்தால் இளவரசருக்கு இராஜமரியாதைகள் செய்து அழைத்துக் கொண்டு போகப் பார்ப்பார். காரியமெல்லாம் கெட்டுப் போகும்."

"மந்திரவாதி! நானும் தான் கேட்கிறேன். அவர்கள் இறக்க வேண்டிய அவசியம் என்ன? மதுராந்தகனுக்குப்



பட்டம் கட்டிவிட எல்லாரும் சம்மதித்து விட்டால்......''

''அம்மணி! பெண் புத்தியைக் காட்டி விட வேண்டாம். காஞ்சி ஒற்றனுக்கு நம் இரகசியம் எல்லாம் தெரியும். அவன் இளவரசரிடமும்

சொல்லியிருப்பான். பொழுது விடிவதற்குள் நீங்கள் புறப்பட்டுச் செல்லுங்கள். ராக்கம்மா! பூங்குழலி அவர்களை அழைத்து வந்தால் காட்டில் எங்கே வைத்திருப்பாள்?"

"மறைந்த மண்டபம் ஒன்று இருக்கிறது. அதுதான் அவளுடைய அந்தரங்க வாசஸ்தலம். காஞ்சி ஒற்றனை அதிலே தான் ஒரு பகல் முழுதும் மறைத்து வைத்திருந்தாள். பிறகு அதை நான் கண்டு பிடித்தேன்."

"நல்லது; அந்த மறைந்த மண்டபம் இருக்குமிடம் எனக்கும் தெரியும். அங்கே போய்க் காத்திருக்கிறேன். ராணி! சக்கரவர்த்தி எப்படியிருக்கிறார்? ஏதாவது செய்தி உண்டா?"

"எந்தச் சக்கரவர்த்தியைப் பற்றிக் கேட்கிறாய்?"

"நோயாளி சுந்தர சோழனைச் 'சக்கரவர்த்தி' என்று இந்த வாய் ஒரு நாளும் சொல்லாது. 'நமது' சக்கரவர்த்தியைப் பற்றித்தான் கேட்கிறேன்."

"சௌக்கியமாயிருப்பதாகப் பத்து நாளைக்கு முன்பு செய்தி கிடைத்தது. ஆகா! எத்தனை நாள் ஆயிற்று பார்த்து?"

"சரி, சரி! சீக்கிரம் புறப்படுங்கள். அந்த முட்டாள் பல்லவன் என்ன செய்யப் போகிறானாம்?"

"அவனையும் தஞ்சைக்கு அழைத்துப் போகிறோம்."

"அவனிடம்ஜாக்கிரதையாயிருங்கள்."

"அவனைப்பற்றிக் கவலையில்லை. நான் காலால் இட்டதை அவன் தலையால் செய்யக் காத்திருக்கிறான்!"

"இருந்தாலும் ஜாக்கிரதையாயிருப்பது நல்லது. காஞ்சி ஒற்றன் வந்தியத்தேவனிடம் தாங்கள் கொஞ்சம் ஏமாந்து போனீர்கள் அல்லவா?"

"அது உண்மைதான்; அதனாலேயே அவனை உயிரோடு மறுபடியும் பார்க்க விரும்புகிறேன்."

"அந்த ஆசையை அடியோடு விட்டு விடுங்கள், ராணி!"

இவ்வாறு பேசிக் கொண்டே அவர்கள் அங்கிருந்து நகரத் தொடங்கினார்கள் என்று தெரிந்தது. பூங்குழலி தன்னை அவர்கள் பார்க்காத வண்ணம் இன்னும் நன்றாய்ப் புதரில் மறைந்து கொண்டாள். நல்ல வேளையாக, அவள் இருந்த பக்கம் அவர்கள் வரவில்லை. வேறு திசையாகச் சென்று விட்டார்கள்.

பூங்குழலி தற்செயலாக ஒட்டுக் கேட்ட விஷயங்கள் அவளுக்குப் பெருங் கிலி உண்டு பண்ணி விட்டன. பொன்னியின் செல்வரை எத்தனை வித அபாயங்கள் சூழ்ந்திருக்கின்றன என்பதை எண்ணியபோது அவளுடைய கை கால்கள் நடுங்கின. கண்கள் இருண்டன. தொண்டை வறண்டது. உள்ளம் குமுறியது. தான் விட்டுவிட்டு வந்த படகை உடனே போய்ச் சேர வேண்டும் என்ற எண்ணம் மட்டும் வலியதாக முன் நின்றது. படகை விட்டு வந்த திசையை நோக்கி விரைந்து சென்றாள்.

இளவரசர் கொடிய விஷ சுரத்தினால் பிடிக்கப்பட்டிருந்தார். அவரைச் சிறைப் படுத்திப் போவதற்குப் பழுவேட்டரையர் காத்திருந்தார். அவரைக் கொன்று விடுவதற்குக் கொலையாளிகள் காத்திருந்தனர். அவர்களுக்குத் துணையாக இந்தப் பெண்ணுருக் கொண்ட மோகினிப் பிசாசு இருந்தது. பார்த்திபேந்திரனும் அவளுடைய மாய வலையில் வீழ்ந்து விட்டான். இளவரசரைத் தான் அழைத்துச் சென்று பத்திரமாய் வைத்திருக்கலாம் என்று எண்ணிய மறைந்த மண்டபங் கூட இவர்களுக்குத் தெரிந்திருக்கிறது.

இவ்வளவு அபாயங்களிலிருந்தும் இளவரசரைப் பாதுகாக்கும் பொறுப்பு தன் தலையில் சுமந்திருப்பதாகப் பூங்குழலி உணர்ந்தாள். ஆகையினாலேயே அவளுடைய மூளை குழம்பிற்று. இதுகாறும் அவளுடைய வாழ்நாளில் என்றுமில்லாத ஓர் அநுபவமும் நேர்ந்தது. அதாவது காட்டில் வழி தவறி விட்டோமோ என்ற பீதி உண்டாயிற்று. சுற்றிச் சுற்றிப் புறப்பட்ட இடத்துக்கே வந்து கொண்டிருக்கிறோமோ என்ற எண்ணம் தோன்றியது. அப்படிச் சுற்றி வரும்போது இளவரசரின் எதிரிகள் யாரேனும் எதிர்ப்பட்டு விட்டால் என்ன செய்வது? அவர்களுக்கு என்ன சமாதானம் சொல்வது? எப்படி அவர்களிடமிருந்து தப்பித்துச் செல்வது?......

இல்லை, இல்லை! சரியான வழியிலே தான் வந்திருக்கிறோம். இதோ கால்வாய் தெரிகிறது. படகை விட்டு வந்த இடம் அதோ அந்த மூலையில் இருக்கிறது... ... பூங்குழலி அவ்விடத்தை நோக்கிப் பாய்ந்து ஓடினாள். அவளுடைய நெஞ்சு அடித்துக் கொள்ளாமல் நின்று விட்டது. ஏனெனில், அவள் விட்டிருந்த இடத்தில் படகைக் காணவில்லை! ஐயோ! படகு எங்கே போயிருக்கும்?

ஒரு வேளை தான் இல்லாத சமயத்தில் பழுவேட்டரையரின் ஆட்கள் இங்கேயும்

வந்திருப்பார்களோ? வந்து இளவரசரையும் வந்தியத் தேவனையும் சிறைப் பிடித்துக் கொண்டு போயிருப்பார்களோ? அப்படி நடந்திருந்தால் கூடப் பாதகமில்லை. அதைவிடப் பயங்கரமான சம்பவம் நிகழ்ந்திருக்குமோ? வந்தியத் தேவன் இளவரசரைத் தூக்கிக்கொண்டு மறைந்த மண்டபத்தைத் தேடிப் போயிருப்பானோ? அப்படியானால் அங்கே கொலைஞர்கள் காத்திருப்பார்களே? அடடா! என்ன தவறு செய்து விட்டோம்?......

அந்த மறைந்த மண்டபத்துக்கு உடனே போய்ப் பார்க்கவேண்டுமென்ற பரபரப்பு பூங்குழலியின் மனதில் குடிகொண்டது. காட்டு வழியில் ஓட்டம் பிடித்து ஓடினாள். மறுபடியும் அந்தப் பழைய சந்தேகம்; வழி தவறி விட்டோமோ என்ற சந்தேகம். சுற்றிச் சுற்றி வருகிறோமோ என்ற மயக்கம்.

அது என்ன? ஐயோ! அது என்ன? ஏதோ காலடிச் சத்தம்போலிருக்கிறதே? யாரோ நம்மைத் தொடர்ந்து வருவது போலிருக்கிறதே? யாரா யிருக்கும்? எதற்காக இருக்கும்? ஒரு வேளை அந்தப் பயங்கரமான மந்திரவாதிதானோ? அப்படியானால் ஏன் பயப்பட வேண்டும்? இடுப்பில் செருகியுள்ள கத்தியை எடுத்துக் கொண்டால் போயிற்று! யாரா யிருந்தால்தான் என்ன? எதற்காக ஓட வேண்டும்?......

இல்லை, இல்லை! ஓட வேண்டியது தான். இச்சமயம் யாருடனும் சண்டை பிடிக்கும் சமயம் அன்று. கையில் வலிவு இல்லை. கத்தியும் குறி தவறிப் போகும். உயிரை எப்பாடு பட்டாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டும். நமக்கு இத் தருணம் ஏதேனும் வந்தால் இளவரசருடைய கதி யாதாகும்? முன்னமே அந்த வந்தியத்தேவன் எச்சரித்தானே? உயிரைப் பத்திரமாய்க் காப்பாற்றிக் கொண்டு வருவதாகச் சொன்னோமே? அதை நிறைவேற்ற வேண்டியதுதான்!

பூங்குழலி மேலும் மேலும் நெருக்கமான காட்டில் புகுந்து ஓடினாள். ஆனால் துரத்தி வந்தவன் மேலும் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான். பூங்குழலி போன வழியில் மரங்களிலிருந்த பட்சிகள் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடின. வளைகளிலிருந்து நரிகள் கிளம்பி ஓடின. தூங்கிய காட்டுப் பன்றிகள் விழித்தெழுந்து விழுந்தடித்து ஓடின. மான் ஒன்று விர்ரென்று பாய்ந்து வந்து அவள் மேலேயே இடித்துப் புடைத்துக் கொண்டு ஓடியது. இவ்வளவுக்கும் மத்தியில் பின்னால் தொடர்ந்து வந்தவன் விட்டபாடாக இல்லை. அவனுடைய காலடிச் சத்தமும், அவன் ஓடியதால் பெருமூச்சு விடும் சத்தமும் கேட்டுக் கொண்டே யிருந்தன.

பூங்குழலி ஓடி ஓடிச் சலித்துப் போனாள். அந்தச் சலிப்பு அளவில்லாத கோபமாக மாறியது. வருகிறவன் யாரா யிருந்தாலும் அவனை ஒரு கை பார்த்து விடுவது என்று முடிவு செய்தாள்.

(தொடரும்)

அட்டைப்பட விளக்கம்

மாலைப் பொழுதிலே கடற்கரையிலே ஒரு மேடையின் மீது அவன் அமர்ந்திருந்தான்; நீல வானத்தை நீலக்கடல் தழுவி முத்தமிடும் மோகனக் காட்சியில் ஈடுபட்டிருந்தான். நேரம் செல்லுவது பற்றி அவனுக்கு நினைவே இல்லை. ஏன், தன்னைப்பற்றிய நினைவுகூட அவனுக்கு இல்லை.

அப்பொழுது அவனுக்குப் பின்னாலிருந்து இரண்டு மலர்க் கரங்கள் அவன் கண்களைத் திடீரென்று மூடின. அது யார் என்று அவனுக்கு முதலில் தெரியவில்லை. பிறகு அந்த வண்ண மலர்க் கரங்களைத் தொட்டுப் பார்த்துத் தெரிந்து கொண்டான். "கண்ணம்மா, கையை எடு! யாரிடம் உன் மாய விளையாட்டு!" என்றான்.

கண்ணம்மா கையை எடுத்தாள். "அலைமோதும் ஆழ்கடலில் நீ என்னத்தை அப்படிப் பார்க்கிறாய்! நீல வானத்தில் எதை நீ தேடுகிறாய்! குதித்து விழும் நீர்க் குமிழிகளில் நீ என்ன அதிசயத்தைக் கண்டு விட்டாய்!" என்று கேள்விமேல் கேள்வியாகக் கேட்டாள். அதற்கு அவன் மறுமொழி கூறினான்:

"நெரித்த திரைக் கடலில் நின்முகம் கண்டேன்
நீல விசும்பினிடை நின்முகம் கண்டேன்
திரித்த நுரையினிடை நின்முகம் கண்டேன்
சின்னக் குமிழிகளில் நின்முகம் கண்டேன்
பிரித்துப் பிரித்து நிதம் மேகம் அளந்தே
பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன்றில்லை
சிரித்த ஒலியினிலுன் கை விலக்கியே
திருமித் தழுவியதில் நின்முகம் கண்டேன்."

இந்த அழகிய காட்சிதான் இந்தக் "கல்கி" இதழின் அட்டையை அலங்கரிக்கிறது.

திருக் குற்றாலத்தில் திருமணம்

காலங் கடந்த காலத்தே இமயமலைச் சாரலில் பார்வதி பரமேசுவரர்களுக்குத் திருமணம் நடந்தது. அந்தத் திருமண வைபவத்தைப் பார்க்கக் கொடுத்து வையாமல், பொதிகை மலைக்குப் போக நேர்ந்த அகத்திய முனிவரின் குறை சென்ற மாதம் 28-ம் தேதி தீர்ந்திருக்கும்.

ரஸிகமணி டி. கே. ஸி. அவர்களின் பேத்தி செல்வி தீப. தங்கம்மாளுக்கும் மத்தளம் பாறை ஸ்ரீ டி. கே. தீத்தாரப்ப முதலியார் அவர்கள் புதல்வன் செல்வன் தீ. ராமசுவாமிக்கும் குற்றாலத்தில் விமரிசையாகத் திருமணம் நடந்தது. அந்த வைபவத்துக்கு, தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்து தமிழ் அன்பர்கள் இலக்கிய ரஸிகர்கள் வந்து சிறப்பித்தனர். அப்படி வர இயலாதவர்கள் வாழ்த்துக்களும் தந்திகளும் பரிசுகளும் அனுப்பி வைபவத்தில் மானஸீகமாகக் கலந்து கொண்டனர்.

ராஜாஜி அவர்கள் மண மக்களுக்கு இரு கலைப் பொக்கிஷங்கள் என்று மதிக்கத்தக்க புஸ்தகங்களை "ஸி. ஆர். தாத்தாவின் ஆசிர்வாதம்" என்று கையெழுத்திட்டு அனுப்பி யிருந்தார்.

ஸர். ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் தம்பதிகள், ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய அய்யர், கருமுத்து ஸ்ரீ தியாகராஜ செட்டியார், ஸ்ரீ வி. வி. ராமசாமி நாடார், 'கல்கி' ஆசிரியர் குடும்பத்தினர், 'கல்கி' மானேஜிங் டைரெக்டர் ஸ்ரீ டி. சதாசிவம் குடும்பத்தினர், சென்னை 'செய்தி இலாக்கா டைரெக்டர்' ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி குடும்பத்தினர், உலகம் சுற்றி வந்த கோட்டையூர் ஸ்ரீ கே. வி. ஏஎல். ராமநாதன் செட்டியார் குடும்பத்தினர், ஸ்ரீ ஸிவி. ஆர். எம். அழகப்பச் செட்டியார் தம்பதிகள், கோயமுத்தூர் பயனீர் மில்ஸ் புரோப்ரைட்டர் ஜி. ஆர். கோவிந்தராஜன், சங்கீத கலாநிதி செம்மங்குடி சீனிவாசய்யர், காரைக்குடி ஸ்ரீ சா. கணேசன், ஸ்ரீ தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், திவான்பகதூர் பி. ஆவுடையப்ப பிள்ளை, ஸ்ரீ ஐ. கே. சுப்பிரமணியப் பிள்ளை, ஸ்ரீ ஏ. என். மகரபூஷணம், ஸ்ரீ மகராஜப் பிள்ளை, ராயவரம் ஸ்ரீ குழந்தையன் செட்டியார், ஸ்ரீமதி டி. ஏ. மதுரம், ஸ்ரீமதி லீலாவதி அம்மையார் முதலிய பிரமுகர்கள் மேற்படி திருமணத்துக்கு விஜயம் செய்து சிறப்பித்தனர்.

அன்றையக் கல்யாணத்தில் குறிப்பிட வேண்டிய விசேஷ அம்சம்: கல்யாண மெல்லாம் முடிந்து சாயங்காலமாக சங்கீதக் கச்சேரி வைத்துக் கொள்ளாமல், மாங்கல்ய தாரணம் காலை 10-30க்கு ஆனவுடனே, அலங்காரமான அந்த மணப் பந்தலிலேயே ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் இன்னிசை விருந்து சுமார் ஒன்றரை மணி நேரம் நிகழ்ந்தது. பிறகுதான் சாப்பாட்டு விருந்து!



அன்றிரவு போஜனத்துக்குப் பிறகு குமாரி ராதாவின் நாட்டிய விருந்து நிகழ்ந்தது. நாட்டியப் பகுதியில் குற்றாலக் குறவஞ்சி மிக விசேஷமாக அமைந்தது. குறவஞ்சி நாடகத்துக்கு நிலைக்களனாக அமைந்த திருக்குற்றாலத்தில், குற்றாலக் குறவஞ்சி நூலைப் பன்முறை படித்து, பல்லாண்டுகளாக ரஸித்த சபையோர் முன்னிலையில் அந்த நாட்டிய விருந்து நடந்தது. ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் தேனின் இனித்திடும் தீங்குரலில் குறவஞ்சிப் பாடல்களைப் பாடிய போதும், குமாரி ராதா ஒவ்வொரு பாவத்துக்கும் பற்பல அபிநயங்கள் பிடித்துக் காட்டிய போதும் சபையோர் மெய் சிலிர்த்தனர்! குறவஞ்சிப் பாடல்களை நாட்டியத்துக்கு இவ்வளவு பொருத்தமாக அமைத்த ஸ்ரீ ராமய்யாப் பிள்ளை பெரிதும் பாராட்டப் பட்டார்.

இவ்வளவு அற்புதமான திருமணத்தை இன்று குற்றாலத்திலிருக்கும் நமது தமிழ் முனிவர் நடத்தி வைத்து மகிழ்ந்ததைப் பார்த்தபோது, உண்மையிலேயே அன்றொரு நாள் அகத்திய முனிவர் அடைந்த குறை நீங்கிக் குதூகலப்பட்டதாகவே கருதி திருமணத்துக்கு வந்திருந்த அத்தனை பேரும் மகிழ்ந்தனர்.

—என். வி. என்.



22

கடவுள் பித்தைப் பற்றியும் ஞானிகளைப் பற்றியும் சங்கரர் பாடுகிறார் :

புண்ணியம் தேடமாட்டான் பாவமும் செய்யான்
கண்ணனில் கரைந்து போக இந்தப் [பித்தனின் சித்தம்
குப்பைக் கந்தலுடுத்தி யதுவேநல்லாடை [யென்றிருப்பான்
எப்பவும் ஆனந்த மானந்த மானந்தமிவன் உள்ளம்

* * *

ரத்யா கர்ப்பட விரசித கந்த:
புண்யா புண்ய விவர்ஜித பந்த:
யோகீ யோக நியோஜித சித்த:
ரமதே பாலோன்மத்தவத் ஏவ

குற்றமறியாது குழந்தையின் உள்ளம். உலகத்தை மதியாது பித்தனின் உள்ளம். இவை இரண்டும் ஒன்று கலந்தாற் போல் இருக்கும் யோகியின் உள்ளம். இதை "பால உன்மத்தவத்" என்கிறார்.

பட்டினத்தார் முதலிய தமிழ் பக்தர்கள் பாடிய பழைய பாடல்களும் இதையே பாடுகின்றன.

அனைவருக்கும் இந்த நிலை அடைய முடியுமா? முடியாது. பக்குவமடையாமல் இந்த நிலையின் ஆனந்தத்தை அடையப் பார்த்தால் வெறும் வேஷமாக முடியும். இந்த யோகானந்த நிலை வருங்கால் வேண்டாமலே வரும். முந்தி செய்ய வேண்டியதைச் செய்தால் பிந்தி வருவது தானாக வரும். முந்தி செய்ய வேண்டியது என்னவென்றால் உள்ளே மனசை வஞ்சித்துப் பிடித்து ஆளுகின்ற புலன்களாகிய மூர்க்கரோடு முயல்வது. முயன்று வெல்லுவதற்கு பக்தி வேண்டும். முன் செய்த வினைகளின் பயனை விலக்க அதுவன்றி வேறு வழியில்லை. பக்தி நெறியை உண்மையில் அவலம்பித்தால் சித்தத்தின் மலம் நீங்கும். உள்ளம் மலம் நீங்கிச் சிவமாகும். தன்னைத்தான் பெறும். பிறகு உவமையில்லாத "பால உன்மத்தவத்" ஆனந்தம் அத்தன் அருளால் தானாக உதயமாகும்-மாணிக்கவாசகர் அச்சோப் பதிகத்தில் பாடியவாறு.

रथ्याकर्पटविरचितकन्थः
पुण्यापुण्यविवर्जितपन्थः
योगी योगनियोजितचित्तः
रमते बालोन्मत्तवदेव ॥

23

இரவில் தூங்கும்போது கனவு காண்கிறோம். அந்தக் கனவில் பல துன்பங்களும், கவலைகளும் அனுபவிக்கிறோம். அந்தச் சமயம் நாம் படும் துக்கம் பெரிதாயினும் விழித்ததும் ஒன்றுமில்லையெனத் தெரிந்து கொண்டு கவலை தீர்கிறோம். இவ்வாறே வாழ்க்கையின் விசாரமும் ஒரு சொப்பனத்து விசாரம் என்று எடுத்துக் காட்டுகிறார் ஆச்சாரியார்.

என்னே யதெல்லாம் நான்ஆர் நீயார்
அன்னையார் அப்பனார் யாதெம்மூர்
ஒன்றுமில்லை இங்கே தேடும் பொருள்
கனவின் கவலைகளைத் துறப்பாய் மனமே.

* * *

கஸ்த்வம் கோஹம் குத ஆயாத :
காமே ஜனனீ கோமே தாத :
இதிபரிபாவய ஸர்வம ஸாரம்
விச்வம் த்யக்த்வா ஸ்வப்ன விசாரம்

कस्त्वं कोऽहं कुत आयातः
का मे जननी को मे तातः
इति परिभावय सर्वमसारम्
विश्वं त्यक्त्वा स्वप्नविचारम् ॥

“நான்” “நான்” என்று பயமும் சங்கடமும் கோபமும் படுகிறோம். ‘நான்’ என்பதென்ன? யோசித்துப் பார். நீ யென்பதும் நான் என்பதும் உடலுள்ள வரையே யன்றோ. தாய் என்றும் அப்ப னென்றும் அன்பு செய்யும் உயிர்கள் முன் யாரா யிருந்தார்கள்? நீ யாராய் இருந்தாய்? இதற்கு முன் எத்தனை தாயின் வயிற்றில் தோற்பை சிறை வாசம் செய்தாய் நீ? அந்தத் தாய்மார்களை நீ இப்போது கண்டாயா? கண்டால் அன்பு செலுத்துவாயா? எந்தப் பொருளி னின்று வந்த பகுதிப் பொருள் நீ? உலகில் புலனாகும் அனைத்தும் மாய வடிவங்கள் கொண்ட ஒரே பொருள். அந்தப் பொருளைக் காணாமல் மாய வடிவத்தைக் கண்டு விரும்பியும் வெறுத்தும் மயல் கொண்டு அலைகிறாய். இந்தக் கனவினின்றும் விழித்தெழு. கண்ணைத் திறந்து மெய்ப் பொருளைக் காண முயல்வாய், உன் கவலைகள் தீரும் என்கிறார். கர்மத்தினால் உண்டான மாயம் பக்தியினால் தீரும். விடுதலை யடைவாய். கோவிந்தனை பஜித்து முக்தி அடை என்கிறார்.

படித்துப் பாருங்கள்!

மாடத்தேவன் சுனை

“வேலம்மா! கோட்டை, சுனை, இந்தத் தோட்டம், குடிசை, எல்லாம் உன் உடைமை; நான் உன் அடிமை; நீ என்னை இங்கே இருக்கச் சொன்னால் இருக்கிறேன். இல்லாவிட்டால் மறுபடியும் போய்க் கும்பினிக்காரன் பட்டாளத்தில் சேர்ந்து விடுகிறேன்!” என்று வேலம்மாளின் வேல் விழிகளைப் பார்த்துப் பரவசமான நிலையில் சொன்னான் மாடத்தேவன். அவனை வேலம்மாள் பட்டாளத்தில் சேரும்படி விட்டிருந்தால், வீரன் ஜமைத் துரைக்குக் கொஞ்சமும் எதிர்பாராத விதமாக உதவி புரிந்திருக்க முடியுமா! அந்த உதவியின் காரணமாக ஏற்பட்ட பல அற்புத சம்பவங்கள் நிறைந்த இந்தக் கதைதான் வாசகர்களுக்குக் கிடைத்திருக்குமா!

“பெண்ணே, நான் வீடுவாசல் இல்லாதவன். உன்னை ஏற்றுக் கொள்ளும் பொறுப்பை நான் எப்படி ஏற்பது!” என்று கள்ளன் எவ்வளவோ தடுத்துக் கூறியும் கேளாமல் மரகதவல்லி அவனையே பின்பற்றினாள். “இதுவரையில் பிறருக்காகவே திருடிவந்த நீ உனக்காக இந்தத்தடவை திருடேன்......உனக்காக என்னையே திருடிக்கொண்டு போயேன்!” என்று தைரியமாகச் சொன்னாள்.

கள்ளன் அயர்ந்து போனான். பிறகு அவன் என்ன செய்தான் என்பதைக் “காதறாக்கள்ளன்” என்னும் சுவாரஸ்யமான கதையில் படிக்கலாம்.

கடோத்கஜராயர் குடியிருக்கப் பார்த்த வீட்டில் தான் எத்தனை பேய்கள்! அவை என்ன அட்டகாசம் செய்கின்றன!—அவ்வளவு சிரமப்பட்டுத் தேடிய வீட்டில் ராயர் குடி புகுந்தாரா! இல்லையா! இதை “வீடு தேடும் படலத்”தில் தான் தேடிப் பார்க்கவேண்டும்.

ராமானுஜமும் ரங்கபாஷ்யம் என்று என்னத்துக்காகப் பெயரை மாற்றிக் கொள்ள வேண்டும்! விமான ரமணி மாலதியைக் கண்டதும் அவன் முகம் ஏன் பிரகாசம் அடைய வேண்டும்! மாலதி எதற்காக விமான உபசாரிணி வேலையை விட்டு விட்டு உபாத்தியாயினி ஆகவேண்டும்! அந்தச் சமயம் பார்த்து ராமானுஜமும் ஏன் பெங்களூரைப் பார்க்க ஓடவேண்டும்! மேற்படி கேள்விகளுக்கெல்லாம் பதில் வேண்டுமானால், “மாலதியின் தந்தை”யைப் படித்தாக வேண்டும்.

மேலே கூறிய நான்கு கதைகளும் அடங்கிய இந்நூல் மிகவும் கவர்ச்சிகரமாக அமைந்திருக்கிறது.

ஆசிரியர்: கல்கி; பிரசுரம்: பாரதி பதிப்பகம், தியாகராயநகர், சென்னை-17; விலை: ரூ. 2—8—0.

மோகன முறுவல்

“இமயமலை முடிதரித்த
இந்திய மாபூமி
குமரிமுனைச் சிலம்புகொஞ்சும்
பஞ்சடி மென்பூமி.

“தேசத்தை எப்படி அனுபவித்திருக்கிறார்! அந்த அனுபவத்திற்கு ஏற்பத் தமிழ் ஒத்துப் பாடுகிறது” என்று ரஸிகமணி டி. கே. சி. இந்த நூலின் ஆசிரியை ஸ்ரீமதி வாலம் அவர்களின் கவிதையை வியந்து கூறுகிறார்.

இந்த நூலுக்கு முன்னுரை அளித்துள்ள நாமக்கல் கவிஞரோ, “பொதுவாக ஸ்ரீ வாலாம்பாளின் கவிதைகளில் தொட்ட தொட்ட இடமெல்லாம் கார்கிமகான் தோற்ற மளிக்கிறார்” என்று பாராட்டுகிறார்.

இப்படிக் கவிஞரும் கவிதா ரஸிகரும் இந்தப் பாடல் தொகுதியைப் பற்றிக் கூறும்போது நமக்குத்தான் இதற்குமேல் சொல்ல என்ன இருக்கிறது!

ஆசிரியை: ஸ்ரீ ஹா. கி. வாலம் பி. ஏ., கிடைக்குமிடம்: தமிழ்ப் பண்ணை லிமிடெட், தியாகராய நகர், சென்னை—17: விலை: ரூ. 2.


The Egmore High School Tutor

ஒவ்வொரு மாதமும் 15-ந் தேதி வெளிவரும் இந்தப் பள்ளிக்கூடப் பத்திரிகையில் எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷைக்கு வேண்டிய எல்லாப் பாடங்களுக்கும், அநுபவம் மிகுந்த ஆசிரியர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கும் வினாவிடைகள் அடங்கி யுள்ளன. மாணவர்களால் மாணவர்களுக்காக எழுதப்பட்ட கட்டுரைகளும் இடம் பெற்றிருக்கின்றன. பொதுவாக எல்லா எஸ். எஸ். எல். ஸி. மாணவர்களுக்கும், இப் பத்திரிகை மிகவும் பயன்படும். தனிப்பட்ட முறையில் எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷைக்குப் போகும் ஜூனியர் கிரேடு ஆசிரியர்களுக்கும் பெரிதும் பயன்படும்.

ஆசிரியை: குமாரி பாக்கியம்; கிடைக்குமிடம்: Manager, The Egmore High School Tutor, 7, Whannels Road, Egmore, Madras-8.


Wisdom
உங்கள் புன்னகை பிரகாசிக்க —
முத்துப் போல் வெண்மையான,
ஆரோக்கியமான பற்கள் உங்கள்
வசீகரத்தை அதிகரிக்கின்றன!
விஸ்டம் டூத் பிரஷ் உபயோகித்து உங்
கள் புன்னகையைப் பிரகாசிக்கச் செய்
யுங்கள். விஸ்டம் டூத் பிரஷின்
நைலான் குஞ்சங்கள் பற்களுக்குக் கேடு
உண்டாக்கா இக்கட்டான பல் இடுக்கு
களுக்குள் புகுந்து சுத்தம் செய்யுமாறு
அமைக்கப் பட்டிருக்கின்றன. சிறியவர்
களுக்கும் பெரியவர்களுக்கும் ஏற்ற சைஸ்
களில் உள்ள விஸ்டம் டூத் பிரஷ்கள் தூசி தும்பு
புகமுடியாத உறைகளில் விற்கப்படுகின்றன.
டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
ஜே. எல். மாரிசன்,
ஸன் & ஜோன்ஸ்
(இந்தியா) லிட்.,
தபால் பெட்டி
6527, பம்பாய் 26
& கிளைகள்.
— விஸ்டம் உபயோகியுங்கள்
சரியான உருவில் அமைந்துள்ள நைலான் டூத் பிரஷ்
WT. 28

சுறுசுறுப்பான குழந்தைகளுக்கு அதிகப்படி போஷாக்கு அவசியம்!



எப்பொழுதும் ஓடி ஆடும் குழந்தைகளின் சக்தி விரயமாகிவருவதால், அதை ஈடு செய்ய அவர்களுக்கு அதிகப்படி போஷாக்கு அவசியம்.

அவர்கள் குளிர்ந்த ஓவல்டினை மிகவும் விரும்புகின்றனர். எளிதில் ஜீரணமாகக்கூடியது. அவர்களின் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் பெரிதும் உதவுகிறது. ஓவல்டினில் சுத்தமான பசுவின் முட்டைகள், பழுத்த பார்லிமால்ட், கொக்கோ, பாஸ்படைட்கள் பி & டி விடமின்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அதிலிருக்கும் போஷாக்கு மற்றும் விடமின் சத்துக்கள் இன்றியமையாதவை. ஓவல்டினை விடச் சிறந்தது வேறு கிடையாது

ஓவல்டின் சிறியோர் பெரியோர்களுக்கும் நல்லது. குடும்பத்திற்குகந்த சிறந்த உணவு பானம். டாக்டர்கள் எங்கும் சிபாரிசு செய்கின்றனர். போலிகளைத் தள்ளிவிடுங்கள்.

விநியோகஸ்தர்கள்: ஜேம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிட்.



ஓ வ ல் டி ன்

குழந்தைகள் விரும்பும் பானம்!



யுக்தியும் சக்தியும்

மூலக்கதை : ஹிந்தி

ஆசிரியர் : யோகேசுவர் குலேரி

மொழிபெயர்ப்பு : வாஞ்சி

நான் எம். ஏ. பட்டதாரியாக விளங்கினேன். பொருளாதாரப் பாடம் எடுத்துக் கொண்டு நான் பரீட்சையில் தேறியவன் என்றாலும், என் படிப்புக்கு நேர் மாறான சேவாக்கிராம முனிவரின் பொருளாதார தத்துவம்தான் எனக்கு மிகவும் பிடித்தமாக இருந்தது.

நான் ஆங்கிலப் பேராசிரியர்களிடம் படித்துத் தேர்ச்சி பெற்றவன்; அவர்களிடம் மிகவும் மதிப்புக் கொண்டவன். எனினும் இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஏகாதிபத்தியக் கொள்கையை வன்மையாகக் கண்டிக்க நான் தயங்கியதே இல்லை. இதனால் மாணவர்களிடையே மாத்திரமல்ல, ஆங்கிலப் பேராசிரியர்களிடையிலும் எனக்குச் செல்வாக்கும் மதிப்பும் இருந்து வந்தன.

காந்தி மகானின் பொருளாதாரக் கொள்கையை முற்றிலும் ஆதரித்தேனாயினும், அவரது ஆத்மார்த்தக் கொள்கை எனக்குப் பிடிக்கவில்லை. அவர் கடவுள் என்றும் பிரார்த்தனை என்றும் அடிக்கடி கூறுவது வயோதிகத்தினால் ஏற்பட்ட பலவீனம் என்று எனக்குத் தோன்றியது!

அதற்காக என்னை நாஸ்திகன் என்று எண்ணி விடாதீர்கள். காந்தி மகான்கூட 'எல்லாம் ஈசன் செயல்' என்று கடவுள் மீது பாரத்தைப் போட்டு விட்டுப் பேசாமல் இருக்கவில்லை. அரிய பெரிய தியாகங்களைச் செய்து, சிறை சென்று கஷ்டப்படத்தான் செய்தார்.

நான் எம். ஏ. பட்டம் பெற்ற பிறகு எங்கள் குடும்பத்தினர் வெகு காலமாக நடத்தி வரும் ஹரகோவிந்த் பாங்கியில் சேர்ந்தேன்.

மேற்படி பாங்கி என் பாட்டனார் காலத்தில் ஸ்தாபிக்கப் பட்டது. என் தந்தை குழந்தையாக இருந்தபோதே பாட்டனார் இறந்துவிட்டார். அவர் இறந்த பிறகு என் தந்தையின் தாயாதி சகோதரரான ராம் ஸ்வரூப் சொத்து விஷயமாகச் சூழ்ச்சி செய்ய ஆரம்பித்ததால், என் பாட்டி சொத்தைப் பிரித்துக் கொடுத்து ராம் ஸ்வரூப்பிடமிருந்து விடுதலை வாங்கிக் கொண்டார்.

உடனே ராம் ஸ்வரூப் சொந்தத்தில் ஒரு பாங்கியை ஆரம்பித்தார். என் தந்தை தகுந்த வயதை அடையுமுன் தமது பாங்கியை அபிவிருத்திசெய்து எங்களுடைய பாங்கியின் செல்வாக்கைக் குறைத்து அதை ஒழித்துவிட வேண்டும் என்பது அவருடைய எண்ணம்.

ஆனால், மிகவும் தெய்வபக்தியுள்ள, வயோதிகரான ஒருவர் எங்கள் பாங்கியில் கணக்கராக (அக்கௌண்டெண்டாக) இருந்தார். அவர் என் பாட்டனாரின் நண்பர்; மிகவும் அனுபவம் வாய்ந்தவராதலால், எங்கள் பாங்கியில் அவர் இருக்கும் வரையில் யாதொரு அசம்பாவிதமும் ஏற்படாது என்ற உறுதியான நம்பிக்கை பொது ஜனங்களுக்கு இருந்து வந்தது.

எனவே என் தந்தைக்கு வயது வந்த போது எங்கள் பாங்கி பாட்டனார் காலத்தில் இருந்ததைக் காட்டிலும் அதிக சுபிட்சமாகவும் செல்வாக்குடனும் விளங்கியது.

இதைக் கண்ட ராம் ஸ்வரூப் பொறாமை கொண்டு எங்களுக்குத் தொல்லை விளைவிக்கத் தொடங்கியதால், எங்கள் பாங்கிக்கும் அவருடைய பாங்கிக்கும் கடுமையான போட்டி உண்டாயிற்று.

• • •

நான் பாங்கியில் சேர்ந்ததும் மேற்படி ஸ்தாபனத்தில் பல நவீன முறைகளை அமுலுக்குக் கொண்டு வர முற்பட்டேன். எனக்கு வயது வந்த பின் என் தந்தை பாங்கியில் இரண்டொரு மணி நேரம் இருந்து விட்டுப் போய் விடுவார். எனவே பாங்கியை நிர்வகிக்கும் முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக் கொண்டேன்.

வயோதிகரான கணக்கர் என் பாட்டனாரின் நெருங்கிய நண்பராயினும், அவரது கர்நாடக வழிகள் எனக்கு வெறுப்பைக் கொடுத்தன.

அவர் குறித்த நேரத்தில் பாங்கிக்கு வரமாட்டார். அரை அல்லது ஒரு மணி நேரம் தாமதித்தே வருவார். வந்த பிறகு சிறிது நேரம் ருத்திராட்ச மாலையைக் கையில் வைத்துக் கொண்டு ஜபம் செய்ய ஆரம்பித்து விடுவார்!

இதையெல்லாம் என்னால் சகிக்கவே முடியவில்லை. அவருக்குப் 'பென்ஷன்' கொடுத்து விடும்படி என் தந்தையிடம் சிபார்சு செய்தேன். நான் என்ன நோக்கத்துடன் சிபார்சு செய்தேன் என்பது அவருக்குத் தெரியாது!

கணக்கர் மீது என் தந்தை மிக்க அன்பும் மதிப்பும் வைத்திருந்தார். எனவே மாதா மாதம் முழுச் சம்பளம் கொடுத்து விடுவதாகவும், வயோதிக காலத்தில் அவர் பாங்கிக்கு வந்து உழைத்துக் கஷ்டப்பட வேண்டாம் என்றும் என் தந்தை அன்புடன் அவரிடம் கூறினார்.

ஆனால் அதற்கு அந்தக் கிழவர் இசையவில்லை. "'நீ உள்ள வரையில் இந்த பாங்கியை விட்டுப் போகக் கூடாது' என்று உங்கள் தந்தை எனக்குக் கட்டளையிட்டுச் சென்றுள்ளார். ஆகையால் அவர் வார்த்தைக்கு விரோதமாக நடக்க மாட்டேன்.

தவிர, உழைக்காமல் தண்டச் சம்பளம் வாங்கிக் கொண்டு வீட்டில் இருக்க என் மனம் சிறிதும் இடம் கொடுக்காது'' என்று அவர் என் தந்தையிடம் கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

அதிலிருந்து என் தந்தைக்குக் கணக்கர் மீதிருந்த அன்பும் மதிப்பும் பன்மடங்கு அதிகமாயின.

இருந்தாலும் எனக்கும் கணக்கருக்கும் அடிக்கடி சில்லறைத் தகராறுகள் ஏற்பட்டு வந்தன. எதற்கெடுத்தாலும், 'எல்லாம் ஆண்டவன் கட்டளைப்படி நடக்கும்' என்ற பல்லவியை அவர் பாடியது என் ஆத்திரத்தை அதிகப்படுத்தியது. அவருக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று தீர்மானித்தேன்.

வழக்கம்போல் ஒருநாள் அவர் நேரம் கழித்து பாங்கிக்கு வந்தபோது, அவரைக் கூப்பிட்டு, ''ஏன் இவ்வளவு நேரம்!'' என்று கடுமையாகக் கேட்டேன்.

பாங்கியில் உள்ள சகலரும் கணக்கரிடம் மிகவும் மரியாதையாக நடந்து கொள்வார்கள். அவர் தாமதித்து வருவதைக் குறித்து இதுவரையில் யாரும் அவரைக் கேட்டதில்லை. எனவே என் கேள்வி அவரைச் சிறிது நேரம் திகைத்து நிற்கும்படி செய்து விட்டது.

''நான் பூஜை செய்து விட்டு வருவதற்கு நாழிகை ஆகிவிட்டது'' என்றார் கிழவர்.

எனக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. பூஜையாம், பூஜை!

''குறித்த நேரத்தில் பூஜையை முடித்துக் கொண்டு வர முடியாவிட்டால், நீங்கள் வீட்டிலேயே இருந்துவிடுங்கள். உங்கள் சம்பளத்தை உங்கள் வீட்டுக்கு அனுப்பிவிடுகிறேன்'' என்றேன்.

''நான் குறித்த நேரத்தில் வர முயற்சி செய்கிறேன். எல்லாம் ஆண்டவன் கட்டளைப்படி நடக்கும்'' என்ற வழக்கமான பல்லவியைப் பாடினார்!

''சரி, போய் வேலையைப் பாருங்கள்'' என்று உத்தரவிட்டேன்.

பாங்கிக்கு நான் எஜமானன். எனவே, அவர் தம் இஷ்டப்படி வரக்கூடாது என்பதை அவர் உணர்ந்து கொள்ள வேண்டும் அல்லவா!

* * *

எங்கள் பாங்கியில் மற்றொரு கணக்கராக இருந்த சர்மா இளைஞர்; பட்டம் பெற்றவர். கிழவரான கணக்கர் விஷயத்தில் நான் கொண்டிருந்த அபிப்பிராயத்தை அவர் ஆதரித்தார். கிழவர் வேலையிலிருந்து விலகினால், அந்த ஸ்தானத்தில் சர்மாவை நியமிப்பதாக நான் அவரிடம் சொல்லியிருந்தேன். கிழவர் செய்யும் தவறுகளையெல்லாம் என்னிடம் எடுத்துச் சொல்லும்படியும் சர்மாவுக்குக் கட்டளையிட்டிருந்தேன்.



சர்மாவும் அவர் செய்யும் சிறிய தவறுகளை என்னிடம் சொல்லி வந்தார். அவற்றைப் பற்றிக் கேட்டபோது, ''எனக்கு வயதாகிவிட்டதால், இது போல் சில்லறைத் தவறுகள் ஏற்படுகின்றன. இனி ஜாக்கிரதையாக இருக்கிறேன். எல்லாம் ஆண்டவன் கட்டளைப்படி நடக்கும்'' என்றார் அந்தக் கிழவர்.

நான் அவர்மீது அடிக்கடி புகார் கூறி வந்ததை என் தந்தை விரும்பவில்லை. ஒரு நாள் என்னை அழைத்து ''அவர் மீது நீ இனிமேல் எந்தவித புகாரும் சொல்லக் கூடாது. அவர் வேலையில் நீ தலையிடக் கூடாது. நான் அதைக் கவனித்துக் கொள்கிறேன். அவருக்கு எஜமானன் நீ அல்ல!'' என்று என்னிடம் கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

இதிலிருந்து நான் அந்தக் கிழவரை என்னுடைய ஜன்ம விரோதியாகக் கருத முற்பட்டேன்.

ஒரு நாள் சர்மா என்னிடம் ஓடிவந்தார். ''கிழவர் ஒரு பெரிய தவறு செய்து விட்டார். ஏதோ சொந்த அவசரத்துக்காக நூறு ரூபாய் எடுத்துக் கொண்டு போனார். கணக்கில் எழுத மறந்து விட்டார். உடனே உங்கள் தந்தையை அழைத்துக் கொண்டுவந்து காட்டுங்கள்'' என்றார்.

கிழவர்மீது என் தந்தைக்கு உள்ள மதிப்பைக் குலைப்பதற்கு இதைக் காட்டிலும் அரிய சந்தர்ப்பம் எங்கு கிடைக்கப் போகிறது! இத்தகைய தவறை என் தந்தை மன்னிக்கமாட்டார் என்பது எனக்குத் தெரியும்.

உடனே என் தந்தையைப் போய் அழைத்து வந்தேன். விஷயத்தைச் சொன்னபோது என் தந்தையின் முகத்தில் தோன்றிய மாறுதலைக் கண்டு உள்ளூற மகிழ்ச்சி அடைந்தேன்.

சர்மாவும் கூட இருந்தார். கிழவரின் கைப்பெட்டிச் சாவி ஒன்று என் தந்தையிடமும் இருப்பது வழக்கம். ஆனால், என்ன ஆச்சரியம்! பெட்டியைத் திறந்து தொகையை எண்ணியபோது கணக்கில் கண்டபடி சரியாக இருந்தது. அதை என் தந்தை எண்ணிப் பார்த்தார்; நானும் எண்ணிப் பார்த்தேன்; சர்மாவும் எண்ணிப் பார்த்தார்.

உடனே என் தந்தை ரௌத்ராகாரமாக என் பக்கம் திரும்பினார். ''நானும் கிழவரும் பாங்கியிலிருந்து விலகிக் கொள்கிறோம். நீயே பாங்கியின் நிர்வாகத்தை நடத்திக் கொள்'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.

என் வாழ்க்கையிலே அதற்கு முன் ஒரு காலத்திலும் என் தந்தை என்னிடம் அப்படிக் கோபித்துக் கொண்டதில்லை.

என் தந்தையின் கோபத்துக்கு நான் ஆளாக வேண்டும் என்பதற்காகச் சர்மாதான் அவ்விதம் சூழ்ச்சி செய்தாரோ என்று கூட எனக்குச் சந்தேகம் உண்டாயிற்று.

உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக மறுநாள் கிழவரின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். கிழவர் வந்ததும் வராததுமாகத் தம் சட்டைப் பையிலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கைப்பெட்டிக்குள் வைத்தார். 'அது என்ன!' என்று கேட்பவன்போல் அவரைப் பார்த்தேன்.

"நேற்று மாலை வீட்டுக்குப் போகும் போது சில்லறைத் தொகைக் கைப்பெட்டியிலிருந்து நூறு ரூபாய் எடுத்துச் சென்றேன். இன்று பாங்கிக்கு வரும்போது அதைக் கொண்டு வந்து விடலாம் என்ற உத்தேசத்தில். கணக்கில் குறிப்பிடவில்லை" என்றார் கிழவர்.

அப்படியானால் முதல்நாள் நாங்கள் எண்ணியது தவறு! மறுபடியும் எண்ணிப் பார்த்தேன். கிழவர் கொண்டு வந்த பணம் சேர்ந்த பிறகு நூறுரூபாய் அதிகமாக இருக்க வேண்டும் அல்லவா! இல்லை! நேற்று நாங்கள் எண்ணிய போது என்ன தொகை இருந்ததோ அதே தொகைதான் இருந்தது!

நான் பிரமித்துப் போனேன். பக்தர்களுக்கு அவமானமோ ஆபத்தோ நேர்ந்த போதெல்லாம் கடவுள் வந்து காப்பாற்றியதாகப் புராணக் கதைகள் கூறுகின்றன. அதுபோல் அல்லவா இருக்கிறது இந்தச் சம்பவம்! இது என்ன மந்திரமா அல்லது மாயமா! மேற்படி அனுபவத்திற்குப் பிறகு, நம்முடைய திறமை, மேதை, கற்பனை, சூழ்ச்சி எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட ஏதோ ஒரு சக்தி இருக்கிறது என்ற எண்ணம் என் மனத்தின் ஒரு மூலையில் சிறிது இடம் பெற்றது!

* * *

ஒருநாள் என் தந்தை என்னிடம் ஐம்பதாயிரம் ரூபாய் செக் ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தார். "இந்தச் செக் காசியிலிருந்து வந்திருக்கிறது. ராம் ஸ்வரூப்பின் பாங்கியிலிருந்து இன்று ஐம்பதாயிரம் ரூபாய்க்குச் செக் அனுப்பப் போவதாகக் கேள்விப்பட்டேன். அதற்குப் பணம் வேண்டும் அல்லவா! காசி செக்கிலிருந்து ஈடு செய்து கொள். இச் சமயத்தில் கொடுக்கல் இனங்களை இயன்ற வரையில் குறைத்துக் கொள்வதும் நல்லது" என்று சொன்னார்.

"நீங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று அலட்சியமாகச் சொல்லி வைத்தேன்.

காசியிலிருந்து வந்திருந்த செக்கைப் பத்திரமாக என் கைப் பெட்டி டிராயரில் வைத்தேன். பிறகு வேறு அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கினேன்.

மணி 10—15 ஆயிற்று. பாங்கியிலிருந்து பணம் வாங்கிவருவதற்காக மேற்படி செக்கைப் பார்த்த போது, அது பெட்டியில் இல்லை! அரை மணிக்கு முன் வைத்த செக் எங்கே மாயமாக மறைந்துவிடும்! பெட்டியை யெல்லாம் தேடிப் பார்த்தேன். டிராயர்களை வெளியே எடுத்துப் பார்த்தேன். என் மனம் பட படவென்று அடித்துக் கொண்டது. என் கைகள் நடுங்கின.

பத்தரை மணி அடித்ததுதான் தாமதம், ராம் ஸ்வரூப் பாங்கியிலிருந்து ஐம்பதாயிரம் ரூபாய்க்குச் செக்கைக் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

அதைக் கண்டதும் என் தலை சுற்றியது. அச் சமயம் அங்கு வந்த என் தந்தை காசி செக் காணமற் போய்விட்டது என்பதைக் கேட்டதும் மூர்ச்சையுற்றார்.

இந்தச் சமயத்தில் கிழவர் வந்து, "உங்கள் தந்தையைக் கவனியுங்கள். சிறிதும் கவலைப்பட வேண்டாம். எல்லாம் ஆண்டவன் கட்டளைப்படி நடக்கும். ஆண்டவன் நம்மைக் கைவிட மாட்டார்" என்றார்.

எனக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. "நீங்கள் வெளியே போய்விடுங்கள். ஆண்டவன் உதவியின்றி என்னால் நிலைமையைச் சமாளிக்க முடியும்!" என்று கத்தினேன்.

எனக்கு ஒரு யோசனை தோன்றியது. இம்பீரியல் பாங்கி ஏஜண்டு மார்ட்டினை எனக்குத் தெரியும். டெலிபோனில் அவரைக் கூப்பிட்டேன். "அவசரமாக ஐம்பதாயிரம் ரூபாய் வேண்டும். அனுப்புகிறீர்களா!" என்று கேட்டேன்.

அவர் சிறிது தயங்கினார். பிறகு "சரி, ஆனால் அதற்குமேல் எதுவும் தர முடியாது. ராம் ஸ்வரூப் பாங்கியிலிருந்து இன்று ஐந்து லட்சம் ரூபாய் வாங்கிக் கொண்டு போயிருக்கிறார்கள்" என்றார். அவரது தொனி மிகவும் கண்டிப்பாக இருந்தது.

நான் என் தந்தையை வீட்டில் கொண்டு போய் விடும்படி ஒரு குமாஸ்தாவை அனுப்பி விட்டு, இம்பீரியல் பாங்கியிலிருந்து தொகை வாங்கி வரும்படி கிழவரை அனுப்பினேன்.

இதற்குள் எங்கள் பாங்கியில் ஏற்பட்ட பண முடையும், அதனால் என் தந்தை மூர்ச்சையுற்று விழுந்ததும் எப்படியோ நகரம் எங்கும் பரவி விட்டது. ராம் ஸ்வரூபும் எங்களுக்கு விரோதமாகப் பல வதந்திகளைக் கிளப்பி வருவதாகத் தெரிந்தது.

உடனே பாங்கியில் பணம் போட்டிருந்தவர்கள் தங்கள் தொகைகளை வாபஸ் செய்து கொள்வதற்காகக் கூட்டம் கூட்டமாய் வந்து விட்டார்கள்.

எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. உடனே டெலிபோன் மூலம் மறுபடியும் இம்பீரியல் பாங்கி உள்படப் பல இடங்களில் முயற்சித்துப் பார்த்தேன்.

பாங்கிக்கு வெளியில் ஜனங்களின் கூக்குரல் அதிகமாயிற்று. பணம் வாங்க வந்தவர்களைக் காட்டிலும் வேடிக்கை பார்க்கக் கூடியவர்களின் தொகை அதிகமாக இருந்தது.

அடிக்கடி டெலிபோனில் 'நிலைமை எப்படி இருக்கிறது!' என்று என் தந்தை விசாரித்துக் கொண்டிருந்தார்.

"எல்லோரும் அமைதியாக இருந்தால் சகலருக்கும் அவர்கள் போட்டுள்ள தொகை பூராவும் கொடுக்கப்படும். கரண்ட் டிபாசிட் தொகைகளைக் கூடக் கொடுத்து விடுகிறோம்!" என்று ஒரு பெரிய போடாகப் போட்டு வைத்தேன்.





“என் கணவர் ரொம்ப இரக்கமான மனசுள்ளவர்! நேற்றைக்கு நானும் அவரும் சினிமாப் பார்க்கப் போனோம். ஒரு சோகரஸமான கட்டம் வந்தது. அவர் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டார்!”

“பூ! அதுவாவது பரவாயில்லையே! என் கணவர் டிக்கெட் வாங்கப் பணம் எடுத்துக் கொடுக்கும்போதே அழுதுவிட்டாரே!”

இது முழுப் புளுகுதான்; கொடுப்பதற்குப் பணம் எங்கே இருக்கிறது! அப்படிக் கூறினால் ஜனங்களுக்கு பாங்கியின்மீது நம்பிக்கை ஏற்பட்டுவிடும் என்பது என் எண்ணம்.

நான் எண்ணியது வீண் போகவில்லை. ஜனங்களின் கூக்குரல் தணிந்தது. நான் கூறியதில் சிலருக்கு நம்பிக்கை உண்டாகத்தான் செய்தது. நெருக்கி முன்னேறிக் கொண்டு வந்த ஜனங்கள் சிறிது நின்றனர். ஏன், பலர் அவநம்பிக்கை மறைந்து பின் வாங்கவும் ஆரம்பித்தனர்.

என் மருந்து வேலை செய்யத் தொடங்கியதைக் கண்டு நான் உள்ளூற மகிழ்ச்சி யடைந்தேன். அதே மருந்தை இன்னும் அதிகமாக உபயோகித்தால் வெற்றி கிடைத்துவிடும் என்று தோன்றியது.

“கூக்குரலை நிறுத்தி நீங்கள் எல்லாரும் அமைதியாக இருப்பதைக் குறித்துச் சந்தோஷம் அடைகிறேன். இப்போது ஒவ்வொருவராக வந்து தொகையைப் பெற்றுக் கொண்டு போங்கள்” என்று மேலும் சொன்னேன்.

உள்ளே காஷியரும் மற்றக் குமாஸ்தாக்களும் கையைப் பிசைந்து கொண்டனர். மன வேதனையினால் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர்.

என்னுடைய திறமையையும் சமயோசித புத்தியையும் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்!

நான் கேட்டுக் கொண்டபடி யாரும் வரவில்லை. அவர்களுக்குப் பாங்கியிடம் நம்பிக்கை ஏற்பட்டு விட்டது!

அந்தக் கிழவர் எங்கே! இந்தக் காட்சியை அவர் பார்க்க வேண்டும் என்று துடித்தேன். ஒருவேளை அவர் பாங்கியில் எங்கேயாவது உட்கார்ந்து கொண்டு ஜபமாலையை உருட்டிக் கொண்டிருப்பார்! என் யுக்தி பலித்ததை அவரிடம் சொன்னால், அதுவும் ‘ஆண்டவன் கட்டளை’ என்று கூறத் தயங்கமாட்டார்!

ஜனங்களில் பலர் திரும்பிச் செல்ல ஆரம்பித்தனர். மற்றும் சிலர் தயங்கி நின்றனர். இன்னும் சில நிமிஷங்கள் நிலைமை அப்படியே இருக்குமாயின் எல்லோரும் திரும்பி விடுவார்கள் என்று நிச்சயமாகத் தோன்றியது.

* * *

அட பாவிகளா! ராம் ஸ்வரூப் பாங்கியிலிருந்து அந்த இரண்டு விஷமிகளும் முன்னால் வருகிறார்களே!

“எங்களுக்கு இந்த நாற்பதாயிரம் ரூபாய் செக்கிற்குப் பணம் கொடுங்கள்” என்று அவர்களில் ஒருவர் உரத்த குரலில் சொன்னார். அதைக் கேட்டதும் வீடு திரும்பிய ஜனங்கள் மறுபடியும் பாங்கியை நோக்கி வரத் தொடங்கினர்.

ஒரு நொடிப் பொழுதில் நான் கட்டிய கற்பனைக் கோட்டை இடிந்து பொடிப் பொடியாகி விட்டது. என் தந்திரமெல்லாம் வீணாகியதால், என் தலை சுற்றியது. தள்ளாடிக் கொண்டே உள்ளே சென்றேன்.

கிழவரிடம் போய், “நமது பாங்கி அதோகதியாகி விட்டது. இனி மீள்வதற்கு வழியில்லை” என்றேன்.

“எத்தனையோ வருஷங்களாக நீங்கள் அனுபவம் பெற்றவர்களாயிற்றே, இந்த ஆபத்திலிருந்து உய்வதற்கு உங்களுக்கு ஒன்றும் வழி தோன்றவில்லையா!” என்று கைகூப்பிய வண்ணம் அவரைக் கேட்டேன்.

அந்தக் கிழவரிடம் யோசனை கேட்கவே எனக்கு வெட்கமாயிருந்தது. இருந்தாலும் அந்த நெருக்கடியைச் சமாளிக்க நான் எதுவும் செய்யத் தயாரா யிருந்தேன்.

“எனக்கு ஒரு வழி தோன்றுகிறது” என்றார்.

அந்த வார்த்தைகள் அமிருதத்தைப் போல் என் செவிகளில் விழுந்தன. “அந்த வழி என்ன!” என்று ஆர்வம் பொங்கக் கேட்டேன்.

“உள்ளே வாருங்கள்” என்று என் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு சென்றார். எங்கேயோ கத்தை கத்தையாகக் கரன்ஸி நோட்டுகளை வைத்திருக்கிறார் போலிருக்கிறது. என் கையில் எடுத்துக் கொடுக்கப் போகிறார் என்று நினைத்தேன்.

ஆனால் அதற்கு மாறாக, உள்ளே சென்றதும் அந்தப் பைத்தியக்கார மனிதர் கீழே மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டார். என்னையும் அவருடன் உட்கார்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும்படி வற்புறுத்தினார்.

ஒரு விநாடி தயங்கினேன். பிறகு ஒரு யோசனை தோன்றியது. அவருடன் உட்கார்ந்து பிரார்த்தித்தபின், ‘ஆண்டவன் அருள்புரிந்து விட்டாரா’ என்று அவர் முகத்தில் அறைவதுபோல் கூறி, அவரை வெளியே கொண்டுபோய்த் தள்ளி விடுவது என்று தீர்மானித்தேன்.

சில நிமிஷ நேரம் கிழவர் மெய்மறந்து பிரார்த்தித்தார். அவரது நிலை என் மனதை ஓர் உலுக்கு உலுக்கியது. அந்த நெருக்கடியான சமயத்திலும் என் மனத்தில் விவரிக்க முடியாத ஒரு மாறுதலும் அமைதியும் ஏற்பட்டன.

என் வாழ்க்கையிலேயே முதன் முதலாக அன்று தான் நான் சில நிமிஷநேரம் ஆண்டவனைப் பிரார்த்தித்தேன்!

பாங்கி வாசலில் ஜனங்களின் கூக்குரல் வரவர அதிகமாகிக் கொண்டிருந்தது.

அதே சமயம் திடீரென்று என் மனத்தில் ஓர் ஒளி தோன்றுவதுபோல் இருந்தது.

காணமற்போன செக்கை எல்லா விடத்திலும் தேடினேனே; டிராயரை எடுத்துவிட்டு மேற் புறத்தைப் பார்க்கவில்லையே!

உடனே எழுந்து ஓடினேன். என் கைப்பெட்டியைத் திறந்து அவசரம் அவசரமாகச் சிறிய டிராயர்களை வெளியே இழுத்தேன். உள்ளே கையை விட்டுத் துளாவியபொழுது மேற்படி செக் மேற்புறத்தில் ஒட்டிக் கொண்டிருப்பதைக் கண்டேன்!

அதைக் கண்டதும் எனக்கு போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது.

அதே சமயம் டெலிபோனில் மணி அடித்தது. "யாரது!" என்று கேட்டேன்.

"நான்தான் இம்பீரியல் பாங்கி மார்ட்டின் பேசுகிறேன். ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேல் எதுவும் கொடுக்க முடியாது என்று சொன்னேன் அல்லவா! உங்கள் பாங்கியைக் கவிழ்ப்பதற்காக ராம் ஸ்வரூப் பாங்கியார் பலவித சூழ்ச்சிகளைச் செய்து வருவதாகவும், உங்கள் பாங்கிக்கு எதிரே ஜனக்கூட்டம் தாங்க முடியாமல் இருக்கிறது என்றும், எனவே உங்கள் பாங்கிக்கு உதவிசெய்ய வேண்டியது அவசியம் என்றும் இரண்டொரு நிமிஷங்களுக்கு முன் ஒருவர் வந்து சொல்லிவிட்டுப் போனார். அதிலிருந்து என்மனம் மாறிவிட்டது. இத்தகைய சந்தர்ப்பங்களில் உதவிசெய்ய வேண்டியது இம்பீரியல் பாங்கியின் கடமை அல்லவா! நீங்கள் பயப்பட வேண்டாம். எவ்வளவு தொகை வேண்டுமாயினும் கொடுக்கிறேன். கேட்பவர்களுக்கெல்லாம் ஆட்சேபனையின்றிப் பட்டுவாடா செய்துவிடுங்கள்!" என்றார்.

என் கண்களில் கண்ணீர் பெருகியது. நாத் தழு தழுக்க 'வந்தனம்' என்றேன்.

கிழவரிடம் ஓடிவந்தேன். அவர் அப்போது கூடப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்.

அதற்கு முன் அவரை வெறுத்தும் ஏளனம் செய்தும் வந்த நான், அடிமேல் அடி வைத்துச் சென்றேன். அவரது மெய்மறந்த நிலையைக் கலைக்க நான் துணியவில்லை.

அது வரையில் அவரை அரைப் பைத்தியம் என்று நினைத்துக் கொண்டிருந்த எனக்கு, அப்போது ஒரு மகாரிஷி தவத்திலிருந்து கண்களைத் திறப்பது போல் தோன்றியது.

"நம்மை ஆண்டவன்தான் காப்பாற்றினார். எவ்வளவு தொகை வேண்டுமாயினும் கொடுப்பதாக மார்ட்டின் உறுதி கூறிவிட்டார்" என்றேன்.

"எல்லாம் ஆண்டவன் கட்டளைப்படி நடக்கும்" என்று கூறிக் கிழவர் எழுந்திருந்தார்.

அப்போதுதான் முதல் தடவையாக அந்தக் கிழவரிடம் எனக்குப் பயமும் பக்தியும் மதிப்பும் ஏற்பட்டன.

எங்களுக்காக மார்ட்டினிடம் பரிந்து பேசியவர் யார் என்ற மர்மத்தை நாங்கள் பின்னர் எவ்வளவோ விசாரித்தும் கூட அறிந்து கொள்ள முடியவில்லை!

சூரியனுக்கு எதிரே அகல் விளக்கு எம்மாத்திரம்! அதுபோல் உலகிலே அழிக்கவும் ஆக்கவும் வல்ல தெய்விக சக்திக்கு முன்னிலையில் என் அற்ப யுக்தி எம்மாத்திரம் என்பது அப்போதுதான் எனக்குத் தெரிந்தது!



லிபியா

இதுவரையில் கீழ்க்கண்ட பன்னிரண்டு மத்திய கேந்திர நாடுகளைப் பற்றிய விவரங்கள் வெளியாகி யுள்ளன :

ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக். சௌடி அரேபியா, யேமன், ஓமான், எகிப்து, டிரான்ஸ்ஜார்டன், பாலஸ்தீனம், சிரியா, லெபனன், துருக்கி.

மத்திய கேந்திர நாடுகளைச் சூழ்ந்துள்ள மற்றும் சில தேசங்கள் அரசியல் ரீதியாகவும் மத ரீதியாகவும் அந் நாடுகளுடன் நெருங்கிய தொடர்புடையவை.

எனவே, அவைகளைப் பற்றியும் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டியது அவசியம்.

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்துக்கு இணங்க, சில வாரங்களுக்கு முன் சுதந்திரம் பெற்ற லிபியா நாட்டை முதலில் எடுத்துக் கொள்வோம்.

லிபியா தேசத்தில், கிரேக்கர், ரோமியர், எகிப்தியர், அராபியர், துருக்கியர் முதலிய பல்வேறு சாம்ராஜ்யத்தினரும் ஆட்சி செலுத்தியது உண்டு.

கடைசியாக, 1912-ம் ஆண்டில் இத்தாலியர்கள் அந்த நாட்டின்மீது படையெடுத்துத் துருக்கியர்களிட மிருந்து அதைத் தங்கள் வசப்படுத்திக் கொண்டார்கள்.

எனினும் லிபியாவில் உள்ள அராபியர்கள் எளிதில் இத்தாலியர்களிடம் பணிந்துவிடவில்லை; பல விதத்திலும் அவர்களை எதிர்த்து வந்தார்கள். இத்தாலியில் முசோலினியின் ஆட்சி ஏற்பட்ட பிறகு, லிபியாவை அடக்குவதற்காகப் போர் முறைகள் கைக் கொள்ளப்பட்டன. அதன் பிறகுதான் 1932-ல் லிபியாவை இத்தாலியர்கள் முற்றிலும் தங்களுடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முடிந்தது.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் ஒரு கோரமான கட்டம் லிபியாவில்தான் நிகழ்ந்தது. ஜெர்மன் துருப்புகளுக்கும் பிரிட்டிஷ் துருப்புகளுக்கும் அப்போது நடந்த போரில் டோப்ரூக், பென்காஸி முதலிய முக்கிய நகரங்கள் பல தடவை கைமாறின! இறுதியில் ஜெர்மன் துருப்புகள் அடுத்துள்ள டுனீசியாவுக்குப் பின்தாங்கின. கடைசியில் மேற்படி துருப்புகள் பிரிட்டிஷாரிடம் சரணடையவும் நேர்ந்தது.

பிறகு யுத்தம் முடியும் வரையில் லிபியா பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தில் இருந்தது.

யுத்தம் முடிந்த பின் அந்த நாட்டைப் பிரிட்டிஷ் துருப்புகளின் மேற்பார்வையில் இத்தாலிய சர்க்காரே ஆட்சிபுரிந்து வந்தனர்.

1947—ம் வருஷம் இத்தாலியுடன் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கைக்கு இணங்க, சென்ற டிசம்பர் மாதம் லிபியா சுதந்திரம் பெற்றது. லிபியாவில் மக்களின் மதிப்பைப் பெற்றவரும் மதத் தலைவருமான அறுபத்து மூன்று வயதுள்ள அமீர் சையது இட்ரிஸ் லிபியாவின் புதிய மன்னரானார். பிரிட்டிஷ் நிர்வாகிகள் தங்களுடைய அதிகாரங்களை மேற்படி மன்னரிடமும் லிபியா மந்திரிகளிடமும் ஒப்புவித்தனர்.

* * *


சுமார் ஏழு லட்சம் சதுர மைல் விஸ்தீரணம் உள்ள லிபியா வட ஆப்பிரிக்காவின் ஓரத்தில் இருக்கிறது. அது எகிப்து, சூடான், பிரஞ்சு மேற்கு ஆப்பிரிக்கா, அல்ஜீரியா, டுனிசியா, மத்திய தரைக்கடல் இவற்றால் சூழப்பட்டிருக்கும் தேசமாகும்.

லிபியாவின் கடற்கரை ஆயிரத்து முந்நூறு மைல் தூரம் இருப்பதால், அந்த நாட்டில் பல சிறந்த துறைமுகங்கள் இருக்கின்றன.

லிபியாவின் ஜனத்தொகை பத்து லட்சத்துக்கு மேல் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். அந்த நாட்டில் பெரும் பகுதி பாலைவனமாக இருப்பதே குறைவான ஜனத்தொகைக்குக் காரணம்.

மேற்படி நாட்டின் மொத்தஜனத் தொகையில் தொண்ணூறு சத விகிதத்துக்கு மேற்பட்டவர் முஸ்லிம்களாவர்.

பார்லி விவசாயத்தையும், ஆடுகள், ஒட்டகங்கள் வளர்ப்பையுமே லிபியா மக்கள் முக்கிய ஜீவனமாகக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் போக்குவரத்துக்கு ஒட்டகங்



களே இன்றியமையாத சாதனமாக இருக்கின்றன. ஒட்டகங்களின் இறைச்சியும் பாலும் லிபியா மக்களின் முக்கிய உணவாக உபயோகப் படுகின்றன!

பண்டைய காலத்தில் லிபியாதான் ரோமிய சாம்ராஜ்யத்தின் தான்யக் களஞ்சியமாக இருந்து வந்தது.

லிபியாவின் தலைநகரான திரிபோலியிலிருந்து ஐரோப்பாவுக்கு நெருப்புக் கோழி இறகுகள் ஏராளமாக ஏற்றுமதியாகின்றன.

திரிபோலி சிறந்த துறைமுக மாதலால், இரண்டாவது மகா யுத்தத்தின்போது அது தான் ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் இராணுவத்தின் தலைமை ஸ்தானமாக இருந்தது.

பண்டைய காலத்தில் புதையுண்ட பல நகரங்கள் லிபியாவில் சமீபகாலமாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

லிபியாவில் ஒரு கலாசாலை கூட இல்லை! வெளி நாடுகளில் சென்று படித்த பத்து அல்லது பதினைந்து பட்டதாரிகள்தான் இருக்கிறார்கள்!

அங்கு ஒரு டாக்டரோ, இஞ்ஜினியரோ இல்லை. இரண்டு அல்லது இரண்டரை லட்சம் பேர்களைத் தவிர மற்றவர்களுக்குக் கையெழுத்துக்கூட போடத் தெரியாது. இதிலிருந்து அந்த நாடு கல்வித் துறையில் எவ்வளவு பிற்போக்கானது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

மேற்படி நாட்டில் ஒருவிதமான கொடிய கண் நோய் ஏற்படுவதால் பத்து சத விகித ஜனங்கள் அந்தகர்களாக இருக்கிறார்கள்.

* * *

லிபியாவைப் போல் அடுத்துள்ள டுனிசியாவும் பல்வேறு சாம்ராஜ்யங்களின் ஆதிக்கத்துக்கு உட்பட நேர்ந்தது. கடைசியாக முஸ்லிம் சாம்ராஜ்யத்தின் ஒரு பாகமாக இருந்த டுனிசியா மீது பிரஞ்சுக்காரர்கள் படையெடுத்து, 1883-ம் ஆண்டில் அதைத் தங்கள் வசப்படுத்திக் கொண்டார்கள். அதிலிருந்து இன்று வரையில் அச்சிறிய நாடு அவர்களின் ஆதிக்கத்திலேயே இருந்து வருகிறது.

ஆனால் சென்ற மகா யுத்தத்தின் போது பிரான்ஸ் வீழ்ச்சி யடைந்த பின் டுனிசியா ஜெர்மானியர்களின் வசமாயிற்று. 1943-ல் பிரிட்டிஷ் அமெரிக்கத் துருப்புகள் திரும்பவும் அதை ஜெர்மானியர்களிட மிருந்து கைப் பற்றினர். யுத்தம் முடிந்த பிறகு பிரிட்டிஷ், அமெரிக்கர்கள் அந்த நாட்டை மீண்டும் பிரான்ஸிடம் ஒப்புவித்து விட்டார்கள்.

டுனிசியா மக்கள் தங்களுக்குச் சுதந்திரம் கோரி, சென்ற பல தினங்களாக நாடெங்கும் கிளர்ச்சி செய்து வருகிறார்கள்.

* * *

சுமார் ஐம்பதாயிரம் சதுர மைல் விஸ்தீரணம் உள்ள டுனிசியாவில் இருபத்தைந்து லட்சம் ஜனங்களுக்கு மேல் வசித்து வருகிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் அராபியர்கள்தான்.

அந்த நாட்டில் லட்சக்கணக்கில் பிரஞ்சுக்காரர்களும், இத்தாலியர்களும் இருக்கிறார்கள். உயர்ந்த பதவிகளை வகிப்போர் யாவரும் இவர்கள்தான். அந்த நாட்டின் வர்த்தகமும் அன்னியர்களான இவர்களின் கையில்தான் இருக்கிறது.


டுனிசிய மக்கள் விவசாயத்தையே முக்கிய ஜீவனமாகக் கொண்டிருக்கிறார்கள். அங்கு கோதுமை, பார்லி, பழங்கள் முதலியவை அதிகமாக உற்பத்தியாகின்றன.

வெடி மருந்துகளுக்கும் எருவுக்கும் உபயோகிக்கப்படும் ஒருவித பாஸ்பேட் உப்பு டுனிசியாவில் ஏராளமாக உற்பத்தியாகிறது. உலகத்தில் உற்பத்தியாகும் மேற்படி உப்பில் மூன்றில் ஒரு மடங்கு அந்த நாட்டில் மாத்திரம் உற்பத்தியாகிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

டுனிசியாவின் தலைநகரான டுனிஸை அடுத்துத்தான் அழிந்துபோன சரித்திரப் பிரசித்திபெற்ற கார்த்தேஜ் நகரின் சின்னங்கள் இருக்கின்றன.

சென்ற மகா யுத்தத்தின் கொடுமைக்கு டுனிஸ் நகரமும் இலக்காக நேர்ந்தது.


சென்னை பாரகன் & பிராட்வேயிலும்
மற்றும்
தமிழ் நாடெங்கும்
பெப்ரவரி
9ம் முதல்
NCP
நாகூர் ஸினி ப்ரொடக்ஷன்ஸ்
அமரகவி
நடிகர்கள்:
M.K. தியாகராஜ பாகவதர்
T.R. ராஜகுமாரி
ஸ்டுடியோ:
நியூடோன்







குப்புவும் சுப்புவும் வெளியே உலாவச் சென்றார்கள். அப்போது குப்பு திடீரென்று, "ஐயோ, சுப்பு, அதோ பார் ஒரு சிங்கம்! அதன் பக்கத்தில் ஒரு குழந்தை!" என்று அலறினான். சுப்பு தைரியமாகத் தன் கோட்டைக் கழற்றிக் கையில் சுற்றிக் கொண்டு சிங்கத்தை நெருங்கினான். சிங்கம் பயங்கரமாகக் கர்ஜித்தது. சுப்பு அதனிடம் இப்படியும் அப்படியும் பாய்ச்சல் காட்டி 'லபக்' கென்று குழந்தையை எடுத்துக் கொண்டு குப்புவினிடம் வேகமாக ஓடி வந்தான்.

அப்பொழுது "யாரது? குழந்தையைக் கீழே விடு!" என்று அதட்டிக் கொண்டே ஒருவர் வந்தார். "அது என் குழந்தை. சிங்கமும் எங்கள் சர்க்கஸ் கம்பெனிச் சிங்கம். ஒருவரையும் ஒன்றும் செய்யாது. பழகிய சிங்கம்!" என்றார். சுப்பு குழந்தையைக் கீழே விட்டான். பிறகு அவன் குப்புவைப் பார்த்து, "குப்பு, இந்தச் சம்பவத்தைச் சொன்னால் ஆண்பிள்ளைச் சிங்கங்களெல்லாம் கேட்டு நடுங்குவார்கள்!" என்றான்.



7. கமலத்தின் வனவாசம்

அந்தப் பொன் இறகைக் கையில் வாங்கும்போது கமலத்தின் கைகள் நடுங்கின. மளமளவென்று கண்ணீர் அருவியாகப் பெருகி இரண்டு கன்னங்களிலும் வழிந்தது.

ஆகா! அந்தப் பொன் இறகு தான் என்ன பளபளப்பாயிருந்தது! தகதக வென்று மின்னிக் கமலத்தின் கண்களைப் பறித்தது.

அந்தக் கிழவி பார்த்ததாகக் கூறிய பதினொரு அன்னப் பறவைகளும் அவளுடைய சகோதரர்களாகத் தான் இருக்க வேண்டும். சித்தி எவ்வளவு அநியாயமான காரியத்தைச் செய்துவிட்டாள்! ராஜ்யம் ஆளவேண்டிய பதினொரு இளவரசர்களையும் அன்னப் பறவைகளாக்கி யிருக்கிறாளே!

கமலத்துக்குச் சிந்தனையே ஓடவில்லை. அந்த இறகையும் வெகு நேரம் பார்க்க முடியாமல் அவள் கண்களில் குபுகுபு வென்று கண்ணீர் பெருகி மறைத்தது.

"பாட்டி, நானும் உன்னோடு அந்த இடத்துக்கு வருகிறேன். அந்தப் பறவைகள் இருக்கும் இடத்தை எனக்குக் காட்டுகிறாயா?" என்று கமலம் அடங்காத ஆவலோடு கேட்டாள்.

"கமலம், அந்தப் பொன்னிற அன்னப் பறவைகள் எங்கே யிருக்கின்றன என்று எனக்குத் தெரியாது. அங்கே கடற்கரையை ஒட்டி ஒரு குன்று இருக்கிறது. அந்தக் குன்றின் சாரலில் தான் அந்தப் பறவைகளை நான் பார்த்தேன். சிறிது நேரத்துக்கெல்லாம் அவைகள் பறந்து எங்கேயோ போய் விட்டன. நான் உன்னை அழைத்துக் கொண்டு போவதைப்பற்றி எனக்கு ஒன்றும் ஆட்சேபனை யில்லை. அந்த அன்னங்கள் தான் உன் சகோதரர்கள் என்று எப்படித் தீர்மானிப்பது? அப்படியே அது உண்மையாயிருந்தாலும் மறுபடியும் அவர்களை எப்படிப் பழைய உருவத்துக்கு மாற்றுவது? இதையெல்லாம் யோசனை செய்து பார்க்க வேண்டாமா?" என்று கேட்டாள் கிழவி.

உண்மையிலேயே கமலம் இதுவரையில் அதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவில்லை. இப்பொழுது கிழவி கூறியதைக் கேட்டதும் அவளுக்கு பகீர் என்றது.

"பாட்டி, நான் உலகந் தெரியாத பெண். என்னத்தைச் செய்யட்டும்? அரண்மனையை விட்டு இந்தப் பதினேழு வயதுவரையில் எங்கும் போனதில்லை. கூண்டுக் கிளிமாதிரி வளர்ந்து வந்தேன். ஆனால் இதெல்லாம் அரண்மனையில் இருந்த வரையில் தான். இனிமேல் எனக்கு இந்த வனப் பிரதேசம் தான் அரண்மனை. இங்கே கிடைக்கும் ஆகாரம் தான் எனக்கு உயர்ந்த ஆகாரம். எப்படியாவது அந்தக் கடற்கரைக்குப் போய் விட்டால் பறவைகளைப் பார்க்க முடியும் அல்லவா? அன்னப் பறவைகளை நீ அங்கே பார்த்தபடியினாலே அவைகள் மறுபடியும் அங்கே வரலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எதற்கும் நான் கடற்கரைக்குப் போனால்தான் இதற்கு ஒரு வழி தேட முடியும் என்று என் மனசுக்குப் படுகிறது!" என்றாள் கமலம்.

"அது சரிதான். அந்தப் பறவைகள் நாம் அங்கே போகும் தினத்தில் வரவேண்டுமே! வந்தாலும் உன்னை அவைகள் தெரிந்து கொள்ள வேண்டுமே! எல்லாவற்றுக்கும் நான் சொல்லும் யோசனைப்படி நடக்கிறாயா?" என்று கேட்டாள் கிழவி.

"தாராளமாய்ச் செய்கிறேன், பாட்டி! உன்னால் தான் நான் இந்தக் காரியத்தில் வெற்றி பெற முடியும். உன் யோசனை என்ன? சொல்லு, பாட்டி!" என்று ஆவலோடு கேட்டாள் கமலம்.

"நீ என்னுடன் சில நாள் இருந்து அரண்மனையிலிருந்து நடந்து வந்த அலுப்பை

யெல்லாம் போக்கிக் கொள். நான் அதற்குள் அந்தக் குன்றின் அடிவாரத்தில் தங்கியிருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்கிறேன். இரண்டு மூன்று தடவை நான் அங்கே போய் வர வேண்டியிருக்கும். நீயும் அநாவசியமாக என்னோடு என்னத்துக்காக அலைய வேண்டும்? குடிசை போட்டு எல்லா வசதிகளும் செய்து முடிந்ததும் நீ என்னோடு வரலாம். ஏனென்றால் நாம் இங்கிருந்து கொண்டு தினம் அங்கே போய்ப் பார்த்து வர முடியாது. மேலும் அன்னப் பறவைகள் எந்த நேரத்தில் அங்கே வருகின்றன என்று நமக்குத் தெரியாது. ஆகையினால் இந்த யோசனைதான் சரியென்று எனக்குப் படுகிறது. உன் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டாள் கிழவி.




கமலத்தின் முகம் மலர்ந்தது. சற்று முன் இருந்த வாட்டம் இப்பொழுது கொஞ்சம் கூட இல்லை. சந்தோஷத்தோடு கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"பாட்டி, உனக்கு நான் எவ்விதம் நன்றி செலுத்தப் போகிறேன்? மனித சஞ்சாரமே இல்லாத இந்தப் பயங்கரக் காட்டில், தன்னந் தனியாக அநாதையாக வந்த எனக்கு நீ உயிர் கொடுத்தாய்! நான் காட்டுப் பாதையில் மரத்தின் வேரில் தடுக்கி விழுந்த போது மூர்ச்சையாகி விட்டேனே! அந்தச் சமயம் மாத்திரம் நீ வந்திரா விட்டால் நான் அப்போதே இறந்திருப்பேன். அப்படி ஒரு வேளை நான் பிழைத்து வந்திருந்தாலும் அந்தப் பொன்னிற அன்னப் பறவைகளைக் கண்டு பிடித்திருக்கவே மாட்டேன்! இவ்வளவும் போதாது என்று என்னுடன் கடற்கரைக்கு வந்து துணையாயிருந்து உதவி செய்கிறேன் என்கிறாய். ரொம்ப சந்தோஷம். உன் விருப்பப்படியே இங்கே சில நாட்கள் இருந்து விட்டுப் புறப்படுவோம். ஏன் பாட்டி, நானும் உன்னோடு இருந்து குடிசை போடும் வேலைகளில் உதவியாயிருக்கக் கூடாதா? என்னை ஒன்றுக்கும் உதவாத சோம்பேறி என்று நினைத்து விட்டாயா?" என்றாள் கமலம்.

"கமலம், நீ அரண்மனையிலிருந்து அரச போகத்தில் வாழ்ந்தவள். உலகம் அறியாத சின்னப் பெண். தாமரைப் பூவைப் போன்ற உன் முகம், அரண்மனையிலிருந்து நீ வந்து விட்டதனால் எவ்வளவு வாடி விட்டது, தெரியுமா? அமரபுரியின் இளவரசியாகிய உன்னை வேலை செய்ய நான் விடுவேனா? செந்தாமரையைப் போல் இருக்கும் உன் அழகான கைகள் முரட்டு வேலைகளைச் செய்தால் தாங்காது, அம்மா! அங்கே போவதற்கு வேண்டிய ஏற்பாட்டை நான் கவனித்துக் கொள்ளுகிறேன்! இளவரசியாகிய நீ உன் அண்ணன்மார்களைக் கண்டு பிடித்து, அவர்களின்மேல் செலுத்தப் பட்டிருக்கும் மந்திர சக்தியைப் போக்கி, மறுபடியும் அவர்களை அரண்மனைக்கு அழைத்துச் சென்று சந்தோஷமா யிருக்கிறாய் என்று கேட்டால் அதுவே எனக்குப் பரம சந்தோஷமாயிருக்கும்!" என்றாள் கிழவி. கமலத்தின் முகம் சிவந்தது. அவளுக்கு என்ன பதில் சொல்லுவதென்றே தெரியவில்லை.

கடற்கரையில் வசிப்பதற்கு வேண்டிய முக்கிய சாமான்களையெல்லாம் கிழவி சேர்த்தாள். கடற்கரைக்குப் போய்க் குடிசை போட்டு விட்டு வந்தாள். மிச்சம் இருந்த சாமான்களையெல்லாம் மூட்டையாகக் கட்டி இருவருமாகத் தூக்கிக் கொண்டு புறப்பட்டுக் கடற்கரையை அடைந்தனர். கிழவி அங்கே போட்டிருந்த குடிசையில் இரண்டு பேர் வசிப்பதற்கு ஏற்ற சௌகரியங்களெல்லாம் இருந்தன. அரண்மனையில் அடைபட்டுச் சித்தியிடம் இடிபட்டுக் கொண்டிருந்த கமலத்துக்கு இந்த வனவாசம் எவ்வளவோ பிடித்திருந்தது. (தொடரும்)



ஆதார சக்தி



நீங்களும் பெறுக


வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

தினசரி போஜனத்திற்குப் பிறகு ருசிகரமான வாட்டர்பரீஸ் காம்பவுண்டும் சாப்பிட்டு வந்தால் சொற்பகாலத்திலேயே தெம்பும் திடமும் அதிகரிப்பதைக் காண்பீர்கள். தேக உறுப்புகளுக்கு வலுவூட்ட அவசியமான பொருள்கள் நிறைந்த வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் உங்களுடம்பில் திராணி அதிகரிக்கச் செய்யும். களைப்பேற்படாமல் தெம்பூட்டி ஜலதோஷம், இருமல் வராமலிருக்க அதிக எதிர்ப்பு சக்தியும் பெற உதவுகிறது. இளையோர், முதியோர் யாவருக்கும் சிறந்த ஆரோக்கிய டானிக்.

WATERBURY'S
COMPOUND

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

உங்களைத் தெம்புடன் வைத்திருக்கும்



NAS 737

அரையணா



வேம்பு

கோமளபவன் வாசலில் இதுவரையில் எத்தனையோ பிச்சைக்காரர்கள் நின்றிருக்கின்றனர். ஆனால் இப்பொழுதுதான் அந்தத் தொழிலுக்குப் போட்டி அதிகமாய்விட்டதே! கருப்பாயி நிற்கும் அந்த ஏக போகத்தொழிலிடத்திற்கு யார் போட்டியாக வந்தாலும், அவர்கள் மூன்று நாட்கள்கூட அங்கே சேர்ந்தாற்போல் தள்ள மாட்டார்கள்.

செல்லாயியும் இப்போது அங்கே வரவேண்டியதாகி விட்டது. அவள் மட்டும் வரவில்லை. தோளிலே குழந்தையையும் சாத்திக் கொண்டு வந்திருந்தாள்.

"ஐயா, இரண்டு ஜீவனுங்க. இந்தப் பசலைக்குப் பால் வார்க்கவாவது ஏதாச்சும் போடுங்கய்யா"—செல்லாயி உருக்கமாக வேண்டுவாள். அதைக் கேட்டுக் கருப்பாயி முறைத்துப் பார்ப்பாள்.

'சவம் எங்கிருந்தோ வந்திடிச்சே...' என்று முதல் நாளே அவளுடைய முணுமுணுப்புத் தொடங்கி விட்டது. எத்தனையோ பேர் ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு வெற்றிலையை எடுத்துச் சுண்ணாம்பு தடவிக் கொண்டு வருகிறார்கள். எல்லோருமேயா தருமக் காசை வீசி எறிகிறார்கள்? ஒரு கப் காப்பியோ அல்லது வெறும் போண்டா மட்டுமோ சாப்பிட்டுவிட்டு மீதி விழும் அரையணாவைக் காலியான பையில் போட்டுக் கொண்டு யோசனையிலாழ்ந்து வரும் சிலர் காதில்தான், "ஐயா, ஏழைக்கு ஏதானுச்சும் தருமம் போடுங்க" என்ற குரல் கேட்கும். பையிலே சட்டென்று கையைப் போட்டு அரையணாவை வீசிவிட்டு நடப்பார்கள்.

இப்பொழுது அங்கே இரண்டு குரல்கள். "ஐயா, ஏழைக்கு ஏதானுச்சும் தருமம் போடுங்க" "தருமப் பிரபுக்களே! இரண்டு ஜீவன் பிழைக்கணுங்க. பசலைக் குழந்தைக்குப் பாலாவது வாங்கிக் கொடுக்கணுங்க......ஏதானுச்சும் தருமம் போடுங்க."

இப்போது கருப்பாயி, எதிராளி தருமம் போடுகிறானா இல்லையா என்பதையெல்லாம் கவனிப்பதில்லை. செல்லாயியின் குரலைக் கேட்டதும், "ஏய் சவமே......எங்கிருந்தடி நீ வந்தே......காலையிலிருந்து செல்லாத் துட்டுக் கிடைக்கவில்லை......" என்று சீறுவாள்.

செல்லாயி திரும்பிப் பார்ப்பாள். அவள் இதுவரை இம்மாதிரி வசவுச் சொற்களை எங்கும் கேட்டதில்லை. அத்துடன் இந்தப் பிச்சைக்காரியிடமா கடுசொல் கேட்க வேண்டும்? உம்......இங்கும் தொழில் போட்டி!

முதல் இரண்டு நாட்கள் செல்லாயி பதிலே பேசவில்லை. ஆகவே கருப்பாயியின் உக்கிரமான வார்த்தை வீச்சுகள் பலமாக ஆரம்பித்துவிட்டன. தான் வாங்கப் போகும்போது போட்டி போட்டுக் கொண்டு கருப்பாயி தனது தகரக் குவளையை நீட்டிச் சுடுஞ்சொற்களைக் கக்கியவாறு தனக்கு வரும் அரையணாக் காசையும் கெடுக்க முயலும்போது செல்லாயியின் கண்களில் அவளையறியாமலே நீர் ததும்பும்.

பிச்சை எடுக்கவா அவள் பிறந்தாள்? அந்தக் குழந்தையையும் இடுப்பில் சரியாக வைத்துக் கொண்டு தெருவிலே புரளும் அந்தக் கந்தலையும் சரி செய்து கொண்டு எதிர்த்தாற் போலிருந்த திண்ணையில் போய்ப் படுத்து விடுவாள். அந்தத் திண்ணை யொன்றுதான் இப்பொழுது அவளுக்கு ஆறுதலான இடம்.

அருகே கிடக்கும் அந்த இரண்டரை வயதுக் குழந்தையைப் பார்க்கும்போது அவளுடைய எண்ணங்கள் எங்கெங்கோ விரியும். அது அவள் குழந்தையா?......இல்லை......அவள் குழந்தை இருந்து இந்த நிலைக்கும் வரவேண்டுமா? சிச்சீ! இது என்ன பிழைப்பு! மறு பக்கம் திரும்பிப் படுப்பாள்.

செல்லாயி பிச்சை எடுப்பதற்காகச் சென்னைப் பட்டணத்துக்கு வரவில்லை. அவளும், அவள் கணவன் சடையப்பனும் கௌரவமாகத்தான் கிராமத்தில் வாழ்க்கையை ஓட்டி வந்தனர். அவன் மண்வெட்டிக் கொட்டியும், நிலங்களுக்கு எருக்கொட்டியும் சில்லறை வேலைசெய்தும் பிழைத்து வந்தான். செல்லாயியும் சளைக்க வில்லை. கீரைத் தோட்டம் போட்டிருந்தாள். தளதளவென்று வளரும் கீரையைப் பிடுங்கி எடுத்துத் தலையில் சுமந்து பக்கத்து ஊரின் தெருவழியே விற்கப் போனால் சிறிது நேரத்துக்குள்ளாகவே காசு அவளிடம் குலுங்க ஆரம்பித்து விடும். சடையப்பனுக்கு வேலை இல்லாத நாட்களில் அந்தக் கீரைதான் தெய்வம் போல் அரை வயிற்றுக்கு உணவைத் தேடிப்போடும்.

இப்படிக் கௌரவமாகக் குடும்பம் நடத்தி வந்த அவர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்க ஒரு குழந்தையும் பிறந்தது. ஆனால் வானம் சில வருஷங்களாக ஏமாற்றி விடவே, அரை வயிற்றைக் கழுவிக் 'காமா-சோமா' என்று வாழ்க்கையை ஓட்டிவந்த அவர்களைக் கஷ்ட காலம் பிடித்துக் கொண்டது.

கிணற்றில் தண்ணீர் இல்லாமல் என்ன விளைவிக்கிறது நிலத்தில்? பலர் நிலத்தை அப்படியே போட்டுவிட்டு, பட்டணத்தைப் பார்க்கக் கிளம்பினர். பெரிய பெரிய பண்ணைக்காரர்கள் பாடே திண்டாட்டமாக இருக்கும்

போது சடையப்பன் மட்டும் அதற்கு விலக்கா? செல்லாயிக்கும் கீரைப் பாத்தி போட முடியவில்லை. அந்த வட்டாரங்களிலே எந்தக் கிணற்றிலும் தண்ணீர் இல்லை. அந்த ஊரில் பண வசதியுள்ளவர்களே குடம் தண்ணீரை விலை கொடுத்து வாங்கும்போது, இவள் கீரைப் பாத்திக்கு எங்கிருந்து தண்ணீர் கிடைக்கும்?

தினசரி குடிக்கத் தண்ணீர் வேண்டுமே! செல்லாயி எங்கெங்கோ அலைந்து திரிந்து குடம் தண்ணீர் கொண்டு வருவாள். ஒரு நாள் அந்தத் தண்ணீர் சாப்பிட்டதினாலோ என்னவோ, செல்லாயிக்கும் குழந்தைக்கும் நோய் கண்டது. ஒருவாரம் விடாமல் அடித்த ஜுரம் குழந்தையை அவர்களிடமிருந்து பிரித்துவிட்டது. சாப்பாடு இல்லாததுகூடப் பிரமாதமாகப் படவில்லை செல்லாயிக்கு. குழந்தையைக் கடவுள் எடுத்துக் கொண்டது தான் மகா துக்கமாகப் பட்டது. ஆகவே, அந்த ஊரிலேயே இருக்கச் செல்லாயிக்குப் பிடிக்கவில்லை. அவளும் அவளுடைய கணவனுமாக, யாரோ தெரிந்தவர்களது யோசனைப் படி பட்டணத்துக்குக் கிளம்பிச் சென்றனர். பட்டணத்தில் என்ன வேலை குவிந்தா கிடக்கிறது? இரண்டு நாட்கள் அலைந்து திரிந்த சடையப்பன் வாடிய முகத்துடன் வந்தது தான் பலனாயிற்று.

அங்கே ஒரு நாள் கழிப்பது ஒரு யுகம் கழிப்பது போல இருந்தது. இருந்த ஒரு வெள்ளி வளையலைக்கூட விற்றாகி விட்டது.

திரும்பவும் கிராமத்துக்கே போய் எப்படியாவது பிழைக்க வழி தேடிக் கொள்ளலாமா என்று சடையப்பனுக்கு ஒரு யோசனை தோன்றியது. இரண்டு பேரும் போவதென்றால் அதற்குப் பணமில்லை. அதனால், செல்லாயியை அங்கேயே இருக்குமாறு கூறிவிட்டுச் சடையப்பன் மட்டும் ஊருக்கு புறப்பட்டுச் சென்றான்.

நாட்கள் வாரம் எல்லாம் எப்படியோ கெக்கலி கொட்டிக் கொண்டு கடந்து சென்றன. செல்லாயியால் ஒரு வினாடி கூடப் பட்டணத்தில் எந்தத் தொழிலும் செய்யாமல் தள்ள முடியாது போலிருந்தது. ஆனால் ஏதாவது வேலை கிடைத்தால்தானே? வேலை தேடிக் கொண்டு வந்தவள் ஒரு பிளாட்பாரக் கூட்டத்தை வந்தடைந்தாள். அங்கே ஒரு கிழவன் இவளைப் பிரியமுடன் வரவேற்றான்.

“எதனாச்சும் வேலை செய்ய ஏற்பாடு செய்யுங்க, பெரியவரே” என்று கேட்ட அவள் முகத்தைப் பார்த்துக் கடகடவென்று சிரித்தான் அந்தக் கிழவன்.

கிழவன் ஒரு தொழிலதிபன். அவனிடம் அண்டிப் பிழைப்பவர்கள் ஒரு டஜனுக்கு மேலிருந்தனர். எல்லோருக்கும் எப்படிப் பிச்சை எடுப்பது என்பதை கற்றுக் கொடுக்க வேண்டியதுதான் அவன் வேலை. குருட்டுப் பிச்சைக்காரன்போல் ஒருவனும், அவனுக்கு வழி காட்ட ஒரு பெண்ணும்—இப்படியாக ஜோடி சேர்த்து விடுவான். எல்லோரும் இரவு ஏழெட்டு மணிக்குத் தங்கள் தலைமைக் காரியாலயத்தை அடைவர். அவரவர்கள் தங்கள் வாடகையைக் கிழவனிடம் செலுத்தி விடுவர். அதிகமாக இருந்தாலும் அவனிடமே கொடுத்து வைப்பர்.

அந்தக் ‘காம்பில்’ ஒரு நாள் இருந்து பார்த்த பின்தான் செல்லாயிக்கு விவரம் புரிந்தது.



"குருடனுக்குத் துணையாக நடிக்கிறாயா? கர்ப்பமுற்றவள் போல் நடிப்பவளுக்குத் துணையாக நடிக்கிறாயா? எப்படி நடிக்கிறாய்?" என்று கேட்டான் கிழவன். செல்லாயிக்குத் துக்கம் பொங்கி வந்தது. கண்களில் நீர் மல்க ஒன்றும் பேசாமல் நின்றாள்.

"அம்மா! இப்படி இருந்தால் பிழைக்க முடியாது. இங்கே கௌரவத்தை பார்த்தென்னா நடக்காது. கடைசியாகக் கேட்கிறேன். இந்தக் குழந்தைக்குத் தாய்போல் இருக்கிறாயா?"—கிழவன் சற்று வேகமாகவே பேசினான்.

செல்லாயி திரும்பிப் பார்த்தாள். அருகே பரட்டைத் தலையுடன் குழந்தை யொன்று உட்கார்ந்திருந்தது. அவன் தலை மட்டும் என்ன? அதுவும் சிக்குப் பிடித்துப் பேன் பிடித்து விகாரமாகத்தான் இருந்தது!

"இந்தக் குழந்தையைத் தூக்கிக்கணும். 'சாமி, தருமவான்களே! பச்சைக் குழந்தை. பாலுக்காவது எதனாச்சும் போடுங்கய்யா!' என்று கேட்கணும்" என்று சொல்லிக் கொடுத்தான் கிழவன்.

செல்லாயி பார்த்தாள். அவள் செல்வனும் இருந்தால் இந்த நிலைமைதானோ? இதே வார்த்தையைக் கூறித்தான் பிச்சை எடுக்க வேண்டுமோ? இதை எண்ணும்போது அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள். கிழவன் விசித்திரமான செல்லாயியைப் பார்த்து மனசுக்குள்ளேயே ஏதோ முணு முணுத்துக் கொண்டான். 'இது எங்கே இந்தத் தொழிலில் நீடித்திருக்கப் போகிறது?' என்று அவன் ஒருவேளை முணு முணுத்துக் கொண்டானோ, என்னமோ?

செல்லாயி குழந்தையை இடுப்பில் சுமந்து கொண்டு அந்த ஹோட்டல் வாசலுக்கு வந்து சேர்ந்தாள். தனக்கு முன்னமேயே அங்கு ஒருத்தி நின்று கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் முதலில் அவள் தயங்கினாலும், 'இது என்ன பிச்சை எடுப்பதுதானே? யார் எடுத்தாலென்ன? இதில் போட்டி ஏது?' என்றுதான் எண்ணினாள். ஆனால் கருப்பாயியின் சுடுவார்த்தைகள் அவளுடைய உள்ளத்தைத் தைத்தன.

இந்த நினைவுகளோடு திண்ணையில் படுத்திருந்தவள் அப்படியே தூங்கி விட்டாள். அருகே இருந்த குழந்தை — வாடகைக் குழந்தை அழ ஆரம்பித்த போதுதான் திடுக்கிட்டு விழித்தாள். சாயங்காலம் ஆறு மணியாகிவிட்டது. அவள் தொழில் மும்முரமாக நடக்கும் நேரம். அன்று காலையிலிருந்து காலணா வரும்படி இல்லை. பசியோ காதையடைத்தது.

குழந்தையைத் தூக்கிக் கொண்டு வேகமாக ஹோட்டல் வாசலை நோக்கி நடந்தாள்.

வெகு நேரமாக நின்று பார்த்தாள். சாப்பிட்டுவிட்டு வரும் ஒவ்வொருவரையும் பின்னால் தொடர்ந்து போய்ப் பார்த்தாள். ஆனால் பலன் என்னவோ ஒன்றும் ஏற்படவில்லை.

"சாமி, தருமப் பிரபு...குழந்தைக்கேனும் பால் வாங்கிக் கொடுக்கிறேன். ஒரு அரையணா கொடுங்க, தருமப் பிரபோ..." என்றாள். அவள் இப்பொழுது உண்மையைத் தான் சொன்னாள். அந்தக் குழந்தை அழுது கொண்டிருந்தது. அதன் அழுகைக் குரல் செல்லாயியின் உள்ளத்தில் வேதனையைத் தூண்டிவிட்டது. கருப்பாயிக்கோ 'நல்லா வந்தாள் இவள்! குழந்தையையும் எடுத்துக் கொண்டு! நல்ல வேஷம் போடுகிறாள்!' என்று தோன்றியது.

சிவக்கச் சிவக்க வெற்றிலையைத் தினித்துக் குதப்பிக் கொண்டு 'ஹோ ஹோ' என்று பேசிக் கொண்டே, ஹோட்டலிலிருந்து இறங்கினது ஒரு கோஷ்டி.

"சாமி, ஏதாச்சும் தருமம் போடுங்க, சாமி!"

"ஐயா, புண்ணியவான்களே, காலணாப் போடுங்க, ஐயா!"

"சாமி...இந்தக் குழந்தை முகம் பார்த்துத் தர்மம் போடுங்க, சாமி."

இரண்டு பேரும் சேர்ந்து அந்தக் கோஷ்டியைத் துளைத்துவிட்டார்கள்.

அந்தக் கோஷ்டியில் ஸில்க் சொக்காய் போட்டிருந்த ஒருவன் தன் பிளாஸ்டிக் பர்ஸைத் திறந்து ஒரு அரையணாவை எடுத்துச் செல்லாயியின் குவளையில் 'டங்' என்று போட்டுவிட்டு, 'இரண்டு பேரும் எடுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லிப் போனான்.

செல்லாயி குவளையைப் பார்த்தாள். அரையணா நாணயம். அருகே இருந்த வெற்றிலைப் பாக்குக் கடைக்கு ஓடிப் போய் இரண்டு காலணாவாக மாற்றிக் கொண்டு வந்து கருப்பாயிடம் ஒரு காலணாவை நீட்டினாள்.

கருப்பாயிக்கு மகா ஆத்திரம் வந்தது. இந்தப் பிச்சைக்காரச் சவத்தினிட மிருந்தா நான்

சுயேச்சை அபேட்சகர்



மனைவி:—தேர்தலில் தோற்றுப் போனதற்கு எதற்காக இப்படி அழுகிறீர்கள்? அழாதீர்கள்! ஜெயித்தவர் எங்கே போய்விடப் போகிறார்? அடுத்த எலெக்ஷனில் நானே நின்று அவரைத் தோற்கடித்து விடுகிறேன்.

வாங்கிக் கொள்ளவேணும் என்று கோபம் கோபமாக வந்தது. செல்லாயி காலணாவை நீட்டியவுடன் கருப்பாயி நாய்போல் 'வள்' என்று விழுந்தாள்.

“ஏண்டி, பொய் சொல்கிறாய்? அந்த ஆள் கட்டை இரண்டணா அல்லவா போட்டார்! காலணாவை நீட்டுகிறாயே......அதற்குள்ளே என்னை ஏய்க்கப் பார்க்கிறாயே!”

செல்லாயி திடுக்கிட்டாள். “அவர் அரையணாத்தான் போட்டார். காலணாவை இதோ வைத்திருக்கிறேன். இதோ, அந்தக் காலணா குவளையிலே இருக்கிறது, பாரு!” என்றாள் செல்லாயி. அபாண்டத்தால் அவளுடைய உள்ளம் சிலிர்த்தது.

“ஆமாம்...உன் கிட்டே கொடுத்தாரே, திருடி கிட்டே....பெரிய திருடியாச்சே நீ!” என்று கருப்பாயி வசையம்பு தொடுத்து விட்டாள்.

செல்லாயியினால் இதைப் பொறுக்க முடியவில்லை. அவளும் பதிலுக்குப்பேசினாள். இவள் பேச, அவள் பேச, கடைசியில் சண்டை வலுத்தது. கருப்பாயி ஆத்திரத்தாலும், அன்று முழுவதும் ஒன்றும் கிடைக்காத ஏமாற்றத்தாலும் அவள் மீது பாய்ந்தாள்.

செல்லாயிக்கும் ஆத்திரம் தாங்கவில்லை. இருவரும் அடித்துக் கொண்டனர். கூச்சல் அதிகமாகவே, ஹோட்டலிலிருந்து வேலைக்காரன் ஒரு செம்புத் தண்ணீரைக் கொண்டு வந்து அவர்கள் மீது கொட்டி அதட்டினான். அப்புறம்தான் அந்த யுத்தம் நின்றது.

செல்லாயியின் கந்தல் ஆடை இன்னும் சர்வ கந்தலாகி விட்டது. இரவல் குழந்தையின் அழுகை அதிகமாயிருந்தது. கையிலுள்ள தகரம் ஒரு மூலையில் நசுங்கிக் கிடந்தது.

அதிலே இருந்த இரண்டு காலணாக்களும் தெருவின் ஓரத்தில் சாக்கடையில் கிடந்தன.

செல்லாயியின் உள்ளம் உடைந்துவிட்டது. முகத்திலும் கையிலும் கிறப்பட்டுள்ள இடத்திலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. மெள்ள நடந்து அவள் தன் இருப்பிடத்தை நோக்கி நடந்தாள். அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. தன் கணவன் சீக்கிரம் வருகிறேன் என்று போய் இரண்டு மூன்று மாசம் ஆயிருக்கலாம். ஐயோ, அவர் ஏன் வரவில்லை? மறந்தே போய்விட்டாரா? அவள் மனம் இதை நினைக்கும் போது துடியாகத் துடித்தது.

வழி நெடுக யோசனையில் ஆழ்ந்தவாறு நடந்து கொண்டிருந்த அவள், குழந்தையைக் கிழவனிடம் கொடுத்து விட்டு நடந்தாவது ஊரைப் பார்க்கப் போய் விடலாம் என்று எண்ணிக் கொண்டாள்.

ஆனால் இருப்பிடத்தை அடைந்த பொழுது அவள் உள்ளம் ஒரு கணம் ஸ்தம்பித்து விட்டது. தலையே சுற்றி விடும் போன்ற உணர்ச்சி! ஏதோ பெரிய வேதனைப் பாரம் இறங்கி விட்டது போன்ற நிலை!

சடையப்பன் கிழவனிடம் உட்கார்ந்து ஏதோ விசாரித்துக் கொண்டிருந்தான்.

செல்லாயியிடம் சொல்லி விட்டுக் கிராமத்தை நோக்கிப் போன சடையப்பனுக்கு அங்கே ஒரு பெரிய ஆபத்துக் காத்திருந்தது. அவன் தனக்குத் தெரிந்த ஒருவனது குடிசையில் தங்கியிருக்கையில், அவனது சிநேகிதனை அவனுடைய விரோதிகள் சிலர் பழைய விரோதத்தால் தாக்க வந்தனர். சடையப்பனும், அவன் நண்பனுமாகச் சேர்ந்து எதிர்த்தவர்களைச் சமாளிக்கும்படி ஏற்பட்டது. அந்தச் சண்டையின் போது எதிர்க் கட்சியாளரில் ஒருவனுக்குப் பலத்த அடி விழவே, அவர்கள் மறுநாள் போலீஸாரிடம் வழக்குப் பதிவு செய்து விட்டனர். சடையப்பன் தான், எதிர்க் கட்சியில் ஒருவனைப் பலமாக அடித்தான் என்பது எதிர்க் கட்சியாரின் புகார். சடையப்பன் ஒரு பாவமும் அறியாதவன். இளகிய மனத்தினன். இப்படி நேரும் என்று அவன் நினைக்கவே இல்லை. பட்டணத்தில் மனைவியின் கதி என்னவோ என்று நினைக்கும் போது அவனுக்கு அழுகையே வந்துவிட்டது. நல்லவேளையாக ஒன்றும் மோசமாக நேரவில்லை.

மூன்று மாத காலம் வழக்கு நடந்தது. கடைசியில் சடையப்பன் மீது குற்றமில்லை



டாக்டர்:—நான் கொடுத்த மருந்தினால் உங்கள் குழந்தைகளுக்கு இருமல் தீர்ந்ததா?

வந்தவர்:—நன்றாய்த் தீர்ந்தது. நேற்று காலை ஒரு பையனுக்குத்தான் மருந்து கொடுத்தேன். இன்று எல்லாக் குழந்தைகளுக்குமே இருமல் நின்று விட்டது.

டாக்டர்:—அது எப்படி ஒரு பையனுக்கு மருந்து கொடுத்ததும் மற்றப் பையன்களுக்கு இருமல் நின்று விட்டது?

வந்தவர்:—மற்றப் பையன்கள் அந்த இருமல் மருந்தின் கசப்பைக் கேள்விப் பட்டுத் தாங்களாகவே இருமுவதை நிறுத்தி விட்டார்கள்!

என்று முடிவாகி விட்டது. சடையப்பனுக்கு நேரிட்ட விஷகடி வேலை நல்ல வேலையாக அவனை விடுதலையாகுமாறு செய்தது.

*   *   *

விடுதலையானவுடன், நண்பனிடம் கூறி விட்டுச் சடையப்பன் பட்டணத்துக்கு ஓடோடி வந்தான். செல்லாயியைக் காண வில்லை. எப்படியோ விசாரித்துக் கொண்டு, பிச்சைக்காரர்களின் வாத்தியாரான இழுவனிடம் வந்து சேர்ந்தான்.

செல்லாயிக்குக் கணவனைக் கண்டவுடன் அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. கோவென்று கதறி அவன் கால்களைக் கட்டிக் கொண்டாள். அதைக் கண்ட வாடகைக் குழந்தையும் தன் அழுகையை நிறுத்தி விட்டது. சடையப்பன் தனக்கு நேர்ந்ததைக் கூறுவதற்கு முன்பு, செல்லாயியின் அப்போதைய நிலையைக் காண வருத்தமுற்று, செய்தியை அறிய ஆவலுற்றான்.

செல்லாயி அரையணாவால் ஏற்பட்ட வினையை விம்மி விம்மிச் சொல்லும் போது சடையப்பனுக்கு வருத்தம் உண்டாகவில்லை. தனக்கும், தமயந்திக்கும் நேர்ந்ததைவிடவா இது பெரிய கஷ்டம் என்று சடையப்பன் நினைத்துக் கொண்டான் போலும்!

"செல்லி, வா! அந்தக் கருப்பாயியைப் போய்ப் பார்ப்போம்" என்று கூப்பிட்டான்.

"வேண்டாம்......எல்லாம் இல்லாத கொடுமைதான் அவளுக்கு ஆத்திரம் உண்டாக்க காரணம்" என்றாள் செல்லாயி.

"இல்லை, செல்லி! வா, அப்படியே ஊருக்குப் போகணும்..." என்று அவன் சொல்லவே செல்லாயி வரச் சம்மதித்தாள்.

அதே ஹோட்டல் வாசலில் கருப்பாயி உட்கார்ந்திருந்தாள். செல்லாயி, யாரோ ஒரு ஆண் பிள்ளையை அழைத்துக் கொண்டு வருவதைப் பார்த்தவுடன் கருப்பாயி பயந்தாலும் தைரியமாக, "வந்துட்டியா!...எந்த ஆள் என்னை என்ன பண்ணுவான்?" என்று கேட்டவாறு எழுந்து நின்றாள்.

"ஒன்றும் பண்ணமாட்டான். பயப்படாதே! இந்தா, எடுத்துக் கொள்! உனக்கு வேண்டியது ஓரணாத்தானே? இந்தா!" என்று கூறி அவளுடைய தகரக் குவளையில் இரண்டு அரையணாக்களைப் போட்டான் சடையப்பன்.

செல்லாயிக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

சடையப்பனும், செல்லாயியும் திரும்பவும் ஊருக்குப் போவதற்காக ரயில்வே ஸ்டேஷனை அடைந்த பொழுது, அந்த வாடகைக் குழந்தையின் அழுகையும் அரையணாச் சம்பவமும் செல்லாயியின் நினைவை விட்டுச் சிறிதும் அகலவே இல்லை.



அவள் மேல் உயிர்

‘இருந்தா என் சம்சாரம் போலன்னா இருக்கணும்’ என்கிறார் அவர். அவருடைய சம்சாரம் குறிப்பறிந்து நடப்பதுதான் அதன் காரணம்.

நல்ல புத்திசாலி அவள். காலையில் அவர் ஆபீஸிற்கு அணிந்து செல்வதற்காக சலவைத்துணிகளை தயாராக எடுத்து வைப்பாள்; மாலையிலோ அவர் வந்தவுடன் ஒரே நொடியில், அதிக செலவில்லாது தயாரிக்கக்கூடிய ‘டீ’யைக் கொடுப்பாள்.

அவளுடைய புன்னகையைப்போல் அவள் தயாரிக்கும் ‘டீ’யும் கணவனை ஏன் வசிகரிக்காது? (அவள் மேல் அவர் உயிரை வைக்கமாட்டார்?) அவள் அன்புக்கு அவர் அடிமை—இதில் வியப்பென்ன?

மந்திர சக்தியுள்ள ‘டீ’யைக் குடியுங்கள்.



ஸென்ட்ரல் டீ போர்டாரால் வெளியிடப்பட்டது.

CTB 68



11. சிப்பிக்குள்ளே முத்து

செங்கம்மாவுக்குப் பொன்னியின் வார்த்தையில் பூரண நம்பிக்கை விழுந்ததோடு மட்டும் அல்ல; அன்பும் அநுதாபமும் வேறு ஏற்பட்டன. பொன்னி சின்னப் பெண் ஆயிற்றே! எங்கேயாவது பயந்து கியந்து விட்டால் என்ன ஆவது என்ற எண்ணமும் ஏற்பட்டது. ஆகவே, "அவ்வளவுதானே! இதோ பார்! இனி மேல் அப்படி ஏதாவது இருந்தால் தனியாகக் கொல்லைப் புறம் போகாதே. என்னைக் கூப்பிடு. நீ சிறு பெண். தனியாக நிசி வேளையிலே கொல்லைப்புறம் போவது தவறு" என்றாள்.

"சப்தம் கேட்டவுடனே உங்களைக் கூப்பிடலாமா என்றுதான் நினைத்தேன். பகலெல்லாம் ஓயாமல் உழைத்து விட்டு அசதியாகத் தூங்கும் உங்களை எழுப்ப மனசு கேட்கவில்லை" என்றாள் பொன்னி, அடக்கமும் பயபக்தி விசுவாசமும் கொண்டவள் போல்.

வாய்த்துடுக்காகவும் முரட்டுத் தனமாகவும் பேசி வந்த பொன்னி, தன்னிடம் இவ்வளவு நயமாகவும் வாஞ்சையோடும் பேசுவது செங்கம்மாவிற்கே ஆச்சரியத்தைக் கொடுத்தது. பொன்னி தன்னைச் சரியாகத் தெரிந்து கொண்டு தன் வழிக்கு அடங்கி வந்து விட்டாள் என்றுதான் அப்பொழுது அவள் நினைத்தாள். அந்தச் சமயம் பொன்னி நடித்த நடிப்பு அவள் மீது செங்கம்மா எவ்விதமான சந்தேகமும் கொள்ளாத வண்ணம் மயக்கி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே, செங்கம்மாவிற்குப் பொன்னியின் மீது அளவற்ற கருணை ஏற்பட்டுவிட்டது. "நான் தூங்கினால்கூடப் பரவாயில்லை. இப்படி ஏதாவது நேர்ந்தால் நீ என்னைத் தாராளமாய் எழுப்பலாம். நான் எதற்காக இந்த வீட்டில் இருக்கிறேன்! பாவம்! நீ போய் படுத்துத் தூங்கு..." என்று அன்புடனும் பரிவுடனும் சொல்லி விட்டுத் தன் அறையை நோக்கிச் சென்றாள்.

பொன்னி படுக்கையில் படுத்தாலும் அவளுக்குத் தூக்கம் வருவதாக இல்லை. இரண்டாவது தடவை ஏற்பட்ட அந்தத் தர்ம சங்கடமான நிலைமையிலிருந்து, தான் தப்பியதே பெரிய ஆச்சரியமாக அவளுக்குப் பட்டது. நடுநிசி வேளையில் எவருக்கும் தெரியாமல், தான் செய்யும் துணிகரமான காரியங்களை என்றைக்காவது ஒரு நாள் மரகதமும் செங்கம்மாவும் கண்டு கொண்டு விட்டால் என்ன செய்வது என்ற பயம் அவளுக்கு இருக்கத்தானிருந்தது. மறுநாள் இரவு அவள் செய்ய நினைத்த அந்தத் துணிகரமான காரியத்திற்கு இத்தகைய இடையூறு ஏதேனும் வந்தால் அந்தச் சமயம் எப்படித் தப்பித்துக் கொள்வது என்ற எண்ணம் அவளுக்கு மிகவும் குழப்பத்தை உண்டாக்கியது. இருந்தாலும், தான் போட்டுள்ள திட்டப்படி எப்படியாவது காரியத்தை நடத்தியே தீருவது என்று தீர்மானித்துக் கொண்டு 'இரவில் எப்படி வேதாவை இந்த வீட்டை விட்டு வெளியே அழைத்துக் கொண்டு போகலாம்! எப்படி டாக்டர் பரசுராமனையும் அவனையும் சந்திக்க வைக்கலாம்!' என்பதைப் பற்றியெல்லாம் திட்டமிடத் தொடங்கினாள்.

மறு நாள் பகல் பொழுதிலும்கூட அவள் வீட்டுக்காரியங்களைச் செய்த வண்ணமே, இரவில் வேதாவை அழைத்துக் கொண்டு வெளியே செல்வதற்குச் சரியான வழி எது என்று கண்டு பிடிப்பதிலேயே தன் கவனம் முழுவதையும் செலுத்தினாள். இரவு பத்து மணிக்கு மேல் தோப்பில் அவளுடைய அத்தான் வண்டியுடன் வந்து தவறாமல் காத்திருப்பான். அந்த வீட்டைச் சுற்றிலும் பத்தடி உயரத்திற்கு மேல் மதில் சுவர் எழுப்பப் பட்டிருந்தது. சுவர் ஏறிக் குதித்துத் தப்புவதென்றால், அது அவளைப் போன்ற பெண்களால் முடிந்த காரியமா! பொன்னியினால் அத்தகைய காரியம் செய்ய முடியுமென்றாலும், அது வேதாவால் செய்யக்கூடிய காரியமல்லவே! வேதாவிற்கு எவ்விதத் தேக சிரமமும் கொடுக்காமல் அழைத்துச் செல்ல வேண்டும் என்று பொன்னி நினைத்தாள். எதிலும் அநுபவ மில்லாத குழந்தை போலிருக்கும் வேதாவிற்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்த அவள் விரும்பவில்லை.

அந்த வீட்டிற்கு முன்புறத்தில் ஒரு கதவும் பின்புறத்தில் ஒரு கதவும் இருந்தன. முன்புறத்திலுள்ள கதவு அடிக்கடி திறக்கப்பட்டாலும் பின்புறத்திலுள்ள கதவு திறக்கப்பட்டதே இல்லை. அன்று மத்தியானம் மாட்டுக் கொட்டகைக்குக் கழுநீர் ஊற்றச் சென்ற பொன்னி பின்பக்கத்துக் கதவைப் போய்ப் பார்த்தாள். பழைய காலத்துக் கதவேயாயினும், அது பழுதடையாத அழுத்தமான மரக் கதவு. அதில் பழைய பூட்டு ஒன்று பூட்டப்பட்டிருந்தது. ஒரு காலத்தில் அந்தப் பூட்டு நல்ல நிலைமையில் இருந்திருக்க வேண்டும். ஆனால் அப்பொழுது அதில் துருவேறி இரும்பைக்

கரைந்திருந்தது. மெதுவாகப் பூட்டை இருபுற மும் திருப்பிப் பார்த்தாள். அவள் மனதில் ஒரு நம்பிக்கையும் யுக்தியும் தோன்றின. தன் பலம் கொண்ட மட்டில் அவள் அந்தப் பூட்டைப் பிடித்து இழுத்தாள். அந்தப் பூட்டின் மேல் வளைவு பிடியிலிருந்து பட்டென்று கழன்று விட்டது. பூட்டு இவ்வளவு சுலபமாகத் திறந்து விடும் என்று அவள் நினைக்கவில்லை. அந்தப் பெரிய காரியம் இவ்வளவு சுலபமாகவும் வெற்றிகரமாக வும் முடிந்து விட்டது பற்றி அவளுக்கு ஆச்சரிய மும் திருப்தியும் ஏற்பட்டன. அடுத்த கணம் அவள் அந்தப் பூட்டை முன்போலவே நாருக்காக வைத்து விட்டு உள்ளே வந்தாள்.

இரவு எல்லோரும் படுக்கச் சென்று விட் டார்கள். பொன்னிக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. ஒரு காரியத்தில் மனம் ஈடுபட்டிருக்கும்பொழுது தூக்கம் எப்படி வரும்! பொழுது போய்க் கொண் டிருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் பொன்னி எழுந்தாள். அந்தச் சமயத்தில் மரகதமும் செங் கம்மாவும் அயர்ந்த நித்திரையிலிருப்பார்கள் என் பது அவளுக்குத் தெரியும். இருந்தாலும் அவள் மனம் பயத்தினால் 'படபட' வென்று அடித்துக் கொண்டது. முதல் நாள் இரவு சொல்லிவிட்டு வந்தபடி வேதா அவளுடைய வரவுக்காகத் தூங்கா மல் காத்துக் கொண்டிருப்பாள் என்ற எண்ணம் எழவே, அமிழ்ந்து எரிந்து கொண்டிருந்த தீபத் தைச் சிறிது பெரிதாக்கிவிட்டு, படுக்கையிலிருந்த பெரிய போர்வையை உடல் முழுவதும் தெரியா வண்ணம் போர்த்திக் கொண்டாள். வேதாவின் அறைக்குச் செல்வதற்கு அவள் ஆயத்தமானாளே தவிர அவளுக்கு அர்த்தமில்லாத தயக்கமும் யோசனையும் ஏற்பட்டன. 'ஒரு வேளை செங்கம் மாவும் மரகதமும் இன்னும் தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தால்.........!' என்ற சந்தேகம் அவ ளைத் தயக்கமடையச் செய்தது. ஆனால் அதைத் தொடர்ந்தாற் போலவே, அவள் மனதில் ஒரு துணிவும் ஏற்பட்டது. நிச்சயமாக அவர்கள் தூங்கி இருப்பார்கள். இனிமேல் தயங்கக் கூடாது என்று தனக்குள் சொல்லிக் கொண்டு எழுந்தாள். மறுபடியும் போர்வையைச் சீராகப் போர்த்திக் கொண்டு மெதுவாக அறைக்கு வெளியே வந்தாள். 'இது மிகவும் அபாயகரமான காரியம்!' என்று ஒரு புறத்தில் அவள் மனது கதறியது. 'என்ன அபாயம்! எந்த அபாயத்தையும் வேதாவிற்காக நான் ஏற்றுக் கொள்ளத் தயார்!' என்று மறு புறம் உறுதி கொண்டது.

அவள் மெதுவாகவும் எவ்விதச் சப்தமும் ஏற் படாத வண்ணமும் தன் மூச்சைப் பிடித்துக் கொண்டு மாடிக்கு வந்து விட்டாள். வேதா இருக்கும் அறையின் கதவை மெதுவாகத் திறந் தாள். அந்த அறையிலிருந்த விளக்கு அதிகப் பிரகாசமின்றி மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. அவள் அந்த விளக்கைச் சிறிது அதிக ஒளி உண் டாகும்படி செய்து விட்டு வேதாவின் படுக்கையில் அமர்ந்து அவள் முகத்தை உற்று நோக்கினாள். வேதா அவளைக் கண்டதும் பரபரப்போடு எழுந் திருக்கவில்லை. அவள் விழித்துக் கொண்டுதா னிருந்தாள். ஆனால் அவள் முகம் மனதில் கொண்ட அச்சத்தின் காரணமாக வெளுத்துச் சோர்ந்திருந்தது. அப்பொழுது வேதா பேயறைந்து பிரமை பிடித்திருப்பவள் போல் இருந்தாள்.

"வேதா! ஏன் இன்னும் படுத்துக் கொண்டிருக் கிறாய்! எழுந்திரு!" என்று அவள் தோளைத் தொட்டு அசைத்தாள் பொன்னி.

வேதா மெதுவாக எழுந்து உட்கார்ந்து கெஞ்சு வது போல் பொன்னியின் முகத்தைப் பார்த்தாள்.

"என்ன, இப்படிப் பார்க்கிறாய்! ஊம், புறப் படு!" என்று துரிதப்படுத்தினாள் பொன்னி.

வேதா பொன்னியின் முகத்தைப் பார்க்காம லேயே வேறு எங்கோ பார்த்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்து உட்கார்ந்திருந்தாள்.

"என்ன, வேதா! நான் சொன்னதை மறந்து விட்டாயா! நமக்காக வண்டியோடு தோப்பில் வந்து என் அத்தான் காத்துக் கொண்டு நிற்பார். உம், புறப்படு. இப்பொழுது புறப்பட்டால் தான் விடிகிறதற்குள்ளே நாம் திரும்ப முடியும்..." என்று ஆத்திரத்துடன் சொன்னாள் பொன்னி.

"இல்லை, பொன்னி! வேண்டாம். இது ரொம்பத் தவறு" என்றாள் வேதா தயக்கத்தோடும் நடுக்கத்தோடும்.

"வேண்டாமா...! தவறா...! எது தவறு...! நீ உங்கள் பெரியம்மாவுக்கும் அந்த வேலைக்காரிப் பிசாசுக்கும் வீணில் பயப்படுகிறாய். நான் அதற்குத் துளிக்கூடப் பயப்படவில்லை. நாம் செய்கிற காரியம் அவர்களுக்குத் துளிக்கூடத் தெரியாது. நாம் ஜாக்கிரதையாகப் போய்விட்டு இரவோடு இரவாக வந்து விடலாம். அவர்கள் இரண்டு பேரும் பேயடித்துப் போட்டாற் போலத் தூங்குகிறார்கள். பயப்படாதே! புறப்படு."

"ஊ ஹூம்...வேண்டாம், பொன்னி! வேண் டாம்! இது ரொம்பப் பிசகான காரியம். என்னை விட்டுவிடு..." என்றாள் வேதா தீர்மானமாக.

"வேதா! வீணாகத் தர்க்கம் செய்யாதே. நீ என்னை உன்னுடைய அந்தரங்கமான சிநேகிதி என்று நினைக்கிறாயா, இல்லையா...!"



"அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றாள் வேதா.

வேதாவின் விளையற்ற அழகான முகத்தை ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டே, "டாக்டர் உனக்கு எழுதி இருந்த கடிதத்தில் என்னைப் பற்றி என்ன எழுதியிருந்தார்? அவர் என்னைப் பூரணமாக நம்பலாம். நான் உனக்கு நல்லதைத் தான் செய்வேன் என்று எழுதி இருந்தாரே, மறந்து விட்டாயா!" என்று கேட்டாள் பொன்னி.

"நான் மறக்கவில்லை. ஆனால்..." என்று மறுபடியும் தயங்கினாள் வேதா.

"ஆனால் கீனல் எல்லாம் இப்பொழுது வேண்டாம். நீ எதற்கும் பயப்படாதே. உடனே புறப்படு..." என்றாள் பொன்னி பதட்டத்தோடு.

"பொன்னி! பெரியம்மாவும், செங்கம்மாவும் இந்த நிசி வேளையில் நான் வீட்டை விட்டு வெளியே போய்விட்டு வந்ததைக் கண்டு விட்டால் என்ன செய்வார்கள், தெரியுமா......!" என்றாள் பீதி நிறைந்த குரலில் வேதா.

பொன்னி கேலியாகச் சிரித்துக் கொண்டே, "என்ன செய்து விடுவார்கள்...! நீ ஒரு பைத்தியக்காரி. நீ எதற்கும் கவலைப்படாதே! எழுந்திருந்து என்னுடன் வா, சீக்கிரம்...!" என்றாள் பொன்னி.

பொன்னியின் துடிப்பிற்கும் அவசரத்திற்கும் சமாதானம் செய்ய முடியாத வகையில் தானிருந்தாள் வேதா. பொன்னியின் உணர்ச்சி அப்பொழுது அவ்வளவு உச்ச நிலையை அடைந்திருந்தது. பொன்னியையும் அவளுடைய துணிவையும் சாமர்த்தியத்தையும் நினைக்கும் பொழுது வேதாவின் மனதிலிருந்த பயம் கூடச் சிறிது கரைந்தது. எல்லாப் பொறுப்பையும் பொன்னியிடமே செலுத்தி அவள் புறப்படத் தயாரானாள். அப்பொழுதுதான் அவள் ஒரு கனவு உலகத்திலிருந்து விழித்தெழுந்தவள் போல் தன் மன மயக்கத்திலிருந்து தெளிவுற்றுச் சரியான உணர்வை அடைந்தாள். அவள் சட்டென்று படுக்கையிலிருந்து எழுந்து தன் உடைகளைச் சரி செய்து கொண்டாள். பொன்னி படுக்கையில் கிடந்த போர்வையை எடுத்து அவள் உடலை மூடிப் போர்த்தினாள். "ஹூம், வா! சீக்கிரம்! இந்த இடத்தை விட்டு நாம் வெளியே போய்விட வேண்டும்" என்று சொல்லிப் பொன்னி வேதாவின் கையைப் பிடித்துக் கொண்டாள்.



வேதாவின் கை வெட வெடவென்று நடுங்கியதிலிருந்து அவள் மனதில் எத்தகைய பயம் குடி கொண்டிருக்கிறது என்பதைப் பொன்னி உணர்ந்து கொண்டாள்.

நான்கு புறமும் உயர்ந்த மதில் சுவர்களுக்கு உட்பட்டுக் கோட்டை போலிருக்கும் அந்த வீட்டைத் தாண்டி எப்படி வெளியே போகமுடியும் என்பது வேதாவிற்கு விளங்கவில்லை. ஆகவே, "பொன்னி! எப்படி நாம் இந்த வீட்டை விட்டு வெளியே போக முடியும்......!" என்றாள் திகைப்போடு.

"அதைப்பற்றி நீ கவலைப் படாதே! அது எனக்குத் தெரியும். நீ சப்தம் போடாமல் என்னோடு வா" என்றாள் பொன்னி.

வேதாவின் மெல்லிய கரத்தைப் பொன்னி பிடித்துக் கொண்டிருந்தாள். அவர்கள் இருவரும் அறைக்கு வெளியே வந்தனர். அந்த வீடு முழுவதும் இருள் சூழ்ந்து அமைதி நிலவி இருந்தது. அந்த இருளைக் கண்டதும் வேதாவின் உடல் நடுங்கியது. இதைப் பொன்னி எளிதாக உணர்ந்து கொண்டாள். "பயப்படாதே! மெதுவாக என்னோடு வா!" என்றாள் அடக்கமான குரலில். பொன்னியின் கையைப் பிடித்தவண்ணம் குருடி நடப்பதுபோல் வேதா நடந்தாள். சில வினாடிகளுக்குள் பொன்னி அந்த வீட்டிற்குப் பின்புறமுள்ள தோட்டத்திற்கு வந்து விட்டாள். வீட்டிற்குள் குமைந்திருந்த இருளைத் தாண்டித் தோட்டத்திற்கு வந்ததும் அங்கிருந்த நிலவொளியும் மனோகரமான அமைதியும் வேதாவை வேறு ஒரு உலகத்திற்கே கொண்டு வந்து விட்டது போலிருந்தது.

பொன்னி கதவிலிருந்த பூட்டை மெதுவாக எடுத்து விட்டுக் கதவைத் திறந்தாள். நிலவின் வெளிச்சத்தில் அங்கிருந்து தோப்பிற்குச் செல்லும் குறுகிய பாதை தெளிவாக விளங்கியது. இருபுறமும் புதர்களும் மரங்களும் அடர்ந்த அந்தப் பாதை வழியாக இருவரும் அதிவேகமாக நடந்தனர். வேதாவிற்குப் பொன்னியின் காரியம் ஒவ்வொன்றும் ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியத்தை விளைவித்தன. தோப்பிற்கு வெளியே இருந்த மணல்மேட்டில் மருதப்பன் உட்கார்ந்திருப்பதைப் பொன்னி கண்டாள். பொன்னி, வேதா இருவரும் வருவதைக் கண்ட மருதப்பன் எழுந்து அவர்களை நோக்கி வந்தான்.

"வண்டி எங்கே!" என்று பதட்டத்துடன் கேட்டாள் பொன்னி.

"எல்லாம் தயாராய் இருக்கிறது" என்று சொல்லிய வண்ணம் பொன்னிக்குப் பக்கத்தில் நிற்கும் பெண்ணைப் பார்த்தான் மருதப்பன். நிலவின் ஒளியில் வேதாவின் முக சௌந்தர்யம் அவனுக்கு நன்கு விளங்கியது. அந்த அழகு அவனைக் கணப் பொழுதில் திகைப்படையச்

செய்து விட்டது. அந்த நடுநிசி வேளையில் பொன்னி அழைத்துக் கொண்டு வந்த அந்தப் பெண் உண்மையில் மானிட உருவம் தாங்கியவள்தானா அல்லது தேவதையா என்றே கூட அவன் திகைத்து விட்டான்.

அவனுடைய திகைப்பை அறிந்து கொண்ட பொன்னி, "என்ன, அத்தான்! இப்படி திகைத்துப்போய் நின்றுவிட்டீர்கள்! இவள்தான் என் சினேகிதி; ராஜாளிமடத்திலே இருக்கும் பெண். வாருங்கள்! வண்டி எங்கே நிற்கிறது! போவோம்" என்றாள்.

மூவரும் நடந்தார்கள். தோப்பிற்குள் செல்லும் அகன்ற பாதையில் ஒரு இரட்டை மாட்டு வண்டி நின்று கொண்டிருந்தது. அவர்கள் கண நேரம் கூடத் தாமதிக்கவில்லை. வண்டியில் ஏறி உட்கார்ந்தனர். மருதப்பன் மாட்டின் வாலை முறுக்கி வண்டியை ஜோராக ஓட்டத் தொடங்கினான். நிலவு வீசும் அந்த மனோகரமான வேளையில் இரண்டு அழகான பெண்களை வண்டியில் வைத்து அழைத்துக் கொண்டு போகும்போது மருதப்பனுக்கு மகிழ்ச்சி ஏற்படாதா! அவனையறியாமல் கவித்துவமும் சங்கீதமும் கிளம்பி விட்டன. அமைதியைக் குலைத்துக் கொண்டு சலங்கை சப்தத்துடன் ஓடும் வண்டியின் சப்தத்தோடு மருதப்பனின் முரட்டுக் குரலும் இழைந்து கொடுத்தது.

பெட்டிக்குள்ளே பெட்டி—அந்தப்
பெட்டிக்குள்ளே பாரு சிப்பி—அந்தச்
சிப்பிக்குள்ளே நல்ல முத்து
ஜிலு ஜிலுன்னு வீசுது பார்.

இந்தப் பாட்டைக் கேட்டுப் பொன்னி கலீரென்று சிரித்தாள். அவளது சிரிப்போடு வேதாவின் சிரிப்பும் சேர்ந்து பரிமளித்தது. மருதப்பனும் அவர்களைத் திரும்பிப் பார்த்து அவர்கள் சிரிப்பில் கலந்து கொண்டான்.

* * *

வண்டி குருவிக்குளம் கிராமத்தை நெருங்கி விட்டது. இவ்வளவு நேரமும் அதிவேகமாக ஓடி வந்த மாடுகள் 'கிராமத்தை அடைந்து விட்டோம்' என்ற நிம்மதியில் மெதுவாக நடக்கத் தொடங்கின. கிராமம் அந்த நிசி வேளையில் அமைதியான உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. வெண்ணிலவின் களங்கமற்ற ஒளியில் சிறு சிறு குப்பங்கள்போல அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த வீடுகள் நிழல் படங்கள் போலத் தோற்றமளித்தன. வண்டி வரும் சதங்கைச் சப்தத்தைக் கேட்டதும் குப்பங்களிலிருந்த நாய்களெல்லாம் ஏககாலத்தில் குரைக்கத் தொடங்கின. வீடுகளில் வெளித்திண்ணையில் படுத்துக் கொண்டிருந்த இரண்டொருவர் நாய் குரைக்கும் சப்தத்தில் எழுந்து கண்களைத் துடைத்துக் கொண்டு பார்த்துவிட்டு மறுபடியும் படுத்துக்கொண்டனர்.

வண்டியிலிருந்த பொன்னி வேதாவிடம், "அதோ பார். அதுதான் எங்கள் வீடு!" என்று சிறிது தூரத்திலிருந்த தன் வீட்டைச் சுட்டிக்காட்டினாள்.

வேதா அகல விரிந்த கண்களுடன் அவள் சுட்டிக் காட்டிய வீட்டைப் பார்த்தாள். அவளுக்கு ஒரு புறம் வியப்பும் இன்னொரு புறம் பயமும் ஏற்பட்டு உள்ளத்தை என்னவோ செய்தன. வண்டி மாடுகள் கழுத்தை அசைத்து அசைத்து ராஜநடை போட்டுக்கொண்டு நாய்களைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் பொன்னியின் வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. (தொடரும்)

நான் கண்ட உண்மை

ஆடிட்டர் ஸ்ரீ டி. எஸ். நாராயண ஐயர்

சென்ற மாதம், ரமணாசிரமத்தின் நிர்வாகக் கமிட்டியார் சென்ற ஆண்டுக் கணக்குகளைத் தணிக்கை செய்ய என்னை ஆசிரமத்திற்கு வருமாறு அழைத்தனர். நான் உடனே ஆசிரமம் போய்ச் சேர்ந்தேன். சர்வாதிகாரிக்கு ஓர் கமிட்டி மெம்பர் அறிமுகச் சீட்டு எழுதித் தந்திருந்தார். சர்வாதிகாரியை யாவரும் 'சின்னசுவாமி' என்று அழைக்கிறார்கள். நான் சின்ன சுவாமியிடம் அறிமுகச் சீட்டைக் காட்டவில்லை. ஏனெனில், நான் சென்றது ஆசிரமக் கணக்குகளை பரிசோதனை செய்வதற்கு. எப்பொழுதுமே ஆடிட்டர்கள் திடீரென்று ஆஜராவதுதான் அவர்கள் செய்யும் சாகசம். அப்பொழுது தான் பொதுவான ஏனையோருக்கும் தென்படாத பல உண்மைகள் கணக்குப் பரிசோதனை செய்யும் போது புலனாகும்.

ஒன்பது நாட்கள் அருணையில் கழிந்தன. அச்சமயம் யோகி சுத்தானந்தர் வந்தார். "என்ன! சித்திராபுத்ரர்கள் இங்கும் வந்து நுழைந்து விட்டார்களா?" என்றார். ஆம், ஒரு ஜீவன் தேகக் கூடு நீங்கிச் சென்றவுடன் அவன் செய்த நன்மை தீமைகளின் பட்டியலைத் தயாரித்துத் தருமராஜனின் கட்டளைக்குச் சமர்ப்பிக்கச் சித்திராபுத்ரன்தானே வந்து தீரவேண்டும்?" என்று நினைத்தேன்.

ரமணாசிரமத்தின் கணக்குகளைப் பரிசோதனை செய்வதற்குச் சென்ற என் மனத்தில், பல்லாண்டுகளாக நடத்திய ஆத்மாநுபவத்து வரவுக் கணக்குகளின் ஐந்தொகையை வைத்துக் கொண்டு, எண்ணங்களாகிய ஏடுகளைப் புரட்டிப் பார்த்து, 'ஆடிட்' ரிபோர்ட் தயார் செய்து, ரமண பகவானான தர்மராஜவிடம் ஒப்படைத்து விடுவதற்குத்தான் ரமண பகவான் அருணைக்கு நோட்டமில்லாமலே ஆஜராகும்படி என்னைத் தூண்டினார் போலும்!



அத்தியாத்மச் சரக்குகளை வாங்கி விற்பவனின் கணக்குகள் விசித்திரமானவை. அவை சாதாரணமாக எளிதில் விளங்காதவை. ஆனால், தன்னைப் போன்ற மற்றதோர் வியாபாரி, அதன் நுட்பங்களை எளிதில் உணர்ந்து விடுவான். கணக்குகளே விசித்திர ரீதியில் எழுதப்படுமானால் அவற்றை 'ஆடிட்' செய்யும் முறைகளும் மிகவும் விசித்திரமாகத்தானே இருக்க வேண்டும்?

பகலெல்லாம் ஆசிரமக் கணக்குகளைப் பரிசோதிப்பேன். இராக் காலங்களில் தினமும் சுமார் மூன்று அல்லது நான்கு மணி நேரம் ரமண பகவானின் ஆத்மாவுடன் கலந்து பத்மாஸனத்திலிருந்து தியானிப்பேன். ஆனால், இங்கு தியானம் ஓர்புறமிருக்கட்டும். அந்த ரமணபகவான் பலகாலம் ஆத்ம நிஷ்டர்களுடன் பிரார்த்தனை நடத்திய விசாலமான அறையின் மகிமையே முக்கிய காரணமாயிருக்க வேண்டுமென உணர்ந்தேன். அந்த அறையிலேயே எனது கணக்குப் பரிசோதனை வேலையைச் செய்யவும் இராக் காலங்களைக் கழிக்கவும் ஏற்பாடு செய்திருந்த ஆசிரம அதிகாரிகளுக்கு எனது நன்றி உரித்தாகுக.

பொதுவாக, ஆசிரமத்திலும், அதனருகில் காணப்படும் கற்பாறைகள், மலையுச்சி, எங்குமே, ரமணரின் ஒளி தென்படுவதை நான் கண்கூடாகக் கண்டேன். இருப்பினும், அந்தப் பிரார்த்தனை யறையில், நான் கண்ட விசேஷ அனுபவத்தை என்னவென்று சொல்வது? ஆத்மாவினிடங் கண்ட உண்மைகளை அவ்வாறே எடுத்துரைக்க என் மனம் துடித்துக் கொண்டிருக்கிறது. ஆயினும் என்ன? இந்த மனமாகிய பிரமை, ஆத்மானந்த அனுபவத்தை விளக்க முன் வரின், ஈஸ்வரனின் தாழை மடலைக் கண்டு வந்ததாகப் பொய்கூறிய புராணக் கதையின் வரும் நான்முகன் போல் ஆக வேண்டியதுதான்.

ரமணரின் இருதயத்தை யறிய நான் கையாண்ட முறை வேறொன்றுமில்லை. எனது பல்லாண்டு அனுபவ முறையில் புடம் போட்டுப் போட்டு ஒளி வீசிய அஹங்காரத்தைப் பொன்னாகப் பாவித்துத் தியானித்தேன்.

அந்தப் பொன்னை ரமண பகவானின் ஜோதி உருக்கி விட்டது. பிறகு நடந்த நிகழ்ச்சியெல்லாம், தட்டான் வார்த் தெடுத்த பொற் கம்பியின் உருவம் எப்படி எழிலுடைய ஆபரணமாக மாறுமோ, அப்படித்தான். கற்பனா சக்தியைத் தாண்டி விட்டு நீங்களும் என் மனத்தோடு தொடர்ந்து வந்தால் விஷயம் ஒருவாறு உங்களுக்குத் தெளிவு படும்.

மேற்சொன்ன நவராத்திரி கழிந்துப் பத்தாம் நாள் விடியுமுன் தொடங்கிய ரமண ஜயந்திக் கொண்டாட்டம் பற்றிச் சிறிது கூறுவது இங்கு பொருத்தமென நினைக்கிறேன்.



வாத்தியார்:—டேய் சோமு, இரண்டும் இரண்டும் எவ்வளவுடா!

சோமு:—ஸார்! ஸார்! என்னைக் கேட்காதீர்கள், ஸார்! இரண்டும் இரண்டும் நான்கு என்று தப்பாகச் சொல்லுவேன். அப்புறம் நீங்கள் என்னை அடிப்பீர்கள்!

ரமண பகவானின் சமாதியில் நடத்திய வேதோக்த பூஜா விதானங்களையும், பற்பல நறுமண மலர்களாலும், பொன், வெள்ளி ஆபரணங்களாலும் ஆக்கப்பட்ட அலங்காரங்களையும், பக்தர்கள் பாடிப் பரவசமான காட்சிகளையும், நேரில் பார்த்து அனுபவித்தேன். அப்போது சத்தியப் பொருள் ஒன்றே யுளது. அதுவே பரம் பொருள் என்று அத்வைத மதம் நிலைநாட்டிய நம் தென்னாட்டுப் பூர்வாசாரியரான ஆதிசங்கர பகவத் பாதரவர்களை காட்சியளித்தாரென்று கூறுவேன். சங்கராசாரியார் அவர்கள் கண்ட உண்மையை ஏடுகள் மூலம் படித்தும் காதால் கேட்டும்தான் உள்ளோம்.

ஆனால், அந்த உண்மையை என் வாழ்விலேயே நேர்முகமாக, அனுபவ வாயிலாகக் கண்டேன். ரமண பகவான் வாழ்க்கையில் மட்டுமல்ல, அவர் நிலை நாட்டிச் சென்ற ஆசிரம வாழ்க்கையிலும், அன்னார் அமர்ந்திருந்த இடத்திலும், அவர் உலவி வந்த பாதைகளிலுங்கூட அவரது பெருமை மிளிர்வதைக் கண்டேன். தக்ஷிணாமூர்த்தியின் அவதாரமாய்ப் பதினேழு வயதில் அருணையில் தவஞ் செய்த அந்த மகானை ஈன்ற இப் பாரத நாட்டை மனமார வாழ்த்துவோமாக!

ரமண பகவான் அருளிய ஆத்மானுபவ மொழிகளில், அவர் நமக்கு உபதேசித்த இரண்டு முக்கிய விஷயங்கள், காந்தம் இரும்பைப் பற்றுவதுபோல் பற்றிக் கொண்டன.


முதலாவது, "நான் யார்?" என்ற ஆத்ம விசாரம். "நான்" என்ற சொல் எங்கிருந்து உதித்தது? உள்ளத்திலிருந்தல்லவா? அதை அந்த உள்ளத்திலேயே ஒடுக்குங்கள். பிறகுதான் அதன் உண்மையான ஆத்ம ஸ்வரூபம் விளங்கும். இந்த விசாரத்தைப் பூர்வாசார்யர்கள் ஒவ்வொருவரும் கையாண்டதாலேயே அவரவர் ஆத்மானுபவங்களை மும்மதங்களாக மாற்றியமைக்க முடிந்தது. தவிரவும், அந்தந்தக் காலத்திற்கு ஏற்ப, வேதாந்த விசாரணையில் ஈடுபட்டவர்களுக்குத் தக்கபடி உபதேசிக்கவும் முடிந்தது.

இரண்டாவது, இருதயத்தின் விளக்கம். இது ஒவ்வொருவரின் சரீரத்திலும் இடது பக்கத்தில் அமைந்திருக்கும் மாமிச பிண்டத்தைக் குறிக்கும் என்பர் பலர். இரத்தத்தைச் சுத்தி செய்ய ஈசனால் அமைக்கப்பட்ட ஓர் கருவி என்றும் எண்ணுவர்.

ஆனால், ரமணர் கூறுவது அந்த மாம்ஸ பிண்டத்தை அல்ல. அவர் கூறும் "இருதயம்" தேகத்தின் வலது பக்கத்தில் அமைந்திருப்பதும், உபநிடத நூல்களில் கூறும் நூற்றியொன்று நாடிகளின் உற்பத்தி இடமுமாகும். அந்த இடத்திற்கு மனத்தைச் செலுத்தி, நிஷ்டை கூடி, அதிலிருந்து மேல் நோக்கிச் செல்லும் உன்னமாகிய அமுத நாடியை அடைந்தால், எல்லா ஜீவர்களுக்கும் அந்தராத்மாவாய் விளங்கும் "இருதயம்" என்ற உண்மை நிலை புலப்படும் என்கிறார். அதுதான் எனக்கு அணு ஒளியாய்ப் புலப்பட்டது. அதுவேதான் ரமணர் காட்டிய விசுவரூப தரிசனத்தில் மின்மினிப் பூச்சி போல் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது.

முடிவில் எனது வேண்டுகோள் என்னவெனில், திரு அருணையை ஓர் மகத்தான யாத்திரை ஸ்தலமாகக் கொண்டு ரமணர் கண்ட ஆத்மானுபவச் செல்வங்களை விருத்தி செய்து கொள்ள அவரவர்கள் நேரில் செல்வதுதான் ஒவ்வொருவரும் செய்யத்தக்க புனித கைங்கரியமாகும்.

இறவாத ரமண பகவானின் புகழ் பேசக் கேட்டீர்கள். ஆனால் உங்கள் இருதயத்தைத் தாமரை மொட்டாகக் கற்பனை செய்து பாருங்கள். ரமண பகவானைச் சூரியனாக நோக்குங்கள். உங்கள் இருதயம் மலருமேயானால், நான் கண்ட உண்மையை ஒருவாறு உங்களுக்குப் புலப்படுத்தியதாகக் கருதுவேன். எங்கும் நிறைந்த ரமண ஜோதியை உங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் காண்பேன்.


தலைமயிர் கொட்டுகிறதா?
வைடெக்ஸ்
மயிரை வளர்க்கிறது
Pearline Paris Ltd.
P.O. Box 493
Bombay.


For healthy Skin
insist on
MARGO
SOAP
THE GENUINE NEEM OIL SOAP
A Calchemico PRODUCT

நாதன் பிழைத்தார்!

ராஜ்

மானிடராகப் பிறந்த எவருக்குமே வயிறுதான் பிரதானம் என்று சொல்லத் தேவை இல்லை. உடம்பிலேயே நடு நாயகமாக விளங்கும் அந்த உறுப்பிற்கு இரண்டு விஷயங்களைத் தாங்க முடியாது. ஒன்று கோரப் பசி; மற்றொன்று அமோக வலி. ஸ்ரீமான் நாதனும் ஒரு மானிடப் பிறவி. ஆகையால் மேற் சொன்ன இரண்டு விஷயங்களுக்கும் விலக்கல்ல. பசி வந்து விட்டாலோ வாயறியாமல் தின்று விடுவார். அதனால் ஏற்படும் வலி வந்தாலோ வந்தது மோசம்!

வலி வரும் பொழுது இனிமேல் ஒன்றுக் கொன்று சாப்பிட்டுக் கஷ்டப் படக்கூடாது என்றுதான் சங்கல்பம் செய்து கொள்வார். ஆனால் பசி வந்து விட்டால் அவருடைய சங்கல்பங்கள் எல்லாம் ஸ்மசான வைராக்கியம் பிரசவ வைராக்கியமாக முடிந்து விடும்.

அன்று அவர் ஸகதர்மிணி ராஜம் பருப்பு உருண்டை சாம்பார் வைத்திருந்தாள். ஒன்றே ஒன்றுதான் இலையில் விழுந்தது; அதைச் சாப்பிட்ட நாதன் மற்றொன்றுக்கு 'ஆர்டர்' கொடுத்தார். ஆக மொத்தம் மோர் சாதம் சாப்பிட்டு எழுந்திருக்கும்போது ஆறு பருப்பு உருண்டைகள் வயிற்றுக்குள் போயின. போதாததற்கு இடை வேளை டிபனுக்கு என்று மூன்றே மூன்று பருப்பு உருண்டைகளை வாங்கிப் பொட்டலம் கட்டிக் கொண்டு ஆபீஸுக்குக் கிளம்பும்போது, "ராஜம்! பாக்கி ஏதாவது பருப்பு உருண்டை இருந்தால் சாயங்காலம் டிபனுக்கு வைத்து வை" என்று சொல்லிவிட்டுப் போனார்.

ஆனால் நாதன் சாயங்காலம் ஆபீஸிலிருந்து வரும்பொழுது காலையில் இருந்த அந்த உற்சாகமெல்லாம் எங்கு போய் ஒளிந்ததோ, தெரியவில்லை! ஒரு கையால் வயிற்றை அமுக்கிக் கொண்டு வரும்போதே அவர் மனைவிக்கு இன்று ராத்திரி சிவராத்திரி தான் என்று தெரிந்து விட்டது.

ராத்திரி சாப்பிடுவதற்காக இலைக்கு முன் உட்கார்ந்தபொழுது அவருக்குப் பசியே இல்லை. 'முணுக் முணுக்' என்று வயிற்றை வலிக்க ஆரம்பித்தது. இருந்தாலும் செல்ல வயிற்றைப் பட்டினி போட நாதனுக்கு மனம் துணியவில்லை. ஆகவே மோரும் சாதம் மட்டும் சாப்பிடுவது என்று உட்கார்ந்தவர் ருசிகண்ட நாக்கின் வசப்பட்டு இரண்டு பருப்பு உருண்டைகளையும் உள்ளே தள்ளிவைத்தார்.

அன்றிரவு நாதன் முதலில் நேராகப் படுத்தார். அப்புறம் குப்புறப்படுத்தார். தலையணையைக் கட்டிக் கொண்டு படுத்தார். மெள்ள ஆரம்பித்த வயிற்றுவலி தன்னுடைய வீர்யத்தைக் காண்பிக்கத் தலைப்பட்டது.

எத்தனை நாட்களுக்குத்தான் இந்த சனியன் பிடித்த வயிற்று வலியைச் சகித்துக் கொண்டிருப்பது? ஆகவே, ஒரு முடிவுக்கு வந்து அறைக்கு வெளியே வந்தார். தட்டித் தடவி விளக்குகள் வைக்கும் இடத்திற்கு வந்தார். அவர் தேடிய வஸ்து கைக்குக் கிடைத்தது. கையிலிருந்த புட்டியைத் திறந்தார். 'மட மட' என்று குடித்தார். அங்கேயே பாட்டிலை வைத்துவிட்டு உள்ளே வந்தார். அவருக்கு உலகமே சுற்றியது. என்னமோ செய்தது.

"ராஜம் தாங்கலேடீ! என்னைப் பிடித்துக் கொள். நான் ஆத்திரத்தில் ஒரு காரியம் செய்து விட்டேன். மண்ணெண்ணெயைக் குடித்து விட்டேன். என்னால் இந்த வயிற்று வலி தாங்க முடியவில்லை!"


"என்ன! தற்கொலையா? என் தலையில் இப்படிக் கல்லைத் தூக்கிப் போட்டு விட்டீர்களே!" என்று அவள் ஓலமிட ஆரம்பிக்கும் போதே நாதன் 'ஓ' என்று கத்திக் கொண்டு வாயிலெடுத்தார். அவ்வளவுதான்! உள்ளே இருந்து மட மடவென்று அவர் சாப்பிட்ட பருப்பு உருண்டை எல்லாம் கண்ட துண்டமாக வந்து விழுந்தன. உடனே ராஜத்தின் மடியில் சாய்ந்தார்.

இரண்டு தடவை கண்களை மூடி மூடித் திறந்தார் நாதன். உடம்பெல்லாம் வியர்த்தது. எழுந்து உட்கார்ந்தார். என்ன ஆச்சரியம்! வயிற்று வலி இருந்த இடம் கூடத் தெரியாமல் மறைந்திருந்தது!

அன்று டெஸ்ட் மாட்சு! மிஸ்டர் நாதனின் அருமந்தப் புதல்வன் சோமு எழுந்தான்; குளித்தான்; வேண்டிய சாமான்களை எடுத்துக் கொண்டான். அப்புறம் 'திரு திரு' வென்று விழித்துக்கொண்டு அறைகளையெல்லாம் வளைய வளைய வந்தான். அதைப் பார்த்த ராஜம், "என்னடா? எதையாவது கெட்டுப் போக்கி விட்டாயா, என்ன?" என்று அவனைக் கேட்டாள்.

"ஆமாம் அம்மா! அந்த மண்ணெண்ணெய்ப் பாட்டில் காலியாக இருந்தது. இன்று டெஸ்ட் மாட்சுக்குப் போகிறேன் அல்லவா? வெய்யிலில் தாகம் எடுத்தால் குடிக்க வேண்டுமே என்பதற்காக அதைச் சுத்தம் செய்து ஜலம் பிடித்து அங்கேயே வைத்திருந்தேன். அதைக் காணோம்!" என்றான் சோமு.

"அப்படியா! அதிலே ஜலமா இருந்தது? மண்ணெண்ணெய் இல்லையா?" என்று கேட்டுக் கொண்டே வந்த நாதன், "ராஜம்! அவனுக்கு ஜலம் கொடுத்தனுப்பாதே! அவனுக்கு பினாயிலே நல்ல காப்பியாக போட்டுக் கொடு" என்று சிபார்சு செய்தார்.


ஒவ்வொரு வேலைக்கும் பிரத்யேகமான
ஷாலிமார் பெயிண்ட்
இருக்கிறது
புத்திசாலிகள் ஷாலிமார் பெயிண்டையே
SPX 83ATM
உபயோகிக்கிறார்கள்.
SHALIMAR
PAINT
SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., LTD.
POST BOX 136, MADRAS 1
Importers & Distributors for Ceylon :
LEWIS BROWN & CO., LTD., POST BOX 85, COLOMBO

யார் குற்றவாளி?

பகீரதன்

அவன் குற்றவாளியானான். சட்டம் அவனைக் குற்றவாளியாக்கி விட்டது. அவன் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. தான் குற்றவாளியில்லை என்று வாதாடவும் அவன் தயாராயில்லை. அவன் குற்றம் செய்ய வில்லை என்று அவன் மனச் சாட்சி கூறியது. ஆனால் உலகம் அவனைக் குற்றவாளியில்லை என்று கூறுமா? சமூகம் அவனைத் திருடன் இல்லை என்று தீர்ப்பளிக்குமா?

அவன் தனக்குத் திருட்டுப் பட்டம் கிடைத்ததை நினைத்துக் குமுறினான். தான் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டதைக் கேட்டு ஒரு கணம் திகைத்தான். அவளுக்காக அவன் அதை ஏற்றுக் கொள்ளத் தயாரானான். அவளுக்காக அவன் எதையும் தியாகம் செய்யத் துணிந்தான்.

அவளும் அவனும் கணவனும் மனைவியுமல்ல. காதலர்களுமில்லை. கூடப் பிறந்தவர்களுமில்லை. ஒன்றாகப் படித்தவர்களுமில்லை. அவன் யாரோ; அவள் யாரோ. ஆனால் அவர்களுக்குள் ஒரு ஒற்றுமை இருந்தது. அதுதான் அவர்களைச் சேர்த்து வைத்தது. அவன் ஒரு அனாதை. அவளும் ஒரு அனாதை. அவனுக்கும் உடுக்க ஒரு துணி கிடையாது. அவளுக்கும் ஒரு கந்தல்கூடக் கிடையாது. சத்திரம், சாவடி, பாழடைந்த கோயில் இவைகள்தான் அவர்கள் இன்பக் குடிசை, வீடு, மாளிகை எல்லாம்.

ஒட்டி உலர்ந்துபோன கன்னங்கள். குழி விழுந்த கண்கள். எண்ணெய்காணாது வறண்டு கிடந்த தலை. வறுமையால் வாடி முதுகோடு முதுகாய் ஒட்டிக் கிடந்த வயிறு. எங்கே வெளியே பிய்த்துக் கொண்டு வந்து விடுமோ என்று பயப்படும்படி இருந்த விலா எலும்புகள். இதுதான் அவனுடைய எழில் உருவம். அந்த உருவத்தை ஒரு கந்தல் துணி அலங்கரித் திருந்தது. அப்பப்பா! என்ன பரிதாபமான உருவம்! என்ன பயங்கரக் காட்சி! வறுமைக்கு ஒரு எல்லை கிடையாதா? இவைகள் தொலைய மார்க்கம் கிடையாதா?

அவளைப் பற்றி என்ன சொல்லுவது? அவனைப் படைத்த ஆண்டவன் அதே வேளையில் அவளையும் படைத்திருக்க வேண்டும். அவன் பஞ்சத்தின் மழை. அவள் அந்த மழையைக் கண்டு ஆடும் மயில். அவன் வறுமையின் வசந்தம். அவள் அங்கு பாடும் குயில். அவன் பஞ்சத்தின் பாட்டு. அவள் அந்தப் பாட்டில் இனிமை. அவன் கூரையில்லாத ஓலைக் குடிசை. அவள் அந்தக் குடிசையில் அவிந்து கிடக்கும் அடுப்பு. அவர்கள் இருவரையும் வளர்ந்து வாடிக் கிடக்கும் ரோஜாச்செடிகள் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆம்; அவர்களிருவரும் வறுமையில் அடிபட்டு வாடாமல் இருந்தால் மலர் குலுங்கும் ரோஜாச் செடிகளைப் போல்தான் தள தளவென்று இருப்பார்கள். அவர்களும் இளம் வயதினர்கள்தானே!

அந்த ஊரில் அவன் எத்தனையோ வருஷ காலமாக வாழுகிறான். அவனுக்கு அந்த ஊரில் உள்ள எல்லாரையும் தெரியும். ஒவ்வொருவருடைய உள்ளப் பாங்கும் தெரியும். அவனையோ யாருக்கும் தெரியாது. அவன் ஏழை; அவன் ஒரு பரதேசி. அவனைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று யாருக்குக் கவலை இருக்கப் போகிறது?

ஹோட்டல்களில் அலறிக் கொண்டிருக்கும் ரேடியோ பெட்டிகளிலிருந்து அவன் கேட்ட 'டப்பா' பாட்டுக்களைப் பாடி வயிறு வளர்த்து வந்தான். புகழ் பெற்ற பாடக பாடகிகள் பாடும் 'டப்பா' பாட்டுக்களைவிட அவன் அழகாகப் பாடினான். அவன் வறுமையில் வாடிக் கிடந்தாலும் அவன் குரல் வளமாகவே இருந்தது. அவன் பாட்டில் ஒரு கவர்ச்சி இருக்கத்தான் செய்தது. ஆனால் அதைப் பாராட்டத்தான் மனிதர்கள் இல்லை. எப்படிப் பாராட்டுவார்கள்? அவன்தான் ஏழையாயிற்றே! பிச்சையெடுக்கும் பரதேசியாயிற்றே!

அவன் பிச்சை எடுத்துக் காலந் தள்ளுவதை வெறுத்தான். அப்படி வாழும் வாழ்வு ஒரு வாழ்வில்லை என்று அவனுக்குத் தெரியும். உடலை உழைத்து வேலை செய்துதான் வயிறு வளர்க்க விரும்பினான். ஆனால் அவனை வேலையில் வைத்துக் கொள்ள யாரும் விரும்பவில்லை. அவன் நாணயத்தைப் பரிசோதிக்காமலே அவனை நம்ப மறுத்தார்கள். அவன் உருவத்தைக் கண்டு அவன் உழைப்பின் சக்தியைக் குறைவாக மதிப்பிட்டார்கள். அவன் குழி விழுந்த கண்களின் குறுகுறுப்பற்ற பார்வையைப் பார்த்து அவனைத் திருடன் என்று திட்டினார்கள். "ஏ, திருட்டு நாயே! இப்படி வேலைக்கு வந்து எதையாவது திருடிக் கொண்டு போகலாம் என்று பார்க்கிறாயா?" என்று வாழ்த்தி அவன் வாழ்வைக் குலைத்தார்கள். வேறு வழியின்றி வயிற்றுப் பசியை ஆற்றிக் கொள்ள அவன் பிச்சை எடுத்தான். அதிலும் தனக்குத் தெரிந்த சங்கீதக் கலையை விற்றுப் பிச்சை கேட்டான். ஐயோ! ஏழையாகப் பிறந்துவிட்டால் இந்த நாட்டில் உயிர் வாழ முடியாது போலிருக்கிறதே! இந்த அவல நிலைமை மாறி மனிதனை மனிதனாக நினைக்கும் நாள் என்று வருமோ!

அன்று அவன் வழக்கமாகத் தங்கும் அந்தப் பாழடைந்த மாரியம்மன் கோயிலுக்கு வந்தான். ஆம், பசியோடுதான் வந்தான். வழக்கத்துக்கு விரோதமாக அங்கு சில மனிதர்களின் குரல் கேட்டுத் திகைத்தான். அவர்கள்

என்ன செய்கிறார்கள் என்று கவனித்தான். பாழடைந்த கோயிலைக் கவனிக்க மனிதர்கள் இல்லா விட்டாலும் அந்த மாரியம்மனின் பக்தர்களுக்குக் குறைவில்லை. தன் குறையைப் போக்கிக் கொண்ட சிலர் அம்மாளுக்குப் பொங்கலிட்டுப் படைப்பதற்காக அடுப்பை மூட்டிச் சர்க்கரைப் பொங்கல் சமைத்துக் கொண்டிருந்தனர். பொங்கல் எல்லாம் பொங்கி மாரியம்மனுக்குப் படைத்தார்கள். மாரியம்மன் கோயில் பூசாரிக்கும் வேண்டிய மட்டும் சர்க்கரைப் பொங்கலும் வெண் பொங்கலும் கொடுத்தார்கள். தாங்களும் சாப்பிட்டார்கள். அவன் ஆவலோடு அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பசி அதிகமாகி விட்டது. "அம்மா, தாயே! பசிக்குது!" என்று கையை நீட்டிக் கொண்டே அவர்களை நெருங்கினான்.

"சீச்சீ! எங்கு போனாலும் இந்தப் பிச்சைக்காரர்கள் தொல்லைதானா? போ! போ!" என்று எரிந்து விழுந்தான் அந்த அம்மான். மனிதர்கள் இன்னொரு மனிதருக்கு இரங்குவது, அவர்கள் பசியைப் போக்குவதுதான் கடவுள் பக்தி; தெய்வ சேவை என்பதை அந்த அம்மான் எங்கே அறியப் போகிறான்!

அவன் பசியும் அந்த அம்மானின் கடுஞ் சொல்லும் அவனுடைய மனித உணர்ச்சியைத் தூண்டி விட்டது. "கடவுளுக்குக் கால்படி சாதத்தைப் படைத்து விட்டுக் காரியமெல்லாம் கைகூட வேண்டுமென்று நினைக்கிறார்கள். கடவுள் சொத்தையே திருடித் தின்று வயிறு வளர்க்கும் பூசாரிக்குச் சர்க்கரைப் பொங்கலை வாரி வழங்குகிறார்கள். நான் பிச்சைக்காரனாம். பிச்சைக்காரன் என்றால் நான் மனிதனில்லையா? இந்த மனிதர்களின் கல் நெஞ்சைப் பார்த்துத்தான் கடவுளும் கல்லாகி விட்டார் போலிருக்கிறது" என்று முணுமுணுத்தான். தன்னைத் தானே நொந்து கொண்டான். ஐயோ! பாழும் வயிறே! உன்னால்தானே இந்தத் துன்பம் என்று வயிற்றைப் பிசைந்து கொண்டான். கண்ணீர் விட்டான்; கதறினான். ஒரு ஏழை, பிச்சை எடுக்கும் பரதேசி இதைத் தவிர வேறு என்னதான் செய்ய முடியும்?

கோயிலுக்கு வந்தவர்கள் எல்லாம் சென்று விட்டனர். அவர்கள் சாப்பிட்டு எறிந்த எச்சில் இலைகள் கிடந்தன. அதில் அவனுக்கு வேண்டிய அளவு ஆகாரமும் கிடந்தது. என்னே மனிதர்களின் விசித்திர எண்ணம். பசித்தவனுக்கு மனம் உவந்து ஒரு கை சோறு போட மறுக்கிறார்கள். அதே வேளையில் எத்தனையோ பேர் சாப்பிடும் அளவு ஆகாரத்தை இலையில் வைத்துக் குப்பையில் எறிகிறார்கள்.

அவன் அந்த இலைகளை ஒன்றாகப் பொறுக்கி எடுத்து வந்தான். அதிலிருந்த ஆகாரத்தை ஆவலோடு சாப்பிட ஆரம்பித்தான். அவன் பசி அவனுக்குத் தெரியும். அந்த வேளையில் தான் அவள் அவனுக்குப் பழக்கமானாள்.

"எனக்கும் கொஞ்சம் கொடேன்" என்று பல்லைக் காட்டிக் கெஞ்சினாள் அவள். ஒரு ஏழைதான் இன்னொரு ஏழைக்கு இரங்க முடியும். பசித்தவனுக்குத்தான் பசியின் அருமை தெரியும். ஆகவே அவன் அவளைக் கண்டு இரங்கினான். அவன் பசியை நினைத்துப் பச்சாத்தாபப் பட்டான்.

"வா! நீயும் வந்து சாப்பிடு" என்று ஆதரவுடன் அழைத்தான்.

அவள் ஒரு கணம் ஆச்சரியப்பட்டாள். இவ்வளவு அன்போடு அவன் கூப்பிடுவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. தன் வாழ்நாளிலேயே முதன் முதலில் தன்னிடம் அன்பு காட்டிய ஒரு மனித உருவத்தை அன்றுதான் கண்டாள். தன்னை மறந்தாள். தன் மங்காப் பசியையும் மறந்தாள்.

"ஏன், உட்கார்ந்திருக்கிறாய்? வா, வந்து சாப்பிடு" என்று மறுபடியும் அழைத்தான்.

அப்பொழுதுதான் அவள் தன் நிலையை உணர்ந்து, அவனோடு சேர்ந்து சாப்பிட்டாள்.

அன்று முதல் அவர்கள் இருவரும் சேர்ந்தே வாழ்ந்துவர ஆரம்பித்தனர். மாரியம்மன் கோயில் இப்பொழுது இரண்டு ஆத்மாக்களுக்கு அடைக்கலம் கொடுத்தது.

அவர்களுடைய வாழ்க்கையில் ஒளிவு மறைவே கிடையாது. பொறாமை பூசலே கிடையாது. நாள் பூராவும் வீதிகளில் பிச்சை எடுப்பார்கள். அதைக் கொண்டு வந்து



மாரியம்மன் கோயிலில் வைத்துக் குதூகலத்துடன் சாப்பிடுவார்கள். சாப்பிட்டு முடிந்ததும் அவன் பாடுவான். அதை அவள் ஆசையோடு கேட்பாள். 'ஆகா! ரொம்ப ஜோர்' என்று தலையை ஆட்டுவாள். தன்னுடைய பாட்டைப் பாராட்டுவதற்கு, கேட்டு ரஸிப்பதற்கு, தனக்கு ஒரு ரஸிகை கிடைத்து விட்டதை நினைத்து அவன் மேலும் உற்சாகமாகப் பாடுவான். பாட்டு முடியும். அவளும் அவனும் பல விஷயங்களைப் பற்றிப் பேசுவார்கள். நேரம் போவதே தெரியாமல் பேசுவார்கள். பேசிக் கொண்டே இருப்பார்கள். என்ன பேசிக் கொள்வார்களோ? அது அந்த மாரியம்மனுக்குத்தான் வெளிச்சம்.

ஒரு நாள் அவர்கள் தங்களுக்குக் கிடைத்த ஆகாரத்தைக் கொண்டு வந்து மாரியம்மன் கோவிலில் வைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தலைக்கு மேலே இரண்டு குருவிகள் 'கீச், கீச்' என்று கத்திக் கொண்டு பறந்து வந்தன. அதைப் பார்த்தவுடன் அவன் என்ன நினைத்தானோ, தெரியவில்லை. சற்று நேரம் அந்தக் குருவிகளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவைகள் சந்தோஷமாகப் பறந்து பறந்து வந்து விளையாடுவதைத் தன் கண்களை அகல விரித்துப் பார்த்தான். "நாம் ஏன் மனிதர்களாகப் பிறந்தோம். குருவிகளாகப் பிறந்திருக்கக் கூடாதா?" என்று அவளைக் கேட்டான்.

அவள் அவனுடைய கள்ளமற்ற உள்ளத்தை நினைத்து மனதிற்குள் சிரித்துக் கொண்டாள். அந்தக் குருவிகள் குதூகலமாகப் பறந்து பறந்து வருவதை ஒருமுறை பார்த்தாள். "எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. குருவிகளாகப் பிறந்திருந்தால் தெருத் தெருவாகப் பிச்சை கேட்கப் போக வேண்டியதில்லை. மனித சமூகத்தில் இருக்கும் அக்கிரமங்களை அநுபவிக்க வேண்டியதில்லை. அவைகளுக்குள் ஆண் பெண் என்ற இரண்டே சாதிதான் உண்டு. வேறு சாதிக் கொடுமைகள் கிடையாது. பணக்காரன் பரதேசி என்ற வித்தியாசம் கிடையாது. இந்தக் குருவிகளுக்கு இருக்கும் பண்பாடுகூடப் பகுத்தறிவு படைத்த மனிதர்களிடம் இல்லையே!" என்றாள் அவள்.

அவள் பரதேசிதான்; ஏழை தான்; படித்துப் பட்டம் பெறாதவள் தான், இருந்தாலும் என்ன அருமையான உண்மையை விளக்கமாக எடுத்துச் சொல்லி விட்டாள்!

காலம் மாறியது. மழைக்காலம் வந்தது. மழையும் பெய்தது. காலத்தில் பெய்த மழையைக் கண்டு காலமெல்லாம் கஷ்டப்பட்டு உழைத்த உழவர்கள் களித்தனர். பயிர்கள் பசுமை கொண்டு விளங்கின. பாரெல்லாம் உள்ள மக்கள் மகிழ்ந்தனர். ஆனால் அவளும் அவனும் அந்தக் களிப்பில் கலந்து கொள்ள முடியவில்லை. அந்த மகிழ்ச்சியில் மனம் செலுத்த முடியவில்லை. அவர்கள் இருவரும் குளிர் தாங்க முடியாமல் தவித்தார்கள். தெருவில் போய்ப் பிச்சை கேட்க முடியாமல் திண்டாடினார்கள். ஐயோ! என்ன கொடுமை! ஏழைகளாகப் பிறந்து விட்டால் இயற்கையின் உதவி கூட அவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கும் போலும்!

அன்று பூராவும் விடாமல் மழை பெய்து கொண்டே இருந்தது. அவளும் அவனும் மாரியம்மன் கோவிலிலேயே ஒண்டிக் கொண்டிருந்தனர். அவர்களால் வெளியே போக முடியவில்லை. நாள் பூராவும் பட்டினி கிடந்தார்கள். பகற் பொழுது போய், இருட்டியும் விட்டது. அவன் பசி தாங்காது துடித்தான். அவளும் பசி தாங்காது துடித்தாள். "எனக்கு மயக்கமாக இருக்கிறது. என்னால் பசி தாங்க முடியவில்லை!" என்றாள் அவள்.

"எனக்கும்தான் பசிக்குது. இந்த மழையில் வெளியில் போனால் என்ன கிடைக்கப் போகிறது?" என்று அழமாட்டாக் குறையாகச் சொன்னான் அவன்.

"கருணையுள்ள யாராவது ஒரு கை சோறு போடுவார்கள். மனித உள்ளம் படைத்த யாராவது ஒரு வாய் சாதம் அளிப்பார்கள். எனக்கு நல்ல ஜுரம் அடிக்கிறது. என்னால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது. எனக்காகக் கொஞ்சம் யாரையாவது கேட்டுப் பாரேன்" என்று கூறிக் கொண்டே படுத்து விட்டாள் அவள்.

அவன் அவள் முகத்தை ஒரு முறை பார்த்தான். ஜுரம் அடிக்கிறதா என்று அவள் நெற்றியில் கையை வைத்துப் பார்த்தான். அவள் உடம்பு நெருப்பாகக் காய்ந்து கொண்டிருந்தது. அவள் மெலிந்த உடல் குளிரில் நடுங்கிக்கொண்டிருந்தது. பேச்சற்று சோர்ந்து கிடந்தாள் அவள். அவன் மனம் குமுன்றது. அவன் இந்த உலகில் அடைந்திருந்த அனுபவ அறிவு சிந்தித்தது. அவன் சிந்தனை சிறகடித்துக் கொண்டு கிளம்பியது.



மேஸ்திரி:—ஏய் முனியா, அவர்களெல்லோரும் ஆளுக்கு இரண்டு கல்லைத் தூக்கிக் கொண்டு போகும் போது நீ மாத்திரம் ஏன் ஒரு கல்லைத் தூக்கிக் கொண்டு போகிறாய்?

முனியன்:—அவர்கள் மற்றொரு முறை நடப்பதற்குச் சோம்பல்பட்டுக்கொண்டு இரண்டு கல்லாகத் தூக்கிக் கொண்டு போகிறார்கள்!

'ஒருவன் பட்டினி கிடந்து சாகிறான். இன்னொருவன் பசிப்பதற்கு மருந்து சாப்பிடுகிறான். ஏன் ஒருவன் குளிருக்குப் போர்த்திக் கொள்ள துணியில்லை. இன்னொருவனுக்குத் துணிகளைத் துவைப்பதற்கு நாலு ஆட்கள் வேண்டியிருக்கிறது. உழைத்தவன் சோறின்றிப் பட்டினி கிடந்து சாகிறான். உழைக்காமலே உண்டு, உடுத்திக் களிக்கிறான் பணக்காரன்; பணக்காரக் குடும்பத்தில் பிறந்துவிட்ட ஒரே காரணத்தால். இது என்ன சமுதாயமோ? ஏழைகள் பரதேசிகளாகிப் பட்டினி கிடந்து சாகவேண்டியது தானா? இந்த நாட்டு மக்கள் எல்லாருக்கும் உண்ண உணவும் உடுக்க உடையும் வசிக்க வீடும் கிடைத்துச் சுகப்பட மாட்டார்களா? இந்த ஏற்றத் தாழ்வுகளுக் கெல்லாம் காரணம் என்ன? மனிதன் தன்னைப் போன்ற பிற மனிதனை மனிதனாக நினைக்காததுதான்.'



"அம்மா! பசிக்குதே!" என்று முனகிக் கொண்டே திரும்பிப் படுத்தாள் அவள்.

அவன் சிந்தனை 'சட்'டென்று நின்றது. அவளை ஒரு முறை பார்த்தான். அவள் பசியைத் தீர்க்கவேண்டும் என்று தீர்மானித்தான்.

கடும் குளிரையும் கொட்டும் மழையையும் பாராமல் நடந்தான். வீடு வீடாக ஏறிப் பிச்சை கேட்டான். தெருத் தெருவாக அலைந்து யாசித்தான். அவன் நிலையறிந்து ஆதரவு அளிப்பவர்கள் யாருமில்லை. அவன் சோர்ந்து விட்டான். அவள் வாடிய முகம் அவன் மனக் கண்முன் தோன்றி வேதனையளித்துக் கொண்டேயிருந்தது.

கடைத்தெருப் பக்கம் சென்றான். எல்லாக் கடைகளும் மூடிக் கிடந்தன. மழை தூறிக் கொண்டிருந்தது. அவன் காதில் "அம்மா! பசிக்குதே!" என்ற அவள் தீனக் குரல் ஒலித்துக் கொண்டே இருந்தது.

கஷ்டம் தன்னையும் மீறினால் கடவுளை வேண்டுவது மனித சுபாவம் அல்லவா? அவனும் கடவுளை வேண்டினான். "பகவானே! அவளைக் காப்பாற்று" என்று கதறினான். கடவுள் கண் திறந்து விட்டார்!

கடைத் தெரு மூலையில் ஒரு வெற்றிலைப் பாக்குக் கடை மட்டும் திறந்து கிடந்தது. ஒரு கயிற்றில் வாழைப் பழம் சீப்புச் சீப்பாக மாட்டியிருந்தது. கடைக்காரனும் கண்ணை மூடித் தூங்கிக் கொண்டிருந்தான். "அம்மா! பசிக்குதே!" என்ற அவள் சோகக் குரல் அவன் காதில் கேட்டுக் கொண்டே இருந்தது.

அவன் மூளை வேகமாக வேலை செய்தது. பூனை மாதிரி மெதுவாக அடி மேல் அடி எடுத்து வைத்துச் சென்றான். 'டபக்' கென்று ஒரு சீப்பு வாழைப் பழத்தைத் தூக்கிக் கொண்டு ஓடினான். கடைக்காரன் 'திடுக்'கென்று விழித்துக் கொண்டான். "திருடன்! திருடன்!" என்று கத்தினான். அதே சமயம் இரவு ரோந்து வந்து கொண்டிருந்த போலீஸ்காரர்கள் காதில் இது விழுந்தது. "திருடன்! பிடி! பிடி!" என்று கத்திக் கொண்டே அவனைத் தொடர்ந்து வேகமாக ஓடினார்கள்.

அவனோ தன் முழு பலத்தையும் உபயோகித்து ஓடினான். போலீஸ்காரர்கள் தன்னைத் தொடர்ந்து ஓடி வருகிறார்களா என்று திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே ஓடினான். கடைசியில் மாரியம்மன் கோயிலுக்கும் வந்து விட்டான். சற்று நின்று யாராவது வருகிறார்களா என்று பின்னால் திரும்பிப் பார்த்தான். யாரும் வரவில்லை. வாழைப் பழச் சீப்போடு அவள் அருகில் சென்றான். அவள் கண்களை மூடியபடி படுத்துக் கிடந்தாள்.

அவசரம் அவசரமாக அவளைத் தொட்டு, "இதோ வாழைப் பழம் கொண்டு வந்திருக்கிறேன். எழுந்திரு, சாப்பிடலாம்!" என்று ஆவலோடு எழுப்பினான்.

அவள் கண் திறந்து பார்க்கவில்லை. ஆம்; இனி கண்ணைத் திறக்கவே மாட்டாள். அவளுக்குக் குளிராது; பசிக்காது. இனிமேல் 'அம்மா பசிக்குதே!' என்று சொல்லவே மாட்டாள். அவளை இனி யாரும், எதுவும் ஒன்றும் செய்ய முடியாது.

அவள் யாருக்காக மழையில் நனைந்து, தெருத் தெருவாக அலைந்து, கடையில் வாழைப்பழச் சீப்பைத் திருடினானோ, அவள் அந்த வாழைப் பழங்களைச் சாப்பிடமாட்டாள். அவன் குரலுக்கு இனி செவி சாய்க்க மாட்டாள். அவன் பாட்டைக் கேட்டு 'ஆகா! ரொம்ப ஜோர்!' என்று தலையை ஆட்டமாட்டாள். அவள் துன்பமும் துயரமும், வேற்றுமையும் விபரீதமும் நிறைந்த இந்த உலகை விட்டுச் சென்று விட்டாள்.

அவன் ஒரு கணம் அசையாமல் நின்றான். அவள் களங்கமற்ற முகத்தைப் பார்த்தான். அவன் கண்களில் கண்ணீர் பெருகியது.



"காப்பிக் கொட்டை இருந்தால் அரை விசை கொடுங்கள்!"

"இல்லை!"

"சரி, சர்க்கரையாவது அரை விசை கொடுங்கள்!"

"அதுவும் இல்லை!"

"உங்கள் கடையில் பின்னே என்ன தான் இருக்கிறது?"

"ஒன்றுமே இல்லை!"

"அதற்குக் கடையைத் திறந்து வைப்பானேன்? பூட்டிக் கொண்டு போய் விடுகிறதுதானே!"

"பூட்டும் இல்லையே!"

அவனுக்காக அவன் திருடிக் கொண்டுவந்த வாழைப்பழச் சீப்பைப் பார்த்தான். "அம்மா! பசிக்குதே!" என்று அவன் கடைசியாகக் கூறிய வார்த்தை அவன் காதிலே புகுந்து வேதனைப்படுத்தியது. அந்த அபயக் குரல் வரவரப் பெரிதாகி அவன் மண்டையே வெடித்து விடும்போலிருந்தது. அவனால் அந்தச் சோகத்தைத் தாங்க முடியவில்லை. தன் தலையை இரு கைகளாலும் அழுத்திப் பிடித்துக் கொண்டான். "ஹோ!" வென்று வாய்விட்டு அலறிவிட்டான்.

அதே சமயம் அவன் கைகளை யாரோ இறுக்கிப் பிடித்தனர். திரும்பிப் பார்த்தான். கையில் குறுந்தடியுடன் இரண்டு போலீஸ்காரர்கள் நின்று கொண்டிருந்தனர். இப்பொழுது அந்தப் போலீஸ்காரர்களைக் கண்டு அவன் பயப்படவில்லை.

அவர்களிடம் உண்மையை உள்ளபடி சொன்னான். தான் திருடவில்லை என்று சத்தியம் செய்தான். திருடுவது தன் தொழிலில்லை என்று கத்தினான்; கதறினான். போலீஸ்காரர்கள் "திருடர்கள் எல்லாருமே இப்படித்தான் சொல்லுவார்கள். உன்னை நம்ப முடியாது. இந்தப் பக்கத்தில் நடக்கும் திருட்டுகளுக்கெல்லாம் நீதான் காரணம்" என்று சொல்லி அவன் கையில் விலங்கை மாட்டி அழைத்துச் சென்றனர்.

மறுநாள் கோர்ட்டில் அவன் செய்த, செய்யாத பல குற்றங்களுக்காக மூன்று வருஷம் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பட்டது. அவன் ஒரு ஏழை. அதிலும் பரதேசி. ஏழை சொல் அம்பலம் ஏறுமா? ஆகவே அவன் கோர்ட்டில் வாய்மூடி மௌனியாகவே இருந்து விட்டான்.

அவனை அழைத்துச் சென்று சிறையிலடைத்தனர். அவன் சிறைச்சாலைக் கம்பளியில் காலை நீட்டி படுத்தான். அவன் மனம் அவளையே நினைத்துக் கொண்டிருந்தது. அப்பொழுது அவனுக்கு ஒரு தட்டில் ஆகாரத்தை வைத்துவிட்டுப் போனான் சிறைச்சாலை வார்டர். அதை அவன் அலட்சியமாகப் பார்த்தான். "ஆகா! என்ன விசித்திர உலகம்! இதே ஒருவேளைச் சாப்பாட்டுக்காகத் திருடத் துணிந்தேன். அந்தக் குற்றத்துக்காகவே என்னைப் பிடித்துச் சிறையிலடைத்துச் சாப்பாடு கொடுக்கிறார்கள்" என்று நினைத்துச் சிரித்தான்.

அவனுடைய மனக்கண் முன் அவளுடைய சோக முகம் தோன்றியது. அவன் காதுகளில் 'அம்மா! பசிக்குதே!' என்ற அவளுடைய கடைசி வார்த்தை ஒலித்துக் கொண்டிருந்தது. "அடாடா! நான் கொண்டு வந்த வாழைப் பழங்களைச் சாப்பிட்டுவிட்டாவது அவள் சாகக்கூடாதா? நான் குற்றவாளியாம். திருடனும். ஐயோ! நானா குற்றவாளி? என்னைக் குற்றம் புரியும்படி செய்த சமூகம் அல்லவா குற்றவாளி! இந்தச் சமூகத்துக்கு விமோசனமே கிடையாதா? ஏழைகள் மானத்துடன் வாழ முடியாதா?" என்று ஏங்கினான். அப்படியே தூங்கி விட்டான்.

* * *

மறுநாள் காலை. சூரியன் உதித்தான். புள்ளினங்கள் பாடிக் கொண்டு கூட்டை விட்டுக் கிளம்பின. உழவர்கள் தங்கள் வயலை நோக்கிச் சென்றனர். தொழிலாளர்கள் தங்கள் ஆலைக்கு விரைந்தனர். மக்கள் தங்கள் தங்கள் வேலைகளைக் கவனிக்கச் சென்றனர். சிறைச்சாலை வார்டர் தன் வேலையைச் செய்யச் சென்றான். கைதிகளை அடைத்து வைத்திருந்த ஒவ்வொரு அறையையும் திறந்தான். கடைசியில் அந்தப் பரதேசி அடைபட்டிருந்த சிறைக் கதவின் பூட்டைத் திறந்தான். 'டக்' கென்ற சத்தத்துடன், அந்தப் பூட்டுத் திறந்தது. ஆனால் அந்தச் சத்தம் அவன் காதுகளில் விழவில்லை; இனி விழவே விழாது. அவனுக்காக இரவு வைத்த ஆகாரம் அப்படியே கிடந்தது. இனி அவன் அதை எங்கே தொடப் போகிறான்? சிறைச்சாலை வார்டர் அதிசயத்துடன் அவனை உற்றுப் பார்த்தான். ஆனால் அவன் வார்டரைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. இனிமேல் அவன் யாரையுமே கண் விழித்துப் பார்க்க மாட்டான்! அவனை இனி எந்தச் சட்டமும் சமூகமும் ஒன்றும் செய்ய முடியாது. அவன் அவளைத் தேடிப் போய் விட்டான்.

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரஸ்வாமி

4. சந்தேக விளக்கம்

[ஆசன நேயர்களிடமிருந்து நூற்றுக் கணக்கான சந்தேகங்களைக் கேட்டுத் தினந்தோறும் கடிதங்கள் வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றன. எல்லா சந்தேகங்களுக்கும் கடித மூலமாகவோ கட்டுரைகள் மூலமாகவோ பதில் சொல்ல முடியாது. சிலரை நேரில் பார்த்து அவர்களுடைய நோயின் தன்மையை அறிந்துதான் சொல்ல முடியும். இருந்தாலும் ஒரு சில சந்தேகங்களுக்கு, கட்டுரையில் எழுதினாலே போதும் என்பதற்கு மட்டும் இந்தக் கட்டுரையில் பதில் எழுதுகிறேன். அன்பர்கள் ஊன்றிப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.]

கேள்வி: ஒருவருக்கு நீரில் ஏதாவது கோளாறு இருக்கின்றதா என்று கண்டு பிடிக்க, சிறு நீரைப் பரிசோதித்தால் தெரியும் என்று எழுதி யிருக்கிறீர்கள். அதற்கு ஆங்கில முறையில் தேறிய டாக்டரிடம் தானே போகவேண்டி யிருக்கிறது? வேறு வழிகள் ஏதேனும் உண்டா?

பதில்: சிறு நீரைப் பரிசோதித்து அதன் முடிவைக் கூறக் கூடியவர்கள் யாரா யிருந்தால் நமக்கென்ன? ஆங்கில முறையில் டாக்டராக இருக்கலாம்; ஆயுர்வேத பண்டிதராகவும் இருக்கலாம். சித்த வைத்தியராகவும் இருக்கலாம்; யூனானி ஹக்கீமாகவும் இருக்கலாம். நேச்சரோபதி, அலோபதி, ஹோமியோபதி முதலியவைகளில் தேறியவர்களாகவும் இருக்கலாம். நமக்குத் தெரிய வேண்டியது நீரின் குணம். அதை யார் பார்த்துச் சொன்னால்தான் என்ன? யாரிடமும் நமக்கு வெறுப்பு வேண்டாம். எல்லோரும் உலகத்துக்கு மிக மிக வேண்டியவர்கள். எத்தனையோ ஆபத்து சமயங்களிலெல்லாம் தெய்வம்போல் நின்று காப்பாற்றக் கூடியவர்கள். அவர்களிடம் சென்று நீரைப் பரீட்சிக்கக் கொடுப்பதில் குற்றமில்லை.

வேறு வழிகளென்றால் நாமே அதைக் கற்க வேண்டும். அதற்கான விஷயங்களைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். பரிசோதிக்கக் கண்ணாடிக் குழாய்கள், ஆசிட் மருந்துகள், ஸ்பிரிட் விளக்குகள் முதலியவை யெல்லாம் ஒவ்வொருவரும் தேடிச் செய்து கொள்வதற்குப் பதில், தெரிந்தவர்களிடம் கொடுத்து சுலபமாய் அறிந்து கொள்ளலாமே.

கேள்வி: ஆசனம் செய்பவர்கள் மாமிசம் சாப்பிடலாமா? கூடாதா?

பதில்: ஆசனம் செய்பவர்கள் மாமிசம் சாப்பிடக் கூடாது என்று கட்டாயம் ஒன்றுமில்லை. அப்படியானால், இந்த ஆசனங்களைக் கெட்டியாய் மூட்டை கட்டி வைத்துவிட வேண்டியதாய் இருக்கும். ஏதோ ஆசன விஷயத்தில் சிறிது விழிப்பேற் பட்டிருக்கும் இந்தக் காலத்தில் மாமிசம் சாப்பிடக் கூடாதென்று சொல்லத் துவக்கினால் நூற்றுக்கு ஒருவர் கூட ஆசனம் பழக முன்வர மாட்டார்கள். ஆசனம் செய்பவர்கள் மாமிசம் சாப்பிடலாம். அதனால் பாதகம் ஒன்றுமில்லை. இதிலிருந்து மாமிசம் சாப்பிடாதவர்களையும் சாப்பிடச் சொல்கிறேன் என்று அர்த்தமல்ல. சாப்பிடாதவர்கள் மாமிசம் சாப்பிடாமல் இருப்பதே உத்தமம். சாப்பிடுகிறவர்கள் அவரவர்களுடைய வியாதிகளின் தன்மையைப் பொருத்து, சிலர் சாப்பிடுவதை விட்டுவிட வேண்டியதாய் இருக்கும். சிலர் சில மாதங்கள் நிறுத்த வேண்டியதாய் இருக்கும்.

கேள்வி: சாந்தி ஆசனக் கட்டுரையில் சாந்தி ஜபத்தை எழுதி வரும்போது, கடைசியில் "மூளைக்கு அமைதி அளிக்கிறேன்! சக்தி அளிக்கிறேன்! என்று மூன்று தடவை மனதால் நினைக்கவும்" என்று எழுதி யிருக்கிறீர்களே! அந்த வாக்கியத்தை மட்டும் மூன்று தடவை மனதால் நினைப்பதா? அல்லது சாந்தி ஜபத்தை ஆரம்பத்திலிருந்தே மூன்று தடவையும் நினைப்பதா?

பதில்: ஒரு தடவை சாந்தி ஜபத்தில் சரீர அவயவங்களை வரிசையாய் நினைத்து வரும் போதே, இடையிடையில் மனது வேறு விஷயங்களில் போக ஆரம்பித்துவிடும். மறுபடியும் கவனம் வைத்து மனதைத் திருப்பி முதலிலிருந்து நினைக்க வேண்டும். இப்படி ஒவ்வொரு தடவையும் முதலிலிருந்து நினைக்க வேண்டுமானால், சாந்தி ஆசனம் பூர்த்தியாக வெகு நேரம் ஆகும். மனது எதுவரை நினைத்துப் பிறகு விட்டுப் போனதோ, அந்த இடத்திலிருந்து மறுபடியும் தொடர்ந்து செய்தால் போதும் என்று முன்பே எழுதி யிருக்கிறேன். சாந்தி ஜபத்தை மூன்று தடவை சொல்லி முடிக்க வேண்டுமானால் நேரம் அதிகமாகுமல்லவா? [தவிர] அந்தக் கடைசி வாக்கியத்தை மூன்று தடவை சொல்ல வேண்டிய அவசியமுமில்லை. [மூளைக்கு] "மூளையே! வாழ்க! நீ விசித்திரப் பொறி: உன் ஆணையால் சகலமும் நடக்கின்றது. இதோ! அமைதி அளிக்கிறேன்! அமைதி அளிக்கிறேன்!" என்று சொல்லி, மனதால் மூளையை மூன்று தரம் சுற்றிப் பிரதட்சணம் வரவும் என்று திருத்தி வாசித்தால் சரியாய் இருக்கும்.



பத்திரிகைச் சிப்பந்தி:—ஸார்! இந்தக் கதையை அவர் படித்துப் பார்த்து விட்டு மிகப் பிரமாதமான கதை என்று ரொம்பவும் பாராட்டுகிறார். நீங்கள் வேண்டுமானால் படித்துப் பார்த்து விட்டுப் பிரசுரிக்கலாம்.

ஆசிரியர் :—அவர் யார்?

சிப்பந்தி :—அவர் தான் இந்தக் கதையை எழுதியவர்.

கேள்வி : காந்தி காப்பியின் பலன் என்ன?

பதில் : காப்பியில், காபீன் என்ற கொடிய விஷ வஸ்து கலந்திருக்கின்றது. அது மது பானத்தைப்போல் நரம்புகளைத் தூண்டி உற்சாகப் படுத்தக் கூடியது. அதனால் நரம்பு பலஹீனமும் மற்றும் பல நோய்கள் உண்டாகின்றன என்று விஞ்ஞானமே புகல்கின்றது. ஆனால் காந்திக் காப்பி—கோதுமைக் காப்பியினால் கெடுதல் துளிகூட இடையாது. அசல் காப்பியைப் போன்ற பொய் உற்சாகம் ஏற்படாமல் இருக்கலாம். அதனால் நரம்புக் கோளாறுகள் ஒன்றும் ஏற்படாது. காந்திக் காப்பியில் கோதுமைச் சத்து சிறிதளவாவது இருக்கும். அது நோயாளிகளுக்குக் கஞ்சிக்குப் பதில் கொடுக்கலாமென்று மகாத்மா காந்தி அவர்களே சொல்லி யிருக்கிறார்கள். தவிர, விசேஷ பலன் ஒன்றும் சொல்ல முடியாது. பலன் ஏற்படுவதெல்லாம் பாலில் தான். ஆனால் காப்பி அந்த பாலின் குணத்தையும் கெடுத்துவிடுகின்றது. காந்திக் காப்பி அப்படி ஒன்றும் கெடுப்பதில்லை. காப்பியை மறக்க முடியாதவர்கள் காந்திக் காப்பியை ஒரு அநுபானமாக உபயோகிக்கலாம். அல்லது பாலை அப்படியே சாப்பிடப் பிடிக்கவில்லை என்பவர்களும், பாலை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை என்பவர்களும் காந்திக் காப்பியைச் சாப்பிடலாம். காந்திக் காப்பியில் காபின் என்ற விஷம் சேராததே விசேஷ பலன்.

கேள்வி : ஆசனங்களை யெல்லாம் செய்து முடித்த பின் சாந்தி ஆசனத்தைச் செய்து விட்டுத்தான் பிராணாயாமம் செய்ய வேண்டுமா? அல்லது பிராணாயாமமும் செய்து முடித்துவிட்ட பிறகுதான் சாந்தி ஆசனம் செய்ய வேண்டுமா?

பதில் : ஆசனங்களை யெல்லாம் செய்து முடித்த பின் சாந்தி ஆசனம் செய்துவிட்டுத் தான் பிராணாயாமம் செய்ய வேண்டும்.

கேள்வி : சர்வாங்காசனத்தை மட்டும் ஒருவர் பழகினால் போதுமா? வேறு ஆசனங்களையும் கூடச் செய்ய வேண்டுமா?

பதில் : மற்ற எல்லா ஆசனங்களையும் விட சர்வாங்காசனம் விசேஷ பலன் உடையது தான். ஆனால் முதுகெலும்பின் இளமைக்காகவும், சில நரம்புகளின் நன்மைக்காகவும் மற்றும் ஒரு சில ஆசனங்களைச் செய்தால் நல்லது. அவைகளெல்லாவற்றையும் செய்ய ஐந்து முதல் பத்து நிமிஷங்கள்தான் ஆகும். புஜங்காசனம், சலபாசனம், பஸ்சிமோத்தானாசனம் முதலியவைகள் மூன்று தடவையும் சர்வாங்காசனம் ஐந்து நிமிஷத்துக்குக் குறையாமல் அவரவர்களின் அவகாசத்தைப் பொருத்து அரை மணிக்கு மேல் போகாமல் செய்யலாம். மத்ஸ்யாசனம் சர்வாங்காசன நேரத்தில் கால் பங்கு நேரம் செய்ய வேண்டும். சிரசாசனம் ஐந்து முதல் பத்து நிமிஷம் செய்யலாம். அப்படி இவைகளெல்லாம் செய்ய முடிவதில்லை யென்றால் முடிந்தவரை சர்வாங்காசனத்தை மட்டும் செய்யலாம். ஆனால் மத்ஸ்யாசனம் கட்டாயம் செய்ய வேண்டும். பிறகு சாந்தி ஆசனமும் செய்தால்தான் நல்லது.

கேள்வி : பெண்கள் மாதவிடாய் நாட்களில் ஆசனங்களைச் செய்யலாமா கூடாதா? எத்தனை நாள் செய்யக் கூடாது? நாடி சுத்தி அந்த நாட்களில் செய்யலாமா?

பதில்: பெண்கள் வீட்டு விலக்காகும் நாட்களில் எந்த ஆசனமும் செய்யக் கூடாது. சிலருக்கு மூன்று நாட்கள் இருக்கலாம். சிலருக்கு ஐந்தாறு நாட்கள் இருக்கலாம். சிலருக்கு ஏழு நாட்கள் கூட இருக்கும். அந்த நாட்களில் எந்த ஆசனமும் செய்யக் கூடாது. மூன்று அல்லது நான்காம் நாளில் எண்ணெய்த் தேய்த்து ஸ்னானம் செய்தபின் ஐந்தாவது நாளிலிருந்து நாடி சுத்தி எல்லோரும் செய்யலாம். அதற்கு முன் நாடி சுத்தி முதலியவைகள் செய்ய வேண்டாம்.

கேள்வி: சூரிய நமஸ்காரம் செய்பவர்கள் ஆசனம் பழகலாமா? கூடாதா?

பதில்:—சூரிய நமஸ்காரத்தை சூரியன் உதயமாகும்போது இளம் வெய்யிலில் செய்யவேண்டும். அப்படிச் செய்து விட்டு அரை மணி அல்லது ஒரு மணி நேரம் பொருத்து யோகாசனங்களைப் பழகலாம். அதைப் போல யோகாசனங்களை முடித்து விட்டு அரை அல்லது ஒரு மணி நேரம் பொருத்தும் சூரிய நமஸ்காரம் செய்யலாம். ஆனால் வெய்யில் அதிகம் ஏறியபின் சூரியநமஸ்காரம் செய்யக் கூடாது. ஆகவே சூரிய நமஸ்காரத்துக்கும் யோகாசனங்களுக்கும் தடை யேதும் இடையாது. உடனுக்குடன் செய்யக் கூடாது. இடையில் அரை மணி அல்லது ஒரு மணி அவகாசம் கட்டாயம் வேண்டும். (தொடரும்)

ஹேமாவின் ஆசை

அஜெஸ்

கல்யாணக் கூடத்து ஊஞ்சலிலே உட்கார்ந்து வீசி வீசி ஆடிக் கொண்டிருந்த ஹேமா வாசற்படி ஏறி வந்து கொண்டிருந்த பக்கத்து வீட்டுப் பத்மாவைக் கண்டதும், "வா, பத்மா! ஏன் இரண்டு நாட்களாக இந்தப் பக்கமே காணோம்!" என்றாள் அன்புடன். "காணாமல் என்ன, ஒழிவில்லை" என்று யதார்த்தமாகப் பதிலளித்தவாறு பத்மா ஊஞ்சலில் வந்து உட்கார்ந்தாள். ஹேமா அந்த வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை. அவள் கண்கள் பத்மா உடலிலிருந்த அரக்குக் கலர் பட்டுப் புடவையில் அப்படி லயித்துப் போயிருந்தன.

தன்னை பத்மா கவனிப்பதை அறிந்ததும், "இது எப்பொழுது வாங்கினாய், பத்மா!" என்றாள் ஹேமா மிகவும் சிரமப்பட்டுக் கொண்டு. முன்பு அவளை வரவேற்றபோது தொனித்த அன்பு இப்போது இந்தக் கேள்வியிலே தொனிக்கவில்லை. பொறாமையின் சாயைதான் அதிலே இழையோடியது. ஆனால் பத்மா அதை உணரவில்லை. "நேற்றுத்தான் வாங்கினேன். உனக்குப் பிடித்திருக்கிறதா!" என்றாள் சுவபாவமாக. "ம்......" என்றாள் ஹேமா பெருமூச்சு விடுவதுபோல.

இருவரும் கொஞ்ச நேரம் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். ஹேமாவின் அருவையைப் புரிந்து கொள்ளாத பத்மா சளசளவென்று பேசிக் கொண்டே போனாள். இவள் போய்த் தொலைய மாட்டாளா என்றிருந்தது அவளுக்கு.

கலகலப்பாகப் பேசும் ஹேமா இப்படி என்னவோபோல இருப்பது பத்மாவுக்கு சந்தேகத்தை உண்டாக்கியது. உடம்புக்கு ஏதாவது இருக்குமோ என்று, "ஏன் ஹேமா என்னமோபோல இருக்கிறாய்! உடம்பு கிடம்பு சரியா யில்லையா!" என்றாள் கனிவுடன். "சாயந்திரத்திலிருந்து தலை வலி மண்டையை உடைக்கிறது" என்று தட்டுத் தடுமாறிய வண்ணம் ஒரு பொய்யைச் சொன்னாள் ஹேமா. அப்பொழுது ஹேமாவின் கணவன் கோபாலன் வாசற்படி ஏறி வந்து கொண்டிருந்தான். அவன் உள்ளே நுழைந்ததும் பத்மா முகஜாடையால் ஹேமாவிடம் விடைபெற்றுக் கொண்டு சென்று விட்டாள்.

ஹேமாவுக்கு அவள் போனது நிம்மதியை அளித்தது என்றாலும் மனத்தை ஏதோ ஒன்று என்னவோ செய்தது. ஓய்ந்து போய் வந்திருக்கும் கணவனுக்குக் காப்பி கொடுக்க வேண்டும் என்ற உணர்வுகூட இல்லை. சமையலறையிலே கல்லாய்ச் சமைந்து உட்கார்ந்து விட்டாள். "என்ன ஹேமா! காப்பி கொண்டுவர நேரமாக வில்லையா!" என்ற அவனது குரலைக் கேட்டதும்தான் திடுக்கிட்டவளாய் எழுந்து காப்பியை எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்தாள்.

காப்பி அவனுக்கு விஷம்போலிருந்தது. சூடும் இல்லை. உரிய முறையில் கலக்கப்படவுமில்லை. "சட், காப்பியா இது! எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. பக்கத்து வீட்டு பத்மாவோடு பழகுகிறாயே! அவள் இப்படித்தான் இருக்கிறாளோ!" என்றான் எரிச்சலோடு.

ஹேமாவுக்கு ஆங்காரம் பொத்துக் கொண்டு வந்து விட்டது "ஆமாம்...... நான் இனிமே பத்மாகிட்டேதான் காபி போடக் கற்றுக்கொள்ள வேண்டும். ஊம்......நீங்கள் ஏன் சொல்ல மாட்டீர்கள்! எல்லாம் என் கஷ்ட காலம். உங்களுக்கு வாழ்க்கைப்பட்டு நான் என்ன சுகத்தைக் கண்டேன். ஒரு நல்ல புடவை உண்டா, நகை நட்டு உண்டா!" என்றாள் ஆக்ரோஷத்தோடு.

"ஆரம்பித்து விட்டாயல்லவா! சரி, எனக்கு இனிமேல் இங்கே வேலை யில்லை" என்று கோபத்தோடு கூறியவாறு துண்டை உதறி தோளில் போட்டுக்கொண்டு அவன் வெளியே சென்றான்.

ஹேமாவுக்கு அழுகை அழுகையாக வந்தது. அழுதாள். விசித்து விசித்து அழுதாள்.

*

ஹேமா கூறுவதுபோல அவளைக் கண் கலங்கும்படியான இடத்தில் ஒன்றும் அவள் பெற்றோர் கொடுத்துவிடவில்லை. ஹைஸ்கூல் ஒன்றில் உபாத்தியாயரா யிருந்த கோபாலனுக்கு என்னதான் குறைச்சல்! ஆனால், ஹேமாவுக்கு என்னவோ குறையாகத்தா னிருந்தது. அதுவும் கல்யாணம் ஆன புதிதில்கூட அவள் குறைப்பட்டதாகச் சொல்ல முடியாது. பத்மாவோடு பழக ஆரம்பித்தபி றகுதான் அவள் மனத்திலே குறைவு ஏற்படத் தொடங்கியது. கோபாலன் கண்ணுக்கு ராஜாமாதிரி இருந்தாலும், மாதம் இருநூறு ரூபாய்தானே சம்பாதிக்கிறான் என்று அவளுக்குக் குறை. பக்கத்து வீட்டுப் பத்மாவின் கணவன் ராகவனை ஒப்பிட்டுப் பார்த்ததால் ஏற்பட்ட விபரீதம் இது. இதனால் நாளடைவில் அவள் மனத்தில் இனம் தெரியாத ஒரு நிராசை, குறைவு மனப்பான்மை உண்டாகி அவளது இன்ப வாழ்வை விஷமாக்கியது.

கோபாலனுக்கு அந்த ஊரிலே நல்ல மதிப்பு. அவன் கள்ளம் கபட மில்லாதவன். கிடைக்கும் சம்பளத்தில் கௌரவமாகக் குடித்தனம் பண்ண வேண்டுமென்று கட்டும் செட்டுமாய் இருந்தான்.



நாடகத்தில் பின் ஸீட்டில் உட்கார்ந்திருப்பவர் :—ஸார்! இரண்டே கால் ரூபாய் செலவழித்து டிக்கெட் வாங்கி யிருக்கிறேன். உங்கள் தலைப்பாகை மறைக்கிறது. அதை எடுங்கோ, ஸார்!

முன் ஸீட்டுக்காரர் :—இரண்டே கால் ரூபாய் என்ன ஸார் பிரமாதம்! பத்தேகால் ரூபாய் போட்டுத் தலைப் பாகை வாங்கி எல்லோரும் பார்க்கணும்னு வைத்துக் கொண்டு வந்திருக்கிறேன் ஸார், தெரியுமா?



"உங்கள் தாத்தா யாரோடே பேசிக்கொண்டு இருக்கிறார்?"

"தனக்குத் தானேதான் பேசிக்கொண்டு இருக்கிறார்."

"அதற்கு ஏன் இரைந்து பேசிக்கொண்டு இருக்கிறார்?"

"அவர் காது செவிடு. அதற்குத்தான்."

"கோபமாகச் சண்டை போட்டு அல்லவா பேசுகிறார், ஏன்?"

"தனக்குள்ளேயே ஏதோ மனஸ்தாபம், அதனால்தான்!"

படித்த பெண் ஹேமா விஷயம் தெரிந்ததும் தன்னை "இது வாங்கித்தா, அது வாங்கித்தா" என்று நச்சரித்துப் பிடுங்கித் தின்பாள் என அவன் கனவில்கூட எண்ணியதில்லை. அதோடு விட்டால் கூடப் பரவாயில்லையே. பக்கத்து வீட்டுப் பத்மாவை அப்படியே காப்பியடிக்க வேண்டும் என்று ஒற்றைக்காலால் நின்றால் அதை அவனால் எப்படிப் பொறுக்க முடியும்! இதனால் விளைந்தது எப்போதும் வீட்டில் மனஸ்தாபம், ரகளை, தகராறு முதலியவைகள்தான்.

ஹேமா இப்படிப் பக்கத்து வீட்டுப் பத்மாவோடு போட்டி போட நினைப்பதை யாருமே நியாயமென்று ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அவள் புருஷன் ஒரு பாங்கில் ஏஜெண்டாயிருந்தான். மாதம் ஐநூறு ரூபாய் சம்பளம். கொஞ்சம் அகட விகடம் தெரிந்த பேர்வழி அவன். கோபாலனைப் போல் சாதுவல்ல. வாய் ஜாலமாகப் பேசுவான். அவன் அளப்பு பிரசித்தம். அதில் பெரும்பாலோர் மயங்கியதாலேயே வியாபகம் தனுனன்.

ஹேமா இதையெல்லாம் கண்டாளா! பத்மா விதம் விதமாக தினம் ஒருமாதிரி உடுத்துவதும், விதம் விதமான நகைகளைப் போட்டுக் கொள்வதும்தான் அவள் கண்ணில் பட்டன. தன் கணவன் இதைப் போலெல்லாம் வாங்கித் தந்து திருப்திப் படுத்தாது அவள் கசப்பை மேலும் அதிகமாக்கிக் கொண்டே வந்தது.

அன்றொரு நாள் மாலை. வாசல் பக்கம் ஏதோ கூட்டமாயிருந்தது. என்னவென்று பார்க்கப் போனாள் ஹேமா. என்ன விபரீதம்! அவளால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. பத்மாவின் கணவன் ராகவனை விலங்கிட்டு அழைத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தார்கள் போலீஸார். அழுது வீங்கிய முகத்தோடு அலங்கோலமாக நின்று கொண்டிருந்த பத்மாவைப் பார்க்க அவளுக்குப் பாவமாயிருந்தது. சிநேகிதியைச் சமாதானம் செய்ய வேண்டும் என்ற உணர்வு கூட இல்லை. என்ன தோன்றியதோ விர் என்று உள்ளே வந்து விட்டாள்.

ஊஞ்சலில் ஸ்மரணையற்று உட்கார்ந்திருந்த அவள் காதில் பக்கத்து வீட்டில் நான்கைந்து ஸ்திரீகளாக வம்பளந்து கொண்டிருந்தது கணீரென்று விழுந்தது. ராகவன் நிறைய லஞ்சம் வாங்கியதாயும் இன்னும் சில கேஸ்களில் மாட்டிக் கொண்டதாயும் அதனால்தான் அவனைக் கைது செய்து கொண்டு போகிறார்கள் என்றும் பேசிக் கொண்டார்கள். இதைக் கேட்டதும் பத்மா மீது பச்சாத்தாபம் உண்டாயிற்று அவளுக்கு. "பாவம், பத்மா!" என்றது அவள் வாய் அவளையுமறியாமல்.

வழக்கமாக ஆறு மணிக்கெல்லாம் வந்துவிடும் கோபாலன் அன்று ஆறரை ஆகியும் வராததால் அவளுக்குக் மிகவும் கவலையாயிருந்தது. இருப்பே கொள்ளவில்லை அவளுக்கு. வாசலுக்கும் உள்ளுக்குமாக நடந்து நடந்து கால்கள்கூட அசந்து போய்விட்டன. சோர்ந்து போய் உணர்ச்சியற்றவள்போல ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தாள்.

வாசற் கதவைத் தட்டிக்கொண்டே "ஹேமா! ஹேமா!" என்று அன்பு ததும்ப கோபாலன் கூப்பிடுவதைக் கேட்டதும், ஹேமா வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து போய்க் கதவைத் திறந்தாள். எப்போதும் இரண்டு நிமிஷம் நிற்க வைக்கும் அவள், இன்று க்ஷண நேரம் கூடக் காக்க வைக்காமல் கதவைத் திறந்தது அவனுக்கே ஆச்சரியமாகத்தானிருந்தது. கதவைத் தாளிட்டு விட்டு வந்த ஹேமாவிடம், "சமாசாரம் தெரியுமா ஹேமா...பாவம் பத்மா ரொம்ப வருத்தப் படுவாள்" என்றான் கோபாலன் ஷர்ட்டைக் கழற்றிக் கொண்டே. ஹேமாவால் பேச முடியவில்லை. தொண்டை அப்படிக் கம்மிப் போய் விட்டது.

ஷர்ட்டைக் கழற்றி விட்டுப் பார்த்த கோபாலனுக்கு, பேசாமல் பதுமை போல நிற்கும் ஹேமாவின் தோற்றம் கவலையை உண்டாக்கியது. "ஏன் ஹேமா என்னமோ போல இருக்கிறாய்!" என்றான் பதட்டத்துடன்.

அவள் பதில் ஒன்றும் சொல்லவில்லை. சொல்ல முடியவில்லை. அவனை உற்றுப் பார்த்தாள். 'இப்படிப் பேத்து மாத்துப் பண்ணியிருந்தால் உன் ஆசைகளைக்கூட நான் திருப்தி செய்திருக்கலாம்' என்று கூறுவதுபோலிருந்தது அவளுக்குக் கோபாலனின் பார்வை. அவளால் பொறுக்க முடியவில்லை. அவன் காலைக் கட்டிக் கொண்டு, "இந்த சிவப்புத் தோலும், நூல் புடவையும் சிரஞ்சீவியாகக் கிடைத்து, நீங்களும் இப்படி எப்போதும் என் பக்கத்திலே இருந்தாலே போதும்!" என்று தழுதழுத்த குரலில் கூறி விம்மினாள்.

"அசடாக இருக்கிறாயே எழுந்திரு" என்று செல்லமாகக் கடிந்து கொண்டே அவளைத் தூக்கினான் அவன். அவள் கண்கள் கண்ணீரைப் பெருக்கின. அது இது வரையில் அவளிடமிருந்த அறியாமையைப் போக்கி விட்டதை எடுத்துக் காட்டுவதுபோலிருந்தது.


ஸிரோலின் 'ரோஷ்'
உட்கொண்டு
இருமல்களை நிறுத்துங்கள்
.... அபாயமின்றி உட்கொள்ளக்
கூடிய குடும்ப ஔஷதம்!
ஸிரோலின் 'ரோஷ்' தொண்டை நோவுகளை
ஆசுவாசப்படுத்துவது தவிர, மிகக் கடுமையான
இருமல்களையும் வேகம் நிறுத்துகின்றது. குழந்
தைகள் அதை மிகவும் விரும்புகின்றனர்.
அபாயமின்றி உட்கொள்ளக்கூடியதுதான்—
டோஸ் சற்று அதிகமானாலும் யாதொரு கெடு
தியும் செய்யாது. வீட்டில் எப்பொழுதும் ஒரு
பாட்டில் கையோடு காவலாய் வைத்திருங்கள்.
எல்லா கெமிஸ்டுகளிடமும் முக்கிய
ஸ்டோர்களிலும் கிடைக்கும்.
ஸிரோலின்
'ரோஷ்'
SIROLIN
ROCHE
ரோஷ்
தயாரிப்பு



டாக்டர்கள் இந்த அற்புதமான
பெப்ஸை சிபார்சு செய்கிறார்கள்

PEPS

இருமல், ஜலதோஷம், குளிர், தொண்டைப்புண், இன்புளுயன்ஸா சளி ஜுரம், மார்வலி, சுவாச கோசநோய்கள் முதலியவற்றிற்கு உகந்தது. இருமுவதால் உங்கள் இருதயமும் சுவாச கோசங்களும் பாதிக்கப்படுகின்றன. பெப்ஸ் மாத்திரைகள் இருமலைப் போக்கி விரைவில் குணம் தரும். பெப்ஸ் மென்று உட்கொள்ளும்போது மணம் வாய்ந்த மருந்துச் சத்துக்கள் தொண்டையிலிருந்து சுவாசக் குழாய்கள் வழியாக சுவாச கோசங்களுக்குச் செல்லுகின்றன. தொண்டைக்கும் இருதயத்திற்கும் இத மளிக்கிறது பெப்ஸ். அது அபாயகரமான கிருமிகளை நாசம் செய்கிறது. சளியினால் ஏற்படும் தொல்லைகளுக்கு பெப்ஸ் சிறந்த நிவாரணி. பெப்ஸ் இதமும் பலமும் தருகிறது. பெப்ஸ் அற்புதமான மருந்து.

பெப்ஸ், தொண்டைப்புண், மார்வலி நோய் நிவாரண மாத்திரைகள் PPT:4
ஏஜண்டுகள்: மெஸர்ஸ். தாதா & கம்பெனி, பி. டி., மதராஸ்

B. I. S. N. கம்பெனி லிமிடெட்

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்

S. S. "ரஜுலா"

சென்னை புறப்படும் தேதி — 1952 பிப்ரவரி 12உ
நாகப்பட்டினம் புறப்படும் தேதி — 1952 பிப்ரவரி 13உ

கப்பல் புறப்படும் தேதி காலை 6 மணிக்கு மேல் சாமான்கள் ஏற்றப்படமாட்டா.

கப்பலேறுவதற்கான ஏற்பாடுகள்:

சென்னையிலிருந்து 12-2-52: *பெர்த் வசதியற்ற பிரயாணிகள் காலை 10 மணிக்கும் ஊஜுரன் பிரயாணிகள் வைத்திய பரிசோதனைக்கும், கப்பலில் ஏறுவதற்கும் பகல் 12 மணி முதல் பகல் 1 மணிக்கு மேற்படாமல் வந்துவிட வேண்டும்.*

நாகப்பட்டினத்திலிருந்து 13-2-52: *பெர்த் வசதியற்ற டிக்கட்டுள்ளோர் காலை 6 மணிக்கும் ஊஜுரன் டிக்கெட் உள்ளவர்கள் 8 மணிக்கும் கப்பலேறலாம்.*

சென்னையில் ஏறும் பிரயாணிகள் 12-2-52 பகல் 1 மணிக்கு மேல் வந்தால் வைத்ய பரிசோதனைக்கு தாமதமாகிவிடும். ஆகையால் அவர்கள் கப்பலேற முடியாது.

பினாங்கு, சிங்கப்பூர் துறைமுக சுகாதார விதிகளை அனுசரிக்க வேண்டி விரும்பிய தால் எல்லா பிரயாணிகளும் சர்வதேச சுகாதார விதிகளின்படி அமைந்த பாரத்தில் அம்மை குத்தியதற்கான சர்டிபிகேட்டும், காலரா எதிர்ப்பு இனாகுலேஷன் செய்ததற் கான சர்டிபிகேட்டும் பெற்று, ஒரு சர்க்கார் அல்லது முனிசிபல் ஹெல்த் ஆபீஸரின் அத்தாட்சியுடன் செல்லுபடியாகக் கூடிய நிலையில் கொண்டுவர வேண்டும்.

பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட் 7, அரமனைக்காரத் தெரு, மதராஸ்	மதுரா கம்பெனி லிமிடெட் முதல் லைன் பீச்ரோடு, நாகப்பட்டினம்

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras


வெண்மையாக
சலவை செய்யப் பட்டுள்ளன
பிரகாசமாக
சலவை செய்யப் பட்டுள்ளன
ஸன்லைட் சோப்பில்
தான்
SUNLIGHT SOAP
துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

REGD. No. M. 4392

Registered as a newspaper in Ceylon

"லக்ஸ் டாயலட் சோப்

என்
சருமத்திற்கு
விசேஷ
நன்மையளி-
க்கிறது"

என்று சொல்கிறார்

பி.எஸ்.ஸரோஜா

